DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan, Sales Representative, kailain.thillai@gmail.com
Ragu Thillainathan, Sales Representative, homesbyraghu@gmail.com

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
Raj Perampalam
Broker
என்னை அழையுங்கள்
Direct: 416-897-9155
Office: 905-201-9977

PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran
Tax Consultant
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

IMMIGRATION MATTERS?
OUR SERVICE ARE:
Immigration and Refugee
Landlord and Tenants
Small Claims Matters
Provincial Offences
416-334-9464

Residential & Commercial Real Estate Services
Bala Logendralingam
Realtor
Cell: 647-447-1562
RE/MAX COMMUNITY

27ம் ஆண்டில்...
27 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
திக்திக்கும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1472
CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM
Friday June 21, 2024

# "இலங்கை கடல் எல்லைக்குள் நுழைவது தவிர்க்க முடியாது" என்கிறார் தமிழக மீனவர் சங்கத் தலைவர்



தமிழ் நாட்டில் 60 நாட்கள் மீன்பிடித் தடைக்காலம் முடிவடைந்து அவர்கள் மீண்டும் தொழிலுக்காக கடலுக்குள் செல்லும் நிலையில், இலங்கை மீனவர்கள் தமது வளங்களும் வாழ்வாதாரமும் பாதிக்கப்படக் கூடும் என அச்சம் வெளியிட்டுள்ளனர்.

வெளிநாட்டு மீனவர்கள் தமது கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து கடல் வளங்களை சூறையாடுவதால், தமது வாழ்வாதாரம் மிகவும் பாதிக்கப்படுவதாக வட மாகாண மீனவர்கள் தொடர்ச்சியாக கூறி வருகின்றனர்.

இந்நிலையில் தமிழ்நாட்டு மீனவர்கள் இலங்கை கடற்பரப்பில் நுழைவது தவிர்க்க இயலாது என தமிழகத்தின் இராமேஸ்வரத்தைச் சேர்ந்த மீனவர் தலைவர் ஒருவர் கூறுகியுள்ளமையானது, வட மாகாண மீனவர்களை மேலும் அச்சத்திற்கு உள்ளாக்கியுள்ளது.

இலங்கை மீனவர்களின் வாழ்வாதாரத்தை ஒரு போதும் பாதிக்கும் நோக்கம் தமிழக மீனவர்களுக்கு கிடையாது எனவும், அவர்களின் பிரச்சனைகளை தாங்கள் உணர்ந்து சகோதர மனப்பான்மையுடனேயே செயல்படுவதாகவும் இராமேஸ்வரத்தில் உள்ள அனைத்து இயந்திர மயமாக்கப்பட்ட படகு உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் பி. ஜேசுராஜா கூறுகிறார்.

இந்திய மீனவர்கள் எல்லை தாண்டி மீன்பிடிப்பதை தடுக்க வேண்டுமென, வடக்கு மாகாண மீனவர்கள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கு கடிதம் ஒன்றை எழுதியுள்ள நிலையில் தமிழக மீனவர்களின் கருத்து வெளியாகியுள்ளது.

வட மாகாணத்தின் முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய நான்கு மாவட்டங்களின் மீனவ கூட்டுறவு சமாசங்களின் தலைவர்கள், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு எழுதியுள்ள கடிதத்தில், "உறுதியாகவும் இறுதியாகவும் இந்திய மீனவர்களின் சட்டவிரோத நுழைவு மற்றும் மீன்பிடியை தடுக்க வேண்டும்" என கூறியுள்ளனர்.

(தொடர்ச்சி 3ம் பக்கம்)

# ஸ்காபுறோ ஆதிபராசக்தி குருமன்றத்தின் 30வது ஆண்டு நிறைவு விழா ஞாயிற்றுக்கிழமை நடைபெறுகின்றது




ஸ்காபுறோவில் முதன்முதலில் ஆரம்பிக்கப்பெற்ற ஆதிபராசக்தி வழிபாட்டு மன்றம் என்ற நற்பெயரோடு 30வது ஆண்டு நிறைவு செய்துள்ள ஆதிபராசக்தி குருமன்றத்தின் 30 ஆண்டுகள் பூர்த்தி விழா எதிர்வரும் 23ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறுகின்றது.

ஸ்காபுறோவில் 1120 **Tapscott Road,** என்னும் விலாசத்தில் அமைந்துள்ள ஒன்றாரியோ தமிழிசைக் கலாமன்றத்தில் நடைபெறவுள்ள பிற்பகல் 2.00 தொடக்கம் மாலை 7.00 மணி வரை நடைபெறவுள்ள இந்த விழாவில் சிறப்புரைகள் மற்றும் ஆன்மீக சொற்பொழிவு மற்றும் கலை நிகழ்ச்சிகள் ஆகியன இடம்பெறவுள்ளன.

(மேலதிக விபரங்களுக்கு 12ம் பக்கம் உள்ள விளம்பரத்தைப் பார்க்கவும்)

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East, Mississauga, ON, L5A 1W7
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-272-1222
905-794-4404
online service: www.remitbee.com

இவ்விடத்தில்
விளம்பரம் செய்ய எம்மை அழையுங்கள்
416-752-1524

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301, 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8


LATIKA PRODUCTIONS
ISAI Aruvi
2024
CANADA EVENT CENTER Whitby
JUNE 28
5 - 11 PM
FOR TICKETS CALL
647-996-5922
905-201-6000
● HARINI ● TIPPU ● KPY BALA ● ARAVIND K ● VARSHA
● VITHUSAYNI ● AJEESH ● THAMIRAA ● PRIYANTHY
POWERED BY Latika Gold House

Canada
We acknowledge the financial support of the Government of Canada

உதயன் கதிரோட்டம்

# காசாவில் தொடர்ச்சியாக அப்பாவிகளான வளர்ந்தவர்களையும் குழந்தைகளையும் கொன்று குவிக்கும் இஸ்ரேலியப் ‘பேய்கள்’

இலங்கையில் இஸ்லாமிய மக்கள் காசா மீதான தாக்குதல்களுக்கு எதிராகப் போராட்ட்ங்களை நடத்திவருகின்றார்கள். மேற்படிப் போராட்டங்களுக்கு ஆதரவாக, இடதுசாரி அமைப்புக்களும் இஸ்லாமிய மக்களுக்கு ஆதரவாக குரல் கொடுத்து வருகின்றார்கள்.

கனடாவிலும் பல மாகாணங்களில் காசாவில் படுகொலைகளை தொடர்ச்சியாக நடத்தி வரும் இஸ்ரேலிய இராணுவப் பேய்களுக்கு எதிராக போராட்டங்களை நடத்தி அவற்றின் மூலம், காசாவின் மக்களுக்காகவும் குழந்தைகளுக்காகவும் கண்ணீர் வடித்து வருகின்றனர். ஆனால் தங்கள் அரசியல் இலாபம் கருதி சில இஸ்லாமிய நாடுகளும் மௌனம் காத்து வருகின்றன.

காசாவிற்குள் புகுந்து வெறியாட்டம் ஆடும் இஸ்ரேலியப் படை(பேய்)களை எதிர்த்து பலஸ்தீன போராளிகளும் தாக்குதல்களை நடத்துவதால் மோதல்கள் இடம்பெற்றதோடு இஸ்ரேலின் சரமாரித் தாக்குதல்களும் நீடித்தன என அறியப்படுகின்றது

பல நாடுகளின் வேண்டுகோளுக்கு இணங்கி இஸ்ரேலிய போர் விமானங்கள் முன்னர் ‘மனிதாபிமான வலயம்’ ஒன்றாக அறிவித்திருந்த ரபாவின் அல் மவாசி பகுதியில் உள்ள தற்காலிக கூடாரங்கள் மீது நடத்திய தாக்குதலில் ஏழு பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டதாகவும் அவற்றில் குழந்தைகளும் அடங்கலாம் என்றும் அறியப்படுகின்றது. இவ்வாறு இஸ்ரேலியப் பேய்கள் ஈவிரக்கமின்று தாண்டவமாடுகின்ற என்ற செய்திகளே அங்கிருந்து கிட்டிய வண்ணம் உள்ளன. சில நாட்களுக்கு முன்னர் இடம்பெற்ற இஸ்ரேலியர்களின் தாக்குதலை அடுத்து பாலஸ்த்தீனியர்கள் தங்கியிருந்த தற்காலிகக் கூடாரங்கள் தீப்பற்றி எரிந்ததாக பலஸ்தீன செய்தி நிறுவனமான வபா அறிவித்துள்ளதை அமெரிக்கா மற்றும் கனடிய தேசிய ஊடகங்கள் பகிரங்கமாக தங்கள் ஊடகங்களில் காண்பித்தன. ஆனாலும் இஸ்ரேலியப்படைகள் அடங்குவதாக இல்லை

இதில் உறங்கிக் கொண்டிருந்தவர்களே கொல்லப்பட்டதாக அந்த முகாமில் இருந்த பாத்திமா அல் கிக் என்ற வயது முதிர்ந்த பெண் ஒருவர் குறிப்பிட்டுள்ளார். ‘பாதுகாப்பான இடம் என்று கருதப்பட்ட பகுதியிலே இஸ்ரேல் எம் மீது செல் குண்டுகளை வீசியது. இங்கு சிறுவர்கள் உறங்கிக்கொண்டிருந்தார்கள்’ என்று அந்தப் பெண் கூறியதாக மற்றொரு செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது

தவிர தெற்கு காசாவின் கான் யூனிஸ் மற்றும் மத்திய காசாவில் நுஸைரத் அகதி முகாம் மீது இஸ்ரேலியப் படை குண்டு வீசியதாக வபா குறிப்பிட்டது. காசா நகரின் வீடு ஒன்றின் மீது நடத்திய தாக்குதலில் பெண்கள் மற்றும் சிறுவர்கள் உட்பட ஆறு பேர் கொல்லப்பட்டதாக அல் ஜசீரா குறிப்பிட்டது. காசாவில் கடந்த 24 மணி நேரத்தில் இஸ்ரேல் இராணுவம் நடத்திய தாக்குதல்களில் 24 பேர் கொல்லப்பட்டு மேலும் 71 பேர் காயமடைந்திருப்பதாக பலஸ்தீன சுகாதார அமைச்சு நேற்று தெரிவித்தது. மீட்பாளர்களால் அடைய முடியாத பகுதிகளில் பாதிக்கப்பட்ட கணிசமானவர்கள் தொடர்ந்து இடிபாடுகளில் சிக்கி இருப்பதாகவும் அது சுட்டிக்காட்டியது. இவ்வாறாக இரக்கமின்றி நடத்தப்படும் இஸ்ரேலியர்களின் தாக்குதல்கள் காசாவையும் பலஸ்தீனத்தையும் அழித்த வண்ணமே உள்ளன என்பதையும் அறியக் கூடிடயதாக உள்ளது

கடந்த எட்டு மாதங்களுக்கு மேலாக காசாவில் இஸ்ரேல் நடத்தும் தாக்குதல்களில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 37,396 ஆக அதிகரித்திருப்பதோடு மேலும் 85,523 பேர் காயமடைந்துள்ளனர். கிழக்கு ரபாவின் முக்கிய வீதி ஒன்றில் தினசரி மனிதாபிமான சண்டை நிறுத்தம் ஒன்றை இஸ்ரேல் இராணுவ அறிவித்தபோதும், இந்த சண்டை நிறுத்தம் மக்களுக்குத் தேவையான உதவிகள் அடையும் வகையில் அமையவில்லை என்று ஐ.நா. பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

இதே வேளை காசாவில் உணவு, நீர், மருந்துக்கு தட்டுப்பாட்டு நிலவி வரும் சூழலில் அங்கு பஞ்சம் ஒன்று நெருங்கி வருவதாக ஐ.நா தொடர்ந்து எச்சரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. யார் எதைக் கூறினாலும் இஸ்ரேலியப் பிரதமரும் தனது கொலைக் கரங்களை நீட்டிய வண்ணமே உள்ளதால் தொடர்ந்து காசாவில் குழந்தைகளும் அந்த தேசத்தின் மக்களும் இரத்த வெள்ளத்தில் மூழ்கிப் போகும் நாளுக்காகவே

இஸ்ரேலியப் பேய்கள் காத்திருக்கின்றன என்றே நாம் கூறுவேண்டும்.!

**For All your Renovation Needs!**

- Drywall Installation
- Painting
- Hardwood Installation
- Bathroom Reno
- Kitchen Reno

Call - Siva

416-706-8160

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் — உதயன் — Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON M1C 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

# "இலங்கை கடல் எல்லைக்குள் நுழைவது தவிர்க்க முடியாது" என்கிறார் தமிழக மீனவர் சங்கத் தலைவர்

(முன் பக்கத் தொடச்சி)

நாட்டின் கடற்படையும், கடற்தொழில் அமைச்சும் இந்தியப் படகுகளின் சட்டவிரோத மீன்பிடியை தடுக்க உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டுமென அந்தக் கடித்தில் கோரப்பட்டுள்ளது.

“எதிர்வரும் 15.06.2024 ஆம் திகதி அன்று எமது இலங்கை கடற்பரப்புக்குள் தமிழக மீனவர்கள் எல்லை தாண்டி வந்து சட்டவிரோதமாக மீன்பிடி முறையான இழுவை மடிகளை கொண்டு மீன்பிடிப்பதற்கு ஆயத்தமாகின்றனர். இவ்வாறு எல்லை தாண்டி மீன் பிடிக்கும் நடவடிக்கையில் ஈடுபட தயாராகும் மீனவர்களை தடுத்து நிறுத்தி வடக்கு மீனவர்கள் சுதந்திரமாக மீன்பிடி தொழிலை மேற்கொள்வதற்கு ஏற்ற சூழலை ஏற்படுத்தித் தருமாறு கோருகிறோம்”.

மேலும் அவர்கள் தமது கடிதத்தில், ஆயிரக்கணக்கான தமிழ் நாட்டு இழுவைப் படகுகள் திங்கள், புதன் மற்றும் சனிக்கிழமை மாலை வேளைகளில் தமது கடற்பரப்பில் நுழையாமல் இருப்பதை இலங்கை கடற்படையினரும் கடற்தொழில் அமைச்சும் உறுதிப்படுத்த வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளனர்.

தமிழ் மீனவர்கள் சட்டவிரோதமாக தமது எல்லைக்குட்பட்ட கடல் பிரதேசத்தில் நுழைந்து தமது வளங்களை சூறையாடி வாழ்வாதாரத்தை சிதைப்பதாக, போரினால் பாதிக்கப்பட்ட வட மாகாண தமிழ் மீனவர்கள் தொடர்ச்சியாக குற்றஞ்சாட்டுகின்றனர்.

உள்நாட்டு யுத்தம் ரத்தக்களறியுடன் கொடூரமாக முடிவடைந்து 15 வருடங்கள் ஆன பிறகும், தமிழ்நாட்டு மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடி காரணமாக வடபகுதி மீனவர்களால் தமது வாழ்வாதாரத்தை ஸ்திரப்படுத்திக்கொள்ள முடியவில்லை.

ஆனால், எந்த நேரத்திலும் எக்காலத்திலும் இலங்கையின் வட பகுதி மீனவர்களின் வாழ்வாதாரத்தை சிதைக்கும் எண்ணம் தமிழ் நாடு மீனவர்களுக்கு இருந்ததில்லை என்கிறார் ஜேசுராஜா.

“இலங்கை கடற்பரப்பில் தமிழ்நாட்டு மீனவர்கள் நுழைவது திட்டமிட்ட ஒன்றல்ல என்றாலும் அதை தவிர்க்க முடியாமல் உள்ளது. இரு நாடுகளுக்கும் இடையேயான கடற்பரப்பு மிகவும் குறுகியது.

கடற்காற்று காரணமாக படகுகள் அவர்கள் கடற்பரப்பிற்குள் செல்லக் கூடும். அதுமட்டுமல்ல பல சமயங்களில் திசைக்காட்டும் கருவி ஜி பி எஸ் செயலிழந்துவிடும். இப்படியான காரணங்களா தான் நாங்கள் அறியாமல் அவர்கள் கடற்பரப்பில் நுழைந்துவிடுகிறோம். வட பகுதி மீனவர்கள் மீது எமக்கு பரிவு உண்டு. அந்த சகோதர மீனவர்களுக்கு எங்கள் ஆதரவும் உண்டு. இலங்கை தமிழ் மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட தமிழ்நாட்டு மீனவர்கள் ஒரு காரணமாக இருக்கமாட்டோம். அந்த மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளின் பின்னணியில் அரசியல் இருக்கிறது”.

ஆனால், இந்த கருத்தை கேட்க தாங்கள் தயாராக இல்லை என இலங்கை தமிழ் மீனவர்கள் தெரிவிக்கின்றனர். மேலும் தமது கடற்படையும் அரச அமைப்புகளும் வெளிநாட்டு மீன்பிடி படகுகள் தமது கடற்பரப்பில் நுழையாமல் இருப்பதை தீவிரமாக கண்காணிக்க வேண்டும் என அவர்கள் கோருகிறார்கள்.

”அவர்கள் எண்ணம் மிகவும் தெளிவாக உள்ளது. சட்டவிரோதமாக எமது கடற்பரப்பில் நுழைந்து எமது கடல் வளங்களை சுரண்டி தம்மை வளப்படுத்திகொண்டு எங்களை தவிக்கவிடுவது” என்கிறார் மன்னார் மாவட்ட மீனவர்கள் தலைவர்களில் ஒருவரான மொஹமட் ஆலம்.

“இது எமக்கு வாழ்வா சாவா என்கிற பிரச்சினையாகும். தமிழ் நாடு மீனவர்களின் சட்டவிரோத மீன்பிடியை தடுக்காதவரை எமக்கு எதிர்காலம் இல்லை” என வடக்கு மாகாண மீனவர் ஒற்றுமை அமைப்பின் தலைவர் என்.வி. சுப்பிரமணியன் தெரிவிக்கின்றார்.

அதேவேளை, பாக்குநீரணையின் இருபக்கமும் இருக்கும் மீனவர்களின் பிரச்சினைகளை அரசியல் தலையீடின்றி நேரடியாகப் பேசித் தீர்க்க முடியும் என்கிறார் ஜேசுராஜா. மேலும் தமது மீனவர்களே இதனால் அதிகம் பாதிக்கப்படுவதாகவும் அவர் வலியுறுத்துகிறார்.

“மீன்களுடன் எமது படகுகள் பிடிக்கப்படுகின்றன. அந்தப் படகுகள் பெருமதியானவை. அவை கடன் மூலம் பெறப்பட்டவை. எமது படகுகளை கைப்பற்றப்பட்டாலும் நாங்கள் தவணை கட்டியே ஆக வேண்டும். இல்லையென்றால் அது பறிமுதல் செய்யப்படும் என்ற அச்சம் உள்ளது. ஆகவே படகும் இல்லை தொழிலும் இல்லை என்றால் எமது கடன்களையும் மீளச் செலுத்த முடியாது. எமது குடும்பங்களையும் காப்பாற்ற முடியாது. இவை மட்டுமின்றி கைது செய்யப்பட்ட எமது மீனவர்களை விடுவிக்கவும், படகுகளை மீட்கவும் நாங்கள் இலங்கை பயணிக்க வேண்டும். அதற்கும் செலவு செய்ய வேண்டும்.”

அவர்கள் தமது கடற்பரப்பிற்கும் வராவிட்டல் அவர்கள் எவ்வித பிரச்சினையையும் எதிர்கொள்ள வேண்டிய அவசியம் இருக்காது என்கிறார் மொஹமட் ஆலம். சர்வதேச கடற்பரப்பை தாண்டுவது என்பது சட்டவிரோதமானது என்பது தெரிந்தும், அவர்களை கைது செய்து படகுகளை கைப்பற்றும் எமது கடற்படையினர் மீது குறைகூறுகின்றனர்”.

ஜனாதிபதிக்கு கடந்த 11ஆம் திகதியே கடிதம் எழுதியிருந்தாலும், இலங்கை கடற்பரப்பிற்குள் இந்திய மீனவர்கள் நுழைவதை தடுக்க எடுக்கப்படும் நடவடிக்கை குறித்து வட மாகாண மீனவர்களுக்கு எந்த பதிலும் இதுவரை கிடைக்கவில்லை. வட பகுதி கடற்பரப்பில் நுழையும் இந்திய மீனவர்களின் சட்டவிரோத நுழைவை தடுக்க முடியவில்லை என்பதை ஏற்றுக்கொள்ளும் இலங்கை கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பிரியந்த பெரேரா, நூற்றுக்கணக்கான இந்திய இழுவைமடி படகுகளை பறிமுதல் செய்வது “அரசியல் பிரச்சினைகள்” ஏற்பட அது வழிவகுக்கும் என அவர் முன்னர் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சர்வதேச யோகா தினத்தையொட்டி "பெண்கள் வலுவூட்டல்களுக்கான யோகா" எனும் கருப்பொருளில் இடம்பெற்ற சர்வதேச யோகா தின நிகழ்வு

இலங்கை செய்திகள் Sri Lanka News

மன்னார் நிருபர்

- எஸ்.ஆர்.லெம்பேட் (19-06-2024)





சர்வதேச யோகா தினத்தையொட்டி 19-06-2024 அன்று “பெண்கள் வலுவூட்டல் களுக்கான யோகா” எனும் கருப்பொருளில் மன்னார் நானாட்டான் டிலாசால் கல்லூரியில் சர்வதேச யோகா தின நிகழ்வுகள் இடம் பெற்றது.

டிலாசால் கல்லூரி மைதானத்தில் அன்றைய தினம் மிகவும் சிறப்பாக நடைபெற்ற குறித்த யோகா நிகழ்வில் இலங்கைக்கான இந்திய துணை தூதுவர் சாய் முரளி பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.

மேலும் யாழ் இந்திய துணைத் தூதரக அதிகாரி நாகராஜன், நானாட்டான் டிலாசால் கல்லூரியின் முதல்வர் அருட்சகோதரர் மனோ, நானாட்டான் பிரதேச செயலாளர் திருமதி. கனகாம்பிகை சிவசம்பு ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

இடம் பெற்ற யோகா நிகழ்வில் பாடசாலையின் மாணவ மாணவிகள் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

மேலும் நானாட்டான் சிவராஜா இந்து பாடசாலைக்கு இலங்கைக்கான இந்திய துணை தூதுவர் சாய் முரளி கண்காணிப்பு விஜயம் ஒன்றை மேற்கொண்டமையும் குறிப்பிடத்தக்கது.

# மன்னார் கறிற்றாஸ் வாழ்வுதயத்தினால் தெரிவு செய்யப்பட்ட 60 பயணாளிகளுக்கு நீண்ட கால பயிர்கள் வழங்கி வைப்பு

- எஸ்.றொசேரியன் லெம்பேட் (19-06-2024)

“நீண்ட கால பயிர் உற்பத்தி ஊடாக வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல்” எனும் திட்டத்தின் கீழ் மன்னார் கறிற்றாஸ் வாழ்வுதயம் மன்னார் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட கிராமங்களில் 60 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு, அவர்களுக்கு தேவையான மா, தென்னை,மற்றும் பப்பாசி உள்ளடங்களாக நீண்ட கால பயிர்கள் வழங்கப்பட்டு வருகிறது.

மன்னார் மாவட்டத்தில் பேசாலை, வேப்பங்குளம் மற்றும் கரம்பைக்குளம் ஆகிய 3 கிராமங்களில் இருந்து 60 பயனாளிகள் இவ்வாறு தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு குறித்த நீண்ட கால பயிர்கள் வழங்கப்பட்டு வருகின்றது.

18-06-2024 செவ்வாய்க்கிழமை மாலை நீண்ட கால பயிர்கள் வழங்கும் நிகழ்வு கரம்பை குளம் கிராமத்தில் இடம் பெற்றது.



கறிற்றாஸ் வாழ்வுதய இயக்குனர் அருட்தந்தை அருள்ராஜ் குரூஸ் தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் விருந்தினராக மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை கிறிஸ்து நாயகம் அடிகளார் கலந்து கொண்டார்.

மேலும் தேசிய நிலையத்தில் இருந்து திட்டத்தின் பொறுப்பாளர்களான சோபா, மற்றும் பிரசாந்த் ஆகியோர் கலந்து கொண்டதோடு, முருங்கன் மெதடிஸ்த போதகரும் கலந்து கொண்டு சிறப்பித்தார்.





இதன் போது தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு நீண்ட கால பயிர்கள் வழங்கி வைகப்பட்டதோடு, விருந்தினர்களினால் நடுகை செய்யப்பட்டது.

இத்திட்டமானது ஜேர்மன் நாட்டில் உள்ள மிசிரியோ நிறுவனத்தின் நிதியுதவியுடன் கொழும்பு தேசிய நிலையத்தின் ஊடாக மன்னார் கறிற்றாஸ் வாழ்வுதயம் இத்திட்டத்தை மன்னார் மாவட்டத்தில் அமுல் படுத்தியமையும் குறிப்பிடத்தக்கது.



# இந்திய அரசாங்கத்தினால் ஹஜ் பொருநாளை முன்னிட்டு உலர்உணவுப் பொருட்கள் வழங்கி வைப்பு

- எஸ்.ஆர்.லெம்பேட்

இலங்கை - இந்திய நல்லுறவை மேம்படுத்தும் வகையில் ஹஜ் பொருநாளை முன்னிட்டு மன்னார், மற்றும் முசலி பிரதேச செயலக் பிரிவை சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு 17-06-2024 அன்று உலர் உணவுப் பொருதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

மன்னார் அல் - அஸ்ஹர் தேசிய பாடசாலையில் வைத்து 78 குடும்பங்களுக்கும்,முசலி தேசிய பாடசாலையில் வைத்து 80 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

இந்திய துணைத்தூதரகத்தின் ஏற்பாட்டில் இலங்கைக்கான இந்திய துணை தூதுவர் சாய்முரளி தலைமையில் குறித்த உலர் உணவு பொருட்கள் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

இவ் நிகழ்வில் இந்திய தூதரக அதிகாரிகள், பாடசாலை அதிபர்கள் மற்றும் பலர் கலந்து கொன்டிருந்தனர்.

இதன் போது தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு பத்தாயிரம் பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் மேற்படி வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.






# ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் மன்னார் விஜயத்தால் மக்களுக்கு எவ்வித பயனும் இல்லை. காற்றாலை மின் உற்பத்தி மற்றும் கனிய மணல் அகழ்வு குறித்து எவ்வித உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை

## தமிழ் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரன்



- எஸ்.ஆர்.லெம்பேட்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் மன்னார் விஜயத்தால் மக்களுக்கு எவ்வித பயனும் இல்லை. காற்றாலை மின் உற்பத்தி மற்றும் கனிய மண் அகழ்வு குறித்து எவ்வித உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை. அரசியல் நலன் சார்ந்தே குறித்த விஜயம் அமைந்துள்ளது என தமிழ் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரன் தெரிவித்தார்.

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் 20-06-2024 அன்று வியாழன் மதியம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இந்திய பிரதமரின் இலங்கை வருகையை ஒட்டி தனது அரசியல் இருப்பை நிலை நிறுத்திக் கொள்ளும் விவகாரத்திற்காக மன்னாரிற்கான விஜயத்தை மேற்கொண்டுள்ளார்.

காற்றாலை உற்பத்தியை இந்தியாவிற்கு வழங்குகின்ற விவகாரம் தொடர்பாகவும் தலைமன்னாரில் இருந்து இராமேஸ்வரத்திற்கான தரை வழி பாதை அமைப்பது சம்மந்தமாகவும் உரையாடிச் சென்றுள்ளார்.

அவருடைய வருகை அரசியல் ரீதியாக நிறைவேறி இருந்தாலும் மன்னார் மக்களுக்கு எவ்வித பலனும் கிடைத்ததாக தெரியவில்லை.

இங்குள்ள காணி விடுவிப்பு குறித்து எந்தவித முயற்சிகளும் எடுக்கப்படவில்லை.

கலந்து கொண்டிருந்த வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட இவ்விடயத்தை வலிமையாக வலியுறுத்தவும் இல்லை. அவர்களும் ஆளும் கட்சி போல் ஜனாதிபதியின் நிகழ்வில் ஆசுவாசமாக கலந்து கொண்டு சென்றுள்ளனர்.

மன்னாரில் இனி புதிதாக குடியேறுவதற்கு எவ்வித காணியும் இல்லை.

வன இலாகா மற்றும் பறவைகள் சரணாலயம் என்ற போர்வையில் காடுகளை பாதுகாத்தல் ,விலங்குகளை பாதுகாத்தல், கரையோரத்தை பாதுகாத்தல் என்ற போர்வையில் சகல இடங்களையும் வர்த்த மணிக்கு உட்படுத்தப்பட்டு, மன்னாரில் மக்கள் குடியேறாத வகையில் ஒரு துண்டு நிலம் இல்லாத நிலையில் உத்தரவாதத்தை அரசு மீறி விட்டது.என தெரிவித்தார்.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# யாழ்ப்பாணத்தில் வடக்கு மாகாண ஊடகவியலாளர்கள் இணைந்து ஊடக சுதந்திரத்தை வலியுறுத்தி போராட்டம்

- ஜெகதீஸ்வரன் பிரஷாந்த்

யாழ்ப்பாணம் மாவட்ட பிராந்திய ஊடகவியலாளர் தம்பித்துரை பிரதீபனுக்கு உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டமை தொடர்பான கவனயீப்பு போராட்டம் 18-06-2024 அன்று முன்னெடுக்கப்பட்டது.

வடக்கு மாகாண ஊடகவியலாளர்களின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் பிரதான பேருந்து நிலையம் முன்பாக அன்று காலை 10 மணி அளவில் பொது அமைப்புகள் சிவில் அமைப்புகள் அரசியல்வாதிகள் மற்றும் பொதுமக்கள் சமய தலைவர்கள் என பலரையும் உள்ளடக்கிய கவனிப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கடந்த 13ஆம் தேதி நள்ளிரவு 12.15 மணியளவில் ஊடகவியலாளர் தம்பித்துரை பிரதிபனின் வீட்டின் மீது இனம் தெரியாத நபர்களால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவத்தின் ஊடக சொத்துக்கள் தீயிட்டு அழிக்கப்பட்டது.

குறித்த விடயம் தொடர்பில் சட்டம் ஒழுங்கை நடைமுறைப்படுத்தும் தரப்பினரால் தாக்குதலை நடாத்தியவர்கள் தொடர்பாக எவரும் கைது செய்யப்படவில்லை. எனவே குறித்த விடையம் தொடர்பில் நீதி கூறும் வகையிலான போராட்டம் இன்றைய தினம் முன்னெடுக்கப்பட்டது.

குறித்த போராட்டத்தில் வடக்கு மாகாண ஊடகவியலாளர்கள், அரசியல்வாதிகள், சமூகவியலாளர்கள், புத்திஜீவிகள், பொது அமைப்புகள் மற்றும் பொதுமக்கள் என அதிகளவானோர் கலந்து கொண்டனர்.

இதன் போது போராட்டக்காரர்கள் கறுப்புப் பட்டி அணிந்து பதாகைகளைத் தாங்கியவாறு கோ'ம் எழுப்பி தமது கண்டனத்தை வெளியிட்டனர்.

குற்றவாளிகளைக் காப்பாற்றாமல்,
உண்மையை உலகறியச் செய்!, உண்மையை மறைக்கச்
சம்பவத்தைத் திசை திருப்பாதே!

மொட்டந் தலைக்கும்
முழங்காலுக்கும் ஏன் முடிச்சு!

குற்றத்தை நிரூபித்து
உண்மையை வெளிப்படுத்து!

ஊடகர் ஒற்றுமையை
உலகறியச் செய்வோம்!

உண்மையைச் சொன்னால்,
வன்முறை தான் தீர்வா?




உள்ளிட்ட கோஷங்களை கொண்ட பதார்த்தங்களை தாங்கியவாறு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.






இதன் போது ஊடக சுதந்திரத்தை அச்சுறுத்தும் வகையில் இலங்கையில் இடம் பெற்று வரும் சம்பவங்கள் தொடர்பிலே நீதி கண்டறியப்பட வேண்டும் என வலியுறுத்திய அறிக்கையில் அனைவரின் கையெழுத்துக்களும் பெறப்பட்டு ஆளுநர் ஊடாக ஜனாதிபதிக்கும் யாழ்ப்பாணத்தில் இயங்கி வரும் ஐக்கிய நாடுகள் சபையின் அலுவலகத்தின் ஊடாக ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளருக்கும் மகஜர் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.





# இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட இந்திய மீனவர்கள் கைது!

இலங்கை செய்திகள் Sri Lanka News

பு. கஜிந்தன்

இலங்கை கடற்பரப்பில் மீன் பிடித்த குற்றச்சாட்டில் நான்கு இந்திய மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் 17-06-2024 இரவு கைது செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணம் காரைநகர் கடற்பரப்பில் மீன்பிடித்துக் கொண்டிருந்த ஒரு படகையும் அதிலிருந்த நான்கு இந்திய மீனவர்களையும் எல்லை தாண்டி மீன் பிடித்ததாக கடற்படையினர் கைது செய்தனர்.

கைதான மீனவர்கள் மயிலிட்டி மீன்பிடி துறைமுகத்திற்கு அழைத்துச் செல்லப்படுவதுடன், கைதானவர்களை கடற்றொழில் நீரியல்வளத்துறை திணைக்களத்தினரிடம் ஒப்படைத்து ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.



இலங்கை செய்திகள் Sri Lanka News

# யாழ் நகர் நவீன பொது மலசலகூட தொகுதியை துரிதமாக நிர்மாணிக்க துறைசார் தரப்பினதுக்கு அமைச்சர் டக்ளஸ் பணிப்பு!



யாழ் நகரப்பகுதியில் நவீன வசதிகளுடன் கூடிய பொது மலசலகூட தொகுதி ஒன்றை நிர்மாணிப்பதற்கான திட்டவரைபுகள் தொடர்பில் துதைசார் அதிகாரிகளுடன் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்துரையாடியுள்ளார்.

யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையம் மற்றும் நகரப் பகுதிகளுக்கு தினமும் வரும் பெரும் எண்ணிக்கையிலான மக்களின் அவசர அவசிய தேவைகருதி நகரப்பகுதியில் நவீன வசதிகளை கொண்ட பொது மலசலகூடம் ஒன்றை அமைப்பதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் முன் வைக்கப்பட்ட திட்டத்திற்கு அமையவே குறித்த திட்டவரைபுகளை இறுதிசெய்யும் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது.

இந்நிலையில் குறித்த மலசல கூட தொகுதியை அமைப்பதற்கான திட்டவரைபுகள் இறுதி செய்யப்பட்டதுடன் குறித்த திட்டத்தை துரிதமாக முன்னெடுக்குமாறும் அமைச்சத் துறைசார் அதிகாரிகளுக்கு பணித்துள்ளார்.

நகர அபிவிருத்தி அதிகார சபையின் பங்களிப்புடன் முன்னெடுக்கப்படவுள்ள குறித்த திட்டமானது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் திட்டமிடல்களை அடுத்து விரைவில் நிர்மாணிக்கப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது.



இக்கலந்துரையாடலின் போது யாழ் மாநகர ஆணையாளர், பொறியியலாளர்கள் அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகள் உள்ளிட்ட பலர் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு பின்னோக்கிப் போவதற்கு தமிழ் தலைமைகள் பங்கு பிரதானம் அதை வரலாறுகள் உணர்த்தியுள்ளன என்கிறார் அமைச்சர் டக்ளஸ்

தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு பின்னோக்கிப் போவதற்கு தமிழ் தலைமைகள் பங்கு பிரதானம் அதை வரலாறுகள் உணர்த்தியுள்ளன. தமிழ் தேசிய கூட்டமைப்பின் ஆசீர்வாதத்துடன் நடைபெற்ற நல்லாட்சி அரசாங்கத்தில் தான் யாழ்ப்பாணம் அரியாலைப் பகுதியில் சீனக் கடலட்டைப் பண்ணை ஆரம்பிக்கப்பட்டதாகத் தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா எமது ஆட்சியில் அதை அகற்றினோம் எனவும் தெரிவித்தார்.

15-06-2024 அன்று சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் உள்ள அவரது கட்சி தலைமை அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன் வெளிநாடு ஒன்றில் இடம்பெற்ற சந்திப்பில் வடக்கில் கடல் அட்டைப் பண்ணைகளால் சூழல் சமநிலை பாதிக்கப்படுவதாக கருத்துத் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் கடல் அட்டைப் பண்ணைகளை தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் ஆசீர்வாதத்துடன் இடம்பெற்ற நல்லாட்சி அரசாங்கத்தில் அமைத்தார்கள் அப்போது சிறிதரனுக்கு தெரியாதா?

எமது ஆட்சியில் அந்தப் பண்ணையை முற்றாக அகற்றியுள்ள நிலையில் தனது அரசியல் சுயலாபத்துக்காக வடக்கில் சீனர்களின் அட்டைப் பண்ணை இருப்பதாக பொய் கூறி வருகிறார்.




தமிழ் மக்களுக்கு தீர்வை பெற்று தர போகிறோம் எனக் கூறி தமிழ் தலைமைகள் தமது சுயலாப அரசியலையும் உசுப்பேத்தி அரசியலையும் தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகின்றனர்.

தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு பின்னோக்கிப் போவதற்கு தமிழ் தலைமைகள் பங்கு பிரதானம் அதை வரலாறுகள் உணர்த்தியுள்ளன.

இவ்வாறான ஒரு நிலையில் மீனவ சமூகங்கள் மத்தியில் குழப்பநிலையை ஏற்படுத்துவதற்கும் தனது வெளிநாட்டு நிகழ்ச்சிநிரலை வெற்றிகரமாக மேற்கொள்வதற்கும் வடக்கில் சீனர்களின் அட்ட பண்ண இருப்பதாக வெளிநாட்டில் நின்று சிறிதரன் கூறுகிறார்.

அவர் வெளிநாட்டில் நின்று பொய் கூறுகிற நிலையில் அவருக்கு நான் ஒன்றை கூறுகிறேன் வடக்கில் சீனர்களின் அட்டை பண்ண இருந்தால் காட்டுங்கள் நான் அதனை அகற்றுவதற்கு தயாராக இருக்கிறேன் என அவர் மேலும் தெரிவித்தார்.

# யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள இருபத்தைந்து ஆலயங்களை சீரமைப்பதற்கான அரசாங்கத்தின் உதவியை வழங்கிய அமைச்சர் டக்ளஸ்



யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள ஒருதொகுதி ஆலயங்களை சீரமைத்து புனரமைப்பதற்கான நடவடிக்கைகளுக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் நிதி ஒதுக்கீடு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.



தமது ஆலயங்கள் மீள் புனரமைப்பு செய்யப்பட வேண்டும் எனவும் அதற்கான நிதியுதவியை பெற்றுத்தருமாறும் ஒருதொகுதி ஆலய நிர்வாகத்தினரால் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் குறித்த தரப்பினருக்கான காசோலைகள் இன்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் வழங்கி வைக்கப்பட்டன.

இந்து கலாசார திணைக்களத்தின் 2024 இற்கான நிதி ஒதுக்கீட்டின் ஊடாக கிடைக்கப்பெற்ற நிதியே குறித்த ஒரு தொகுதி ஆலயங்களுக்கு நிதியுதவியாக 15-06-2024 அன்று வழங்கி வைக்கப்பட்டன.

இதனடிப்படையில், தெரிவு செய்யப்பட்ட சுமார் 25 ஆலயங்களுக்கு தலா இரண்டு இலட்சம் ரூபா வீதம் நிதி வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தமிழ் பொது வேட்பாளரை ஏற்றுக் கொள்வதாக தமிழ் மக்கள் பொதுச்சபை பகிரங்கமாக அறிவிப்பு



ஜனாதிபதித் தேர்தலில் ஒரு தமிழ் பொது வேட்பாளர் நிறுத்துவதற்காக உழைத்துக் கொண்டிருக்கும் மக்கள் அமைப்பாகிய, தமிழ் மக்கள் பொதுச்சபையானது, காலை 9:30 மணியிலிருந்து 12.30 மணி வரையிலும் கிளிநொச்சி, கூட்டுறவு மண்டபத்தில் ஒரு பொதுக்கூட்டத்தை நடத்தியது.

சுமார் 200க்கும் குறையாத வெவ்வேறு அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் இதில் பங்கு பற்றினார்கள். விவசாய அமைப்புகள், கூட்டுறவு அமைப்புகள், அரச சார்பற்ற நிறுவனங்கள், வர்த்தக அமைப்புகள் உள்ளிட்ட பல்வேறு வகைப்பட்ட அமைப்புகளும் இதில் கலந்து கொண்டன.

தமிழ் மக்கள் பொதுச்சபை சார்பில் நிலாந்தன், பேராசிரியர் கணேசலிங்கம், ஜோதிலிங்கம், ரவீந்திரன் இந்திரன் ஆகியோர் கலந்து கொண்டார்கள். அங்கு கலந்து கொண்டவர்கள் பெருமளவு கேள்விகளை கேட்டார்கள். முடிவில், எல்லா அமைப்புகளும் பொதுத்தமிழ் வேட்பாளரை ஏற்றுக் கொள்வதாக பகிரங்கமாக அறிவித்தன.



# மன்னாரில் குடும்பத் தகராறு காரணமாக குடும்பஸ்தர் தற்கொலை!

மன்னார் மடு பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பாலம்பிட்டி பகுதியில் குடும்பத் தகராறு காரணமாக குடும்பஸ்தர் தற்கொலை செய்துகொண்டுள்ள சம்பவம் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர் பாலம்பிட்டியை சேர்ந்த 61 வயதுடைய எல்லாளன் என அழைக்கப்படுகின்ற நான்கு பிள்ளைகளின் தந்தையான தர்மராசா மரியஜேசுதாசன் எனத் தெரியவருகிறது.

மேலும் குறித்த நபர் 17-06-2024 பகல் தனது வயல் நிலத்திற்குச் சென்று நஞ்சருந்திய நிலையில் அப்பகுதி மக்களால் மீட்கப்பட்டு முருங்கன் வைத்தியசாலைக்கு கொண்டுசென்ற நிலையில் அங்கு சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார்.

குடும்பத்திற்குள் ஒரு வாரத்திற்கு மேலாக கருத்து முரண்பாடு ஏற்பட்டு வந்த நிலையிலேயே குறித்த நபர் இவ்வாறு விபரீத முடிவு எடுத்து உயிரிழந்துள்ளார் என பொது மக்கள் கூறுகின்றனர்.

# ஒட்டிசுட்டான் மகாவித்தியாலய நிதி நிர்வாக முறைகேடுகள் விவகாரம் — விசாரணை குழு அமைக்க பிரதம செயலாளர் பணிப்பு

முல்லைத்தீவு ஒட்டிசுட்டான் பாடசாலை அதிபரின் நிதி நிர்வாக முறைகேடுகள் தொடர்பாக சுயாதீன விசாரணைக்குழுவை அமைத்து விரிவான அறிக்கை வழங்குமாறு வடமாகாண பிரதம செயலாளர் முல்லைத்தீவு அரசாங்க அதிபரை பணித்துள்ளார்.

குறித்த விடயம் தொடர்பில் தெரிய வருவது, குறித்த பாடசாலையில் நிர்வாக நிதி முறைகேடு தொடர்பாக குறித்த பாடசாலையில் சமூகத்தினரால் பல்வேறு குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வந்தது.

எனினும் குறித்த குற்றச்சாட்டு தொடர்பில் வடமாகாண கல்வி மௌனம் காத்து வந்த நிலையில் வட மாகாண பிரதமர் செயலாளர் மற்றும் முல்லைத்தீவு அரசாங்க அதிபருக்கு குறித்த விடயம் தொடர்பில் முறைப்பாடு முன்வைக்கப்பட்டது.

இந்நிலையில் குறித்த முறைப்பாடு தொடர்பில் விசாரணை குழு ஒன்றை அமைத்து தனக்கு விரிவான அறிக்கை ஒன்றை வழங்குமாறு வடமாகாண பிரதம செயலாளர் இ. இளங்கோவன் முல்லைத்தீவு அரசாங்க அதிபர் உமா மகேஸ்வரனுக்கு எழுத்து மூலமான கடிதத்தை அனுப்பி உள்ளார்.

குறித்த விடயம் தொடர்பில் முல்லைத்தீவு அரசாங்க அதிபரை தொடர்பு கொண்டு கேட்டபோது பிரதம செயலாளரால் அனுப்பப்பட்ட கடிதம் கிடைத்தமையை உறுதி செய்தார்.

கனடிய செய்திகள்
Canadian News

# இவ்வருடத்திற்கான வெண்மேரி விருதுகள் விழா கனடாவில் நடைபெறுகின்றது




கடந்த இரண்டு வருடங்களாக முறையே யாழ்ப்பாணம் மற்றும் பாரிஸ் ஆகிய நகரங்களில் நடைபெற்ற கனடாவை தளமாகக் கொண்ட வெண்மேரி விருதுகள் வழங்கும் இவ்வருடத்திற்கான 3வது விருது விழா கனடாவின் அஜக்ஸ் மாநகரில் நடைபெறுகின்றது. எல்லாமாக 19 விருதுகள் வழங்கப்பெறவுள்ள இந்த விழாவில் மூன்று பெண்மணிகள் விருதுகள் பெறுகின்றார்கள்.

கனடா வாழ் நடன ஆசிரியை சாந்தா பொன்னுத்துரை அவர்களுக்கு "கலாபவனம்" ஏரம்பு சுப்பையா ஞாபகார்த்த விருதும், இலங்கையின் முல்லைத்தீவு வாழ் ஓட்ட வீராங்கனை அகிலத்திருநாயதி ஸ்ரீ சயனணந்தபவன் அவர்களுக்கு முன்னாள்ன இலங்கை தேசிய உதைப்பந்தாட்ட வீரர் அந் எஸ். என். ஜே அந்தோனிப்பிள்ளை ஞாபகார்த்த விருதும். ஜேர்மனி வாழ் திரைப்பட இயக்குனர் சிபோ சிவகுமாரன் அவர்களுக்கு மூத்த திரைப்படக் கலைஞர் ஏ. ரகுநாதன் ஞாபகார்த்த விருதும் வழங்கப்படவுள்ளன. ஈழத்தின் கர்நாடக இசையின் அடையாளம் என்று கருதப்படுபவரும் தற்போது கனடாவில் வாழ்பவருமான "இன்னிசை வேந்தர்" பொன். சுந்தரலிங்கம் அவதர்களுக்கு இசைப் புலவர் தா. சண்முகரத்தினம் ஞாபகார்த்த விருதும் வழங்கப்படவுள்ளது.

கனடாவில் நடைபெறும் விருது விழா தொடர்பான ஏற்பாடுகளை கனடா வாழ் உறுப்பினர் அனுரா அருளப்பு அவர்கள் செய்து வருகின்றார்.

மேலதிக விபரங்களுக்கு (647) 854-2927 என்னும் இலக்கத்தை அழைக்கவும்.

# கனடா தமிழ் சமூக மையத்தின் கட்டுமானப் பணிகளை ஆரம்பிக்க, குடும்பங்களிடமிருந்து முதல் கட்ட நன்கொடைகளை பெற்றுக்கொள்ள தமிழ் சமூக மையம் திட்டம்




கனடாவில் வாழும் தமிழ் மக்களின் நீண்ட நாள் கனவுகளில் ஒன்றாக தமிழ் சமூக மையத்தின் கட்டுமானப் பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன. கனடாவின் மூன்று நிலை அரசுகளின் ஒத்துழைப்புடன் முன்னெடுக்கப்பட்டு வரும் தமிழ் சமூக மைய கட்டுமானத்தில் தமிழ் சமூகமாக நாம் எமது பங்களிப்பினை வழங்குவதற்கான காலம் உருவாகியுள்ளது.

விழுதுகளாக அடையாளப்படுத்தப்படும் நிறுவுனர் குடும்பங்களிடம் இருந்து முதல் கட்ட நன்கொடைகளை பெற்றுக்கொள்ள தமிழ் சமூக மையம் திட்டமிட்டுள்ளது. இதில் இணையும் குடும்பங்கள் ஒவ்வொன்றும் தமிழ் சமூக மையத்தை உருவாக்குவதற்கு அடுத்த இரண்டு ஆண்டுகளில் 10,000 டொலரை வழங்க முடியும்.

இந்த நன்கொடையளிப்பின் மூலமாக 2,500 குடும்பங்களை இணைத்து அதன் மூலமாக 25,000,000 டொலரை பெற்றுக் கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த நிதிப்பங்களிப்பின் மூலம் தமிழ் சமூக மையத்தின் அரங்க நிர்மாணப்பணிகளை முன்னெடுப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

கனடாவில் உருவாகவுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தமிழ் சமூக மையத்தின் நிறுவுனர் குடும்பங்களில் ஒன்றாக நீங்கள் மாறுவதற்கு விரும்பினால் இந்த இணைப்பின் மூலமாக பதிவினை மேற்கொள்ள முடியும். தலைமுறைகள் தாண்டியும் கனேடிய மண்ணில் தமிழ் மக்களின் பெருமைக்குரிய அடையாளமாக திகழப் போகும் தமிழ் சமூக மையத்தினை வெற்றிகரமாக கட்டி முடிப்பதற்கு உங்கள் அனைவரினதும் பங்களிப்பு இன்றியமையாதது.

இந்த தகவலை உங்கள் உறவினர்கள் நண்பர்களுடனும் பகிர்ந்து கொளவதன் மூலம் அவர்களையும் இந்த திட்டதில் இணைத்துக் கொள்ளுங்கள்.

இந்த திட்டம் குறித்து உங்கள் சமூக ஊடகங்கள் மூலமாகவும் ஏனையவர்களுடன் பகிர்ந்து கொள்வதன் மூலம் இந்த இலக்கினை நாம் விரைவில் உட்டுவதற்கு உதவுமாறு தாழ்மையுடன் வேண்டி நிற்கின்றோம்.

இவ்வாறு தமிழ் சமூக மையத்தின் நிதி சேகரிப்புக் குழு அறிவித்துள்ளது.

THANA INSURANCE Inc.

# Thana Insurance Inc

## NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 10 K | 22 | 20 | 22 | 20 | 25 | 23 | 34 | 29 | 45 | 37 |
| 25 K | 37 | 34 | 47 | 40 | 54 | 49 | 76 | 64 | 106 | 84 |
| 50 K | 69 | 62 | 89 | 75 | 104 | 92 | 147 | 123 | 206 | 162 |
| 100 K | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 318 |
| 200 K | 260 | 231 | 337 | 282 | 398 | 353 | 572 | 476 | 807 | 631 |

## 20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | 32 | 26 | 50 | 40 | 86 | 60 | 140 | 94 | 265 | 171 |
| 200 K | 60 | 46 | 103 | 74 | 166 | 115 | 275 | 182 | 468 | 321 |



Call us Today

Cell : 416-728-5772
Office : 416-519-3896

**Thana Manickavasagar**
Insurance Broker
thana7@gmail.com
www.thana.ca
fax : 647-547-8147
80 Nashdene Road ,#D218,
Scarborough,ON,M1V 5E4

**20 வருடம் மட்டுமே பணம் செலுத்தும் காப்புறுதி**

**மருத்துவ பரிசோதனை இல்லாத காப்புறுதி**

**சாரதி அனுமதிப்பத்திரம் பறிமுதல் செய்யப்பட்டு காப்புறுதி செய்யமுடியாமல் இருப்பவர்களிற்கும்**

**உங்கள் காப்புறுதி முகவர் தற்போது சேவையில் இல்லாவிடின் உங்கள் திட்டத்தை இரத்து செய்யாமல் அதில் இலவசமாக மாற்றங்களை செய்ய என்னை அழையுங்கள்**

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# ஊடகவியலாளர்கள் மீது வன்முறைத் தாக்குதல்களும் அச்றுசுத்தல்களும் விடுக்கப்பட்டுவருவதை ஏற்கமுடியாது என அமைச்சர் டக்ளஸ் கண்டனம்

நாட்டில் இயல்பான சூழ்நிலை காணப்படும் இந்த காலகட்டத்தில் ஊடகவியலாளர்கள் மீது வன்முறைத் தாக்குதல்களும் அச்றுசுத்தல்களும் விடுக்கப்பட்டுவருவதை ஏற்கமுடியாது என சுட்டிக்காட்டியுள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அத்தகைய செயற்பாட்டை வன்மையாக கண்டிப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண பிராந்திய ஊடகவியலாளரான பிரதீபன் வீட்டின் மீது அண்மையில் நடத்தப்பட்ட வன்முறை தாக்கதல் தொடர்பில் கருத்து கூறும்பேதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அவர் மேலும் கூறுகையில், ஊடகவியலாளர்கள் தாக்கப்படுவது எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ளப்படமுடியாது. கடந்த காலங்களில் நாட்டில் எத்தனை தாக்குதல்கள் அச்சுறுத்தல்கள் கொலைகள் எல்லாம் நடந்திருந்தது என உங்களுக்கு தெரியும்.

அன்று அதை செய்தவர்கள் ஒரு கல்லில் இரண்டு மாங்காய் அடிக்கிற மாதிரியான போர்வையிலேயே அதை முன்னெடுத்திருந்தனர்.

குறிப்பாக ஊடகவியலாளர் மீது தங்களுடைய வஞ்சகத்தை தீர்த்துக் கொள்வது ஒரு பக்கம் இருக்க மறுபக்கம் அதன் பழியை ஈ.பி.டி.பி மீது இலகுவாக போட்டு தாம் தப்பித்துக்கொள்வதாக இருந்தது. இதுதான் கடந்த காலங்களில் நடந்தது.

அதேபோன்றுதான் இன்றைக்கும் இந்த சம்பவங்கள் தொடர்து வருகின்றன. ஆனால் துரதிஸ்ரவசமாகவோ அதிர்ஷ்டவசமாகவோ ஈ.பி.டிபியின் பெயர் இன்று அத்தகைய செயற்பாடுகளில் பயன்படுத்துவது இல்லாது போய்விட்டது.



அது உணர்வினுடைய வெளிப்பாடாக இருக்கலாம் அல்லது அந்த வன்முறைக்கு தலைமை தாங்கியவர்கள் இன்று அடியோடு இல்லாமையாகவும் இருக்கலாம்.

கடந்த காலத்தில் வன்முறைக்கு தலைமை தாங்கியவர்கள் ஈ.பி.டிபினுடைய மாற்றிக் கொள்கை அல்லது மாற்று வேலைதிட்டத்தை விரும்பாததால் அல்லது தாங்கள் செய்வது அம்பலப்பட்டு போகும் என்பதை விரும்பாமல் ஈ.பி.டி.பியை ஏதோ ஒரு வகையில அளிக்க முற்பட்டார்கள். குறிப்பாக உயிர் அச்சுறுத்தல் உயிராபத்துகளையும் ஏற்படுத்தியது மற்றது ஈ.பி.டிபியுடைய நற்பெயருக்கு களங்கத்தை ஏற்படுத்த முயற்சிகளை செய்தார்கள்.

அதைத்தான் நான் இந்த சந்தர்ப்பத்தில் சகோதரர் பிரதீபன் விடயத்திலும் கூறவிரும்புகின்றேன்.

அந்தவகையில் எல்லாரும் விழிப்பாக இருந்து. உண்மை வெளிவருமானால் இவ்வாறான சம்பவங்களை நாங்கள் இல்லாமல்செய்யலாம் என்று தான் நம்புவதாகவும் தெரிவித்திருந்தமை குறிப்பிடததக்கது.

# காணி உறுதிகள் வழங்கும் நிகழ்வு: ஆசியாவில் யாரும் செய்யாததை தான் செய்துள்ளதாகக் கூறுகிறார் ரணில் விக்ரமசிங்க

- நடராசா லோகதயாளன்



யுத்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களின் காணிகள் அபகரிக்கப்பட்டன. இராணுவம் முகாம்களுக்காக கையகப்படுத்தப்பட்டது என ஜனாதிபதி ரணில விக்கிரமசிங்க தெரிவித்தார்.

"உறுமய" தேசிய வேலைத்திட்டத்தின் கீழ், மன்னார் மாவட்ட மக்களுக்கு காணி உறுதிகளை வழங்கும் நிகழ்வு மன்னார் நகர சபை மண்டபத்தில் 16-06-2024ல், அன்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில் இடம்பெற்றது.

மன்னாரில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உறுதிகளை வழங்கியபோதே ஜனாதபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி மேலும் உரையாற்றுகையில், உறுமய திட்டத்தினால் மக்களின் காணி உரிமையை உறுதிப்படுத்தி, சொத்துப் பெறுமதியையும் உயர்த்த முடிந்துள்ளது.

கொவிட் தொற்று - பொருளாதார நெருக்கடியினால் சரிவடைந்த சொத்துக்களின் பெறுமதி "உறுமய" திட்டத்தின் ஊடாக வலுவடைந்திருப்பதால், அதனூடாக நாட்டின் பொருளாதாரத்தைப் பலப்படுத்த முடியும்.

"கடந்த முறை வடக்கிற்கு வந்தபோது மன்னாருக்கு வருமாறு பாராளுமன்ற உறுப்பினர்களால் அழைப்பு விடுக்கப்பட்டது. மாத இறுத்திக்குள் வருவதாக சொன்னேன். இன்று வந்துவிட்டேன். செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. அபிவிருத்தி தொடர்பில் கூறிய பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்வோம்.

இங்கு வவுனியா - மன்னார் மக்கள் வந்துள்ளனர். இங்கிருந்து செல்லும்போது காணி உரிமையுடன் செல்வீர்கள். வரும்போது உரிமை இருக்கவில்லை. செல்லும் போது உரிமை இருக்கும். இந்த காணிகளை இனி உங்கள் விருப்பப்படி பயன்படுத்தலாம். வடக்கில் 90 ஆயிரம் உறுதிகள் வழங்க வேண்டியுள்ளது. அவற்றில் 40 ஆயிரம் உறுதிகள் எந்த பிரச்சினைகளும் இல்லாதவையாகும்.

கிராமங்களுக்கே சென்று அதற்குரிய பணிகளை செய்யுமாறு ஆளுநர்களுக்கு அறிவுறுத்தியுள்ளேன். 1935 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை பருத்தித்துறையிலிருந்து தெய்வேந்திர முனை வரையில் காணி அனுமதி பத்திரங்கள் மட்டுமே வழங்கப்பட்டன. அவற்றை எந்த நேரத்திலும் இரத்துச் செய்ய முடியும் என்பதால், காணி உறுதி குறித்து மக்களுக்கு பாதுகாப்பு இருக்கவில்லை. காணியை சுத்தம் செய்து அதற்குள் விளைச்சல் செய்து அபிவிருத்தி செய்த பின்பும் அதற்கான உரிமை மக்களுக்கு கிடைக்கவில்லை.

85 வருடங்களாக இந்நிலையில் இருந்தனர். 20 இலட்சம் பேர் இப்படியாக உரிமை இல்லாமல் இருக்கிறார்கள். அதனை மாற்றியமைக்க வேண்டுமென நான் தீர்மானித்தேன். கொவிட் - பொருளாதார நெருக்கடி காலங்களில் மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டனர். ஒட்டுமொத்தமாக சொத்துக்களையும் இழந்தனர். சொத்துப் பெறுமதி வீழ்ச்சி கண்டது. நாம் இப்போது வங்குரோத்து நிலையிலிருந்து மீண்டு வரும்போது அதன் நன்மைகளை சாதாரண மக்களுக்குப் பெற்றுக்கொடுக்க எம்மால் முடிந்த முயற்சிகளை முன்னெடுத்து வருகிறோம்.

சாதாரண மக்கள், பொருளாதார நெருக்கடியால், காணிகள், சொத்துகள், செல்வங்களை இழந்தனர். அதனால் காணி அனுமதி பத்திரம் கொண்டவர்களுக்கு காணி உறுதிகளை வழங்க தீர்மானித்தேன். இந்த வேலைத்திட்டத்திற்கு முன்பாக கொவிட் - பொருளாதார நெருக்கடி காரணமாக இழக்கப்பட்டட சொத்துப் பெறுமதி உறுமய திட்டத்தினால் மீண்டும் வலுவடையும்.

ஆசியாவில் எந்தவொரு நாடும் காணி உறுதிகளை மக்களுக்கு வழங்கவில்லை. அதனால் நாம் பெரும் புரட்சி செய்திருக்கிறோம். மேல் மாகாணத்தில் அடுக்குமாடிக் குடியிருப்புக்களில் வசிக்கும் 2 இலட்சத்து 50 ஆயிரம் பேருக்கு வீட்டு உரிமைகளை வழங்கியுள்ளோம். சாதாரண மக்கள் பட்ட க்'டங்களுக்கு நியாயம் செய்திருக்கிறோம். காணி உறுதிகளின் பெறுமதிகளை வடக்கு மக்களே அதிகமாக அறிவர். யுத்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களின் காணிகள் அபகரிக்கப்பட்டன. இராணுவம் முகாம்களுக்காக கையகப்படுத்தப்பட்டன.

தற்போது மக்களுக்கு காணிகளுக்கான நிரந்த உரிமை கிடைப்பதால் மக்கள் மகிழ்ச்சியாக வாழ கூடிய சூழல் உருவாகும். உங்களுக்கு கிடைத்த காணிகளை விற்றுவிடாமல். அபிவிருத்தி செய்து இதிலிருந்து நல்ல பயன்களைப் பெறுமாறு கூறி வாழ்த்துகிறேன்." என்று ஜனாதிபதி தெரிவித்தார்.





# பாக்கு நீரிணையை நீந்திக் கடந்த திருகோணமலையை சேர்ந்த சாதனை வீரன் ஹஷன் ஸலாமா

இலங்கை செய்திகள் Sri Lanka News

மன்னார் நிருபர்

**- எஸ்.ஆர்.லெம்பேட் (16-06-2024)**

திருகோணமலையை சேர்ந்த முஹம்மட் ஹஷன் ஸலாமா சனிக்கிழமை (15) இந்தியாவின் தனு‘கோடியிலிருந்து இலங்கையின் தலைமன்னாருக்கிடையிலான 42முஅ தூரத்தினை உடைய பாக்கு நீரிணையை நீந்தி சாதனை படைத்துள்ளார்.

15-06-2024 சனிக்கிழமை அதிகாலை 02.00 மணிக்குத் தொடங்கி முற்பகல் 11.00 மணியளவில் நீந்தி முடித்துள்ளார்.

இவருக்கான நீச்சல் பயிற்சிகளை விமானப்படை கோப்ரல் றொசான் அபேசுந்தர வழங்கி வருகின்றார்.

மேலும் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் பாக்கு நீரிணையை நீந்திக் கடந்த திருகோணமலையைச் சேர்ந்த ஹரிகரன் தன்வந்தையையும் இவரே பயிற்றுவித்திருந்தார்.

இலங்கையரான இள வயதையுடைய பஹ்மி ஹஸன் சலாமா நாட்டின் விளையாட்டு வரலாற்றிலே தனது பெயரை பதிந்து கொள்வதற்காக தனது இலக்-கினை அடைந்து கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.

இதுமட்டுமல்லாமல், திருகோண மலையில் உள்ள கிழக்கு மாகாண சுற்றுலா பணியகத்தினால் நடாத்தப்பட்ட அகில இலங்கை கடல் நீச்சல் போட்டியில் வெற்றியாளராக தெரிவாகி இருக்கின்றார்.

பஹ்மி ஹஸன் சலாமா விளையாட்டுத் துறைக்கு அப்பால் சென்று தனது அர்ப்பணிப்புகளூடாக நீருக்குக் கீழான சுத்திகரிப்புப் பணிகள் மற்றும் கடற்பாதுகாப்பு செயன்முறைகள் தொடர்பாகவும் தனது நேரடி பங்களிப்பினை வழங்கியுள்ளார்.

பாக்கு நீரிணையை நீந்திக் கடந்த இலங்கையின் எட்டாவது நபராகவும், பாக்கு நீரிணையை நீந்திக் கடந்த உலகின் முதலாவது முஸ்லிம் நபராகவும் ஹ‘ன் ஸலாமா திகழ்கிறார்.

தரம் 10 இல் கல்வி கற்கும் 15 வயதான இவர் கடந்த மூன்று மாதங்களாக இச் சாதனை முயற்சிக்கான தீவிர பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றார்.

கடந்த மாதம் 18ஆம் திகதி இவர் பாக்கு நீரிணையின் இலங்கை கடல் எல்லையில் இருந்து தலைமன்னார் வரையான தூரத்தை பயிற்சி அடிப்படையில் நீந்திக் கடந்துள்ளார்.






# மூன்று தசாப்த கால யுத்தத்திற்கு முகம் கொடுத்த மன்னார் மாவட்டம் இன்று புனரமைக்கப்படுகிறது



## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

**- எஸ்.ஆர். லெம்பேட் (16-06-2024)**

மூன்று தசாப்த கால யுத்தத்திற்கு முகம் கொடுத்த மன்னார் மாவட்டம் இன்று புனரமைக்கப்படுகிறது. இம் மாவட்டத்தின் விரிவான அபிவிருத்தி மூலம் இலங்கையின் பொருளாதாரத்திற்கு பாரிய பங்களிப்பை வழங்க முடியும். இம்மாவட்டத்தில் சுற்றுலாத் துறை, மீன்பிடி தொழில் மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றலுக்கு அதிக வாய்ப்புகள் உள்ளன என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட செயலகத்தில் 16-06-2024 அன்று நடைபெற்ற மன்னார் மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, மடு தேவாலயத்திற்கு வரும் பக்தர்களின் வசதிக்காக தற்போது உள்ள மடு வீதியை உடனடியாக செப்பனிடுமாறு இராணுவத்தினருக்கு பணிப்புரை விடுத்த ஜனாதிபதி, மன்னார் ஆயர், வன பாதுகாப்பு திணைக்களம், வீதி அபிவிருத்தி அதிகார சபை மற்றும் காவல்துறையை தொடர்பு கொள்ள வேண்டும்.

மடு தேவாலயத்தில் நடைபெறவுள்ள வருடாந்த திரு விழாவிற்கு முன்னதாக இந்த சுத்திகரிப்பு பணிகளை முடிக்குமாறு ஜனாதிபதி மேலும் பணித்தார்.

மன்னார் மாவட்டத்தின் எதிர்கால அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பில் ஆராயும் நோக்கில் கூட்டப்பட்ட இந்த மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் பிரதேசத்தின் அரசியல் பிரதிநிதிகள், அரச அதிகாரிகள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

மாவட்டத்தில் சுகாதாரம், கல்வி, நீர்ப்பாசனம் உள்ளிட்ட சகல துறைகளிலும் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் ஜனாதிபதியிடம் நேரடியாக முன்வைக்கப்பட்டது டன், இவற்றில் பல பிரச்சனைகளுக்கு தீர்வுகளை வழங்குவதற்கு ஜனாதிபதி துரித நடவடிக்கைகளை முன்னெடுத்தார்.

மன்னார் வைத்தியசாலைக்கு நீண்டகாலமாக பற்றாக்குறையாக உள்ள ஊவு ஸ்கேன் இயந்திர மொன்றை வழங்குமாறு வைத்தியசாலை பணிப்பாளரின் கோரிக்கை தொடர்பில் கவனம் செலுத்திய ஜனாதிபதி, அதனை உடனடியாக நிறைவேற்றி வருவதாகவும் தெரிவித்தார்.

மன்னார் மாவட்டம் இழந்த அபிவிருத்தியை மீண்டும் பெற்றுக் கொடுத்து இந்த ஆண்டு வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படும் என மேலும் குறிப்பிட்டார்.





எதிர்வரும் ஐந்து தசாப்தங்களில் மாறி வரும் கால நிலைக்கு ஏற்ப இலங்கையில் அமுல்படுத்தக்கூடிய தீர்வுகளை காண வேண்டியதன் அவசியத்தையும் விளக்கிய ஜனாதிபதி, அடுத்த ஐம்பது வருடங்களில் ஈரமான பிரதேசங்களில் அதிக மழை மற்றும் வறண்ட பிரதேசங்கள் கிடைக்கும் என கணிக்க பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

மழை பெறாது. மாறிவரும் உலகிற்கு ஏற்ற வகையில் பொருளாதார, சமூக, கல்வி மற்றும் விவசாயத் துறையில் புதிய மாற்றத்தை உருவாக்க வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

மூன்று தசாப்த கால யுத்தத்திற்கு முகம் கொடுத்த மன்னார் மாவட்டம் இன்று புனரமைக்கப்படுகிறது. இம்மாவட்டத்தின் விரிவான அபிவிருத்தி மூலம் இலங்கையின் பொருளாதாரத்திற்கு பாரிய பங்களிப்பை வழங்க முடியும். இம்மாவட்டத்தில் சுற்றுலாத் தொழில், மீன்பிடி தொழில் மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றலுக்கு அதிக வாய்ப்புகள் உள்ளன.

இப்பகுதிகளில் காற்றாலை மற்றும் சூரிய ஒளி மின் உற்பத்திக்கான சாத்தியக்கூறுகள் மிக அதிகம். காற்றலை உற்பத்தி செய்து இந்தியாவுக்கு விற்கும் முறை குறித்து இந்திய அரசுடன் கலந்துரையாடல் நடத்தப்பட்டுள்ளது.

வடமாகாண மானது பசுமை ஆற்றலை உற்பத்தி செய்வதில் விசேட ஆற்றலைக் கொண்டுள்ளது.

ஏரிகள் மற்றும் காற்றாலைகளில் சோலார் பேனல் மின் உற்பத்தி நிலையங்களை அமைப்பதன் மூலம் அதிக அளவில் மின் உற்பத்தி செய்ய முடியும்.

அந்த சக்தியை இந்தியாவிற்கும் ஏனைய நாடுகளுக்கும் விற்பனை செய்வதன் மூலம் இலங்கையின் பொருளாதாரத்திற்கு பெரும் பங்களிப்பை வழங்க முடியும். பசுமை ஆற்றல் மற்றும் பச்சை ஹைட்ரஜன் ஆகியவை பசுமைப் பொருளாதாரத்தை உருவாக்கும் ஆற்றலைக் கொண்டுள்ளது.

மன்னாரில் நிர்மாணிக்கப்படும் புதிய நீதிமன்ற கட்டடத் தொகுதிக்கு தேவையான நிதி எதிர்வரும் காலங்களில் வழங்கப்படும். புத்தளம் ஊடாக மன்னாருக்கான வீதி திறப்பது தொடர்பில் எதிர்காலத்தில் கலந்துரையாடி பதில் வழங்க முடியும்.

மன்னார் வைத்தியசாலைக்கு ஊவு ஸ்கேன் இயந்திரம் வழங்குவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நவீன விவசாயத்தை உருவாக்குவதற்கான முறையான திட்டத்தை முன்வைத்துள்ளோம்.

அதற்குத் தேவையான வசதிகளைப் பெற்றுக் கொள்வதற்கு அபிவிருத்திக் குழுவைக் கூட்டி கலந்துரையாடி ஆலோசனைகளை வழங்குமாறு தெரிவிக்க விரும்புகிறேன். இந்தப் பிரதேசத்தில் உள்ள ஏரிகள் பாதுகாப்பதற்கும் மல்வத்து ஓயா திட்டத்தில் இருந்து மன்னாருக்கு வரும் நீரைப் பாதுகாப்பதற்கான முறையான வேலைத்திட்டம் தேவை.

அடுத்த ஐந்து தசாப்தங்களுக்கு, ஈரமான பிரதேசங்களில் மழை அதிகரிப்பு மற்றும் வறண்ட பகுதிகளில் மழை பற்றாக்குறை இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது. அந்த நிலைமைக்கு தீர்வு காண இப்போதிலிருந்தே செயல்பட வேண்டும்.

மடு தேவாலயத்திற்கு செல்லும் பாதை அந்த யாத்திரிகர்களுக்கானது. ஸ்ரீ பாதத்திற்கு செல்லும் பாதை ஸ்ரீ பாதஸ்தானத்திற்கு வரும் யாத்ரீகர்களுக்கானது. எனவே, யாத்ரீகர்களை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி முப்பது லட்சம் அபராதம் விதித்தால், அதை நான் நியாயமான வி‘யமாக பார்க்கவில்லை.


எனவே, மன்னார் மறைமாவட்ட பிரதிநிதி, வனப் பாதுகாப்புத் திணைக்களம், வீதி அபிவிருத்தி அதிகார சபை, இலங்கைப் பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் இணைந்து இந்த வீதியைச் சுத்தப்படுத்தி அபிவிருத்தி செய்ய வேண்டும். இந்த நடவடிக்கைகள் மடு தேவாலயத்தின் வருடாந்த திரு விழாவிற்கு முன்னதாக நிறைவு பெறும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

மன்னார் நகர நுழைவாயிலில் உள்ள காவலரண்களை ஒரே நேரத்தில் அகற்ற முடியாது. பாதுகாப்புப் படையினருடன் கலந்துரையாடி உரிய நடவடிக்கை எடுப்பேன் என நம்புகிறேன். மன்னார் மாவட்டத்திற்கு தேவையான அபிவிருத்திகளை வழங்குவோம். இந்த ஆண்டு அதற்கான அடிப்படை அடித்தளம் அமைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மன்னாரைச் சுற்றி நடைபெறும் இந்த விரிவான அபிவிருத்திச் செயற்பாடுகள் பற்றி உங்களுக்குத் தெரிவிக்க விரும்பினேன். அதனால் யாரிடமும் சிக்கிக் கொள்ள வேண்டியதில்லை. இப்பிரதேசத்தில் விரிவான அபிவிருத்திகளை மேற்கொண்டு நாட்டின் பொருளாதாரத்திற்கு பாரிய பங்களிப்பை வழங்கும் மாவட்டமாக மன்னார் மாவட்டத்தை உருவாக்குவோம்.

# தமிழ்ப் பொது வேட்பாளர் பொசிற்றிவ் ஆனவர்

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார் -**



புலம்பெயர்ந்து வாழும் ஒரு அரசியல் விமர்சகர் என்னோடு கதைத்தார். "தமிழ்ப் பொது வேட்பாளருக்கு ஆதரவாகப் பேசும் பலரிடம் ஒரு போக்கு காணப்படுகின்றது. யாரோ ஒரு அரசியல்வாதி அல்லது ஏதோ ஒரு கட்சி அல்லது சில கட்சிகளுக்கு எதிராக அவர்கள் பேசுகிறார்கள். அல்லது அவர்களை நோக்கிக் கேட்கப்படும் கேள்விகளும் அவர்களை அவ்வாறு பேசத் தூண்டுபவைகளாக அமைகின்றன. இது சரியா? தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரிப்பது என்பதனை ஒரு தனிப்பட்ட அரசியல்வாதிக்கு அல்லது கட்சிக்கு எதிரான ஒரு போக்காக வடிவமைப்பது சரியா?" என்று.

இல்லை. அப்படிச் சில அரசியல்வாதிகளுக்கு எதிராக அல்லது இரண்டு கட்சிகளுக்கு எதிராக அந்தப் பிரச்சாரத்தை வடிவமைக்கக் கூடாது. ஆனால் யதார்த்தத்தில் அது அப்படித்தான் காணப்படுகின்றது. இது தமிழ் அரசியலில் மட்டுமல்ல, ஆசிய ஆபிரிக்கச் சமூகங்களில் மட்டுமல்ல, தற்பொழுது மேற்கத்திய ஜனநாயகப் பரப்புகளிலும் காணப்படும் ஒரு போக்கு. பொதுவாக ஆசிய ஆபிரிக்க ஜனநாயகங்கள் தனிநபர்களை மையமாகக் கொண்டவை. தனிநபர் வழிபாடு, தனிநபர் துதி, தனிநபர் ஜனவசியம், தனிநபர் வெறுப்பு, தனிநபரை வில்லன் ஆக்குவது, அல்லது தியாகியாக்குவது போன்ற போக்குகள் தமிழரசியலில் வழமையானவை. குறிப்பாக சமூக வலைத்தளங்களின் பெருக்கத்தோடும் யுடியூப்களின் பெருக்கத்தோடும் அந்தப்போக்கு மேலும் அதிகமாகியிருக்கிறது.

சமூகவலைத்தளங்களில் ஒருபுறம் யாரும் கருத்து கூறலாம் என்ற சுதந்திரம் உண்டு. இன்னொருபுறம் கருத்துக் கூறும் ஒருவர் அதற்குரிய தகமையோடு இருக்க தேவையில்லை என்ற ஆபத்தும் உண்டு. தனக்கு விளங்காத ஒன்றைப் பற்றி தனக்கு தெரியாத ஒன்றைப் பற்றி கருத்து கூறும் சுதந்திரத்தை தகவல் புரட்சி கொடுத்திருக்கிறது. இது பல இடங்களில் வெறுப்புப் பேச்சுக்களை பரப்புவதற்கும் துறைசார் அறிவு இல்லாதவர்கள் தங்களுக்கு எல்லாம் தெரிந்ததுபோல கதைப்பதற்கும் மற்றவர்களை இகழ்வதற்கும் விமர்சிப்பதற்கும் காரணமாக அமைகின்றது.

இது அபிப்பிராயங்களின் காலம். அபிப்ராயங்கள் சரியாக இருக்க வேண்டும் என்று இல்லை. அதனால் உண்மை எனப்படுவது யானை பார்த்த குருடர்களின் கதையாகிவிட்டது. இது துறைசார் நிபுணர்களை சமூக வலைத்தளங்களுக்கு வெளியே தள்ளுகிறது என்று அவதானிக்கப்பட்டுள்ளது. இது கடந்த நூற்றாண்டில் வாழ்ந்த மேதைகளில் ஒருவராகிய ஆதர் கோஸ்லர் உரைத்த தீர்க்கதரிசனத்தைப் போல, "மீடியோக்கர்கள்" அதாவது மந்தமானவர்களே, சராசரிகளே எல்லா இடங்களிலும் மேலெழுந்து வருகிறார்களா?

இந்த சராசரிகளின் குழு மனநிலை அல்லது கூட்டு மனோநிலையானது யாராவது ஒரு கதாநாயகரை அல்லது தியாகியைத் தேடுகின்றது. அதேயளவுக்கு யாரையாவது துரோகியாக்க அல்லது வில்லனாக்கப் பார்க்கின்றது. கடந்த நூற்றாண்டில் பனிப்போரில் இது உலகம் முழுவதும் பரவலாகியது. தமிழரசியலில் மட்டுமல்ல உலகம் முழுவதும் அது ஒரு நோயாகப் பரவிக் காணப்படுகின்றது.

பொதுப்புத்திக்கு தீனி போடும் ஊடக ஒழுக்கம் எனப்படுவது, பெருமளவுக்கு சமூக முரண்பாடுகளையும் இன முரண்பாடுகளையும் ஊக்குவிப்பதாக, குழு உணர்வுகளை பரப்புவதாகக் காணப்படுகின்றது. மியான்மரில், ரோஹிங்கா முஸ்லிம்களுக்கு எதிரான இனப்படுகொலைக் களத்தில் முகநூல் அப்படி ஒரு பாத்திரத்தை வகித்திருப்பதாக ஐநா குற்றம் சாட்டியிருக்கிறது. தனிமனித வழிபாட்டையும் ஒரு சமூகத்துக்கு எதிரான வெறுப்பையும் தமது அரசியல் ஒழுக்கமாக கொண்டிருக்கும் தரப்புகள் சமூக வலைத்தளங்களையும் இலத்திரனியல் வலை அமைப்புக்களையும் சிறப்பாகப் பயன்படுத்தி வாக்குத் திரட்டுவதைக் காண முடிகிறது.

மார்க்சிய மூலவர்கள் கூறுவார்கள் "கருத்து மக்களைப் பற்றிக் கொண்டால் அது சக்தியாக உருவெடுக்கும்" என்று. ஆனால் கருத்து மக்களைப் பற்றுவதை விடவும் உணர்ச்சிகரமான பேச்சுக்கள்தான் மக்களை எளிதாகப் பற்றிப் பிடிக்கின்றன. அதற்கு சமூக வலைத்தளச் சூழல் அதிகம் வாய்ப்பாகக் காணப்படுகின்றது என்பதனை ஐநாவின் சிறப்பு தூதுவர்களின் வெறுப்பு பேச்சு தொடர்பான விமர்சனங்களிலும் குறிப்புகளிலும் காண முடிகிறது.

இப்படிப்பட்ட ஒரு பின்னணிக்குள் பொது வேட்பாளருக்கு ஆதரவாகவும் எதிராகவும் என்ற துருவ நிலைப்பட்ட போக்கானது வில்லன்களையும் துரோகிகளையும் தேடுகிறது. அதன் வெளிப்பாடாகத்தான் பொது வேட்பாளரை ஆதரித்துப் பேசும் ஒரு பகுதியினர் (எல்லாரும் அல்ல) யாராவது ஒரு அரசியல்வாதியை அல்லது கட்சியை பகை நிலையில் வைத்துச் சித்தரிக்கின்ற ஒரு போக்கைக் காணலாம்.

அதற்கு ஒரு பலமான காரணம் கூறப்படுகிறது. தமிழ் அரசியலில் ஒரு அரசியல் பிரமுகர் அல்லது ஒரு கட்சி, பொது வேட்பாளர் என்ற நிலைப்பாட்டைத் தரக்குறைவான வார்த்தைகளால் விமர்சித்து வருகின்றது. ஒரு கட்சி கூறுகிறது பொது வேட்பாளரை முன்னிறுத்துகின்றவர்கள் இந்தியாவின் அடிவருடிகள் அல்லது இறுதித் தீர்வுக்காக இந்தியாவை எதிர்நோக்கி காத்திருப்பவர்கள் அல்லது யாரோ வெளிச் சக்திகளின் தூண்டுதலால் அதனைச் செய்பவர்கள் என்று. அதேபோலவே ஓர் அரசியல்வாதி அதனை கோமாளிக் கூத்து என்று கூறி வருகிறார். இவர்களுக்கு எதிராக பதில் கூற முற்படும் ஏனைய தரப்புகள் அவர்களுடைய பாணியிலேயே தாங்களும் விமர்சனங்களை முன்வைக்கின்றார்கள். இதைத்தான் இக்கட்டுரையின் தொடக்கத்தில் கூறப்பட்ட அரசியல் விமர்சிகர் சுட்டிக்காட்டினார்.

தமிழ்ப்பொது வேட்பாளர் என்ற கருத்தை முன்வைத்து அதற்காக உழைத்தவர்கள் மத்தியில் தமிழரசியல் பரப்பில் அதிகமாக எழுதும் அரசியல் விமர்சகர்கள் காணப்படுகிறார்கள். அவர்கள் ஓர் அமைப்பாகத் திரண்டு அந்தக் காரியத்தை முன்னெடுத்தபொழுது தங்களுக்கு இடையே ஒரு உடன்படிக்கைக்கு வந்தார்கள். தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்துவதற்காக கட்சிகளோடு இணைந்த ஒரு பொதுக் கட்டமைப்பை உருவாக்க வேண்டியிருக்கும். அதனால் எந்தக் கட்சிகளோடு இணைந்து ஒரு கட்டமைப்பை உருவாக்க வேண்டுமோ அதே கட்சிகளை கடுமையாக விமர்சித்தபின் அவற்றுடன் இணைய முடியாது. அதனால் கட்சிகள் மீதான விமர்சனங்களை ஒப்பீட்டளவில் குறைக்கவேண்டும் என்பதே அந்த உடன்பாடு. அதிலும் குறிப்பாக தனி நபர்களுக்கு எதிராகவோ அல்லது ஒரு தனிக் கட்சிக்கு எதிராகவோ விமர்சனங்களைத் தவிர்க்கவேண்டும் என்றும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஆனால் அது நடைமுறையில் சாத்தியப்படவில்லை. ஏனென்றால் எதிர்த் தரப்பு விமர்சனங்களை தனிநபர் தாக்குதல்களாகவும் சூழ்ச்சி கோட்பாடுகள் ஆகவும் முன்வைத்தபொழுது, அதனை சமூக வலைத்தளங்களும் யூடியூப்களும் ஊக்குவித்தபொழுது அந்த வெறுப்புப் பொறிக்குள் ஒரு பகுதியினர் இயல்பாகவே விழும் ஆபத்து அதிகரிக்கின்றது. அதன் விளைவுதான் இக்கட்டுரையின் தொடக்கத்தில் கூறப்பட்ட விமர்சனம்.

தமிழ் பொது வேட்பாளரை முன்னிறுத்தும் தரப்புகள் அவ்வாறு ஒரு நபரை எதிரியாக அல்லது வில்லனாக காட்டும் பிரச்சார வடிவத்தை முன்வைக்க முடியாது. ஏனென்றால் தமிழ் பொது வேட்பாளர் என்ற விடயம் தமிழ் தேசிய ஐக்கியத்தின் குறியீடு. அது தமிழ் மக்களை ஒரு தேசமாகத் திரட்டுவதை நோக்கமாகக் கொண்டது. அப்படிப் பார்க்கும் பொழுது தேசத்துக்குள் எல்லா வகையான மக்களும் என் கட்சிகளும் கூட வரும். ஒரு தேசம் என்று பார்த்தால் அங்கே எல்லாமே தட்டையாக ஒற்றைப் பரிமாணமாக இருக்காது. அங்கு பல அடுக்குகள் இருக்கும். நுண் அடுக்குகள் இருக்கும். எல்லாவற்றினதும் கூட்டுச் சேர்க்கைதான் தேசம். எனவே ஒரு தேசிய அமைப்பு அல்லது ஒரு தேசியப் பொது நிலைப்பாடு என்பது இந்த எல்லா அடுக்குகளையும் பிரதிபலிப்பதுதான்.

அதிலும் குறிப்பாக தமிழ்ப்பரப்பில் அரசாங்கத்தோடு நிற்கும் அரசியல்வாதிகள் உண்டு. வடக்கு கிழக்கைப் பிரிக்க வேண்டும் என்று கேட்கும் அரசியல்வாதிகள் உண்டு. சாதியை சமயத்தை முதன்மைப்படுத்தும் அரசியல்வாதிகள் உண்டு. இந்த அரசியல்வாதிகள் அல்லது கட்சிகளின் பின் சொல்லும் மக்களும் தமிழ்மக்களே. அவர்களையும் அந்த கட்சிகளையும் பிரித்துப்பார்க்க வேண்டும். அவர்கள் தமிழ்த் தேசிய ஐக்கியத்தின்பால் வென்றெடுக்கப்பட வேண்டிய மக்கள். அவர்கள் பின்பற்றும் கட்சியின் கொள்கைகளுக்காக அவர்களையும் துரோகிகள் என்று முத்திரை குத்த முடியாது. குத்தவும் கூடாது. அவர்களும் எங்களுடைய மக்களே. அவர்களும் நமது தேசத்தின் ஒரு பகுதியே. அவர்களை எப்படி வென்றெடுப்பது? அவர்களை எப்படித் தேசத் திரட்சிக்குள் உள்ளீர்ப்பது? என்று சிந்திப்பது தான் தமிழ் பொது வேட்பாளரை ஆதரிக்கும் தரப்புகளின் நிகழ்ச்சி நிரல் ஆக இருக்க வேண்டும். மாறாக, தேசத் திரட்சியை உடைக்கும் விதத்தில் தேசத்தை தியாகி - துரோகி என்று பிரிப்பதோ கதாநாயகர்கள் - வில்லர்கள் என்று பிரிப்பதோ பொது வேட்பாளரை முன்னிறுத்தும் தரப்புகளுக்கு பொருத்தமானது அல்ல. குறிப்பாக ஒரு தனி அரசியல்வாதிக்கோ அல்லது ஒரு தனிக் கட்சிக்கோ எதிராக பொது வேட்பாளர் முன்னிறுத்தப்படவில்லை. அவர் ஒரு பொது இலட்சியத்துக்காக ஒரு பொது நிலைப்பாட்டுக்காக தான் நிறுத்தப்படுகிறார்.

ஆனால் நடைமுறை உணர்ச்சிகரமானதாக இருக்கிறது. பொது வேட்பாளரை எதிர்க்கும் கட்சிகளும் நபர்களும் அந்த கருத்துக்கு எதிராக முன்வைக்கும் விமர்சனங்கள் கீழ்த்தரமானவர்களாக சூழ்ச்சி கோட்பாடுகளாக தனி நபர் தாக்குதல்களாக அமையும் பொழுது, பொது வேட்பாளர் ஆதரிக்கும் தரப்புகள் பொறுமை இழக்கின்றன. அவ்வாறு பொறுமை இழந்ததன் விளைவை அண்மை வாரங்களாக பார்க்க முடிகிறது. நேர்காணல்களிலும் கட்டுரைகளிலும் அவ்வாறான விமர்சனங்களைக் காணமுடிகிறது.

பொதுத் தமிழ்ப் புத்தி அதை ஆதரிக்கின்றது. அதை ஆர்வத்தோடு எதிர்பார்க்கின்றது. ஒரு சமூகத்தின் பொதுப் புத்தியானது பெரும்பாலும் கதாநாயகன் எதிர் வில்லன் என்ற மோதலை ரசிப்பது. சமூக வலைத்தளச் சூழல் அதற்கு வேண்டிய அளவு வாய்ப்புகளை கொடுக்கின்றது. செய்தித் தாகத்தோடு அலையும் ஊடகங்கள் அந்த மோதலை ஊக்குவிக்கின்றன; ரசிக்கின்றன. ஆனால் தேசத்தைக் கட்டி எழுப்ப வேண்டும் என்று சிந்திக்கும் எவரும் அந்த பொதுப் புத்திப் பொறிக்குள் விழுந்து விட முடியாது. தமிழரசியலை இனமான உணர்ச்சிச் சூழலில் இருந்து விடுவித்து அறிவியல் மையப்படுத்தினால்தான் தமிழ் வாக்காளர்களை விமர்சனப்பூர்வமாக சிந்திக்கும் வாக்காளர்களாக மாற்றலாம். விமர்சன பூர்வமாகச் சிந்திக்கும் வாக்காளர்களைப் பெருக்குவது என்பது தமிழரசியலை அகக்கூடியபட்சம் அறிவியல் மயப்படுத்துவதுதான். உணர்ச்சிகரமான வாதப்பிரதிவாதங்களோ விவாதம் இடைகளோ அல்லது சுழலும் சொற்போர்களோ ஒரு சமூகத்தின் அரசியலை அறிவியல் மயப்படுத்த உதவப்போவதில்லை.

ஒரு சமூகம் உணர்ச்சி வசப்படும் பேச்சாளர்களின் பின் போகிறது என்றால் அங்கே அரசியல் அறிவியல் மையப்படுத்தப்படவில்லை என்று பொருள். எங்கே அரசியலை அறிவு பூர்வமாக அல்லது ஓர் அறிவியல் ஒழுக்கமாக அணுகும் தரப்புகளுக்கு மதிப்பில்லாமல் போகின்றதோ அங்கே உணர்ச்சி வசப்படுத்தும் மேடைப்பேச்சாளர்கள் பெரிய ஆட்கள் ஆகிவிடுகிறார்கள். இப்படிப்பட்டதோர் அரசியல் சூழல் தேசத்தைக் கட்டியெழுப்ப உதவாது. மாறாக, பொது வேட்ப்பாளரை முன்னிறுத்தி தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான அறிவியல் பாரம்பரியத்தையும், ஊடகப் பாரம்பரியத்தையும், அரசியல் விவாதப் பாரம்பரியத்தையும் வளர்த்தெடுக்க வேண்டும்.


30th Anniversary Grand Sale
SAMY & SONS
Wholesalers & Retailers
S&S
Since 1994
GRAND SALE
JUNE. 1ST TO JULY. 01ST
Reliable
Trustworthy
Friendly
Textiles, Jewellery, Gift Items & Fancy Goods
Express Money Transfer,
Pawn Broker, Etc.
Quality
Quantity
Discounts
BLOWOUT SALE EVERYTHING MUST GO
$33
10 Cup
Premier
$45
Preethi Eco Plus 3pcs
$135
9pcs
$115
EACH $7.00
Saree Blouses,
Saree Underskirts,
Senorita Bras,
Saarams, Skirts,
T-Shirts,
And Many More!
NEW ARRIVALS
Pattus, Cut Works,
Bridal Soft Silks.
Sequins, &
Cotton Sarees,
Special Salwars
Fancy Lengha Suits,
Kurtha Blouses,
Kurtha Suits,
and many more!
All At Unbelievable
Blowout Prices.
EACH $12.00
Kurtha Tops,
Kurtha Shirts (Men),
Denim Pants,
Dress Pants,
Shirts(Men),
Fancy Frocks(Kids),
Salwars (All Sizes),
Milk Cooker,
Appa Chatti,
Puttu Kudam,
Archunai Basket,
Kundu Dosa Chatti,
Coconut Scrapper.
Steamer $29.00
Banana Leaf Plate $3.50
3 Set Satti $18.00
Silver or Brass Thattus,
and more!
Many More
Items on Sale:
OPEN
7 Days
10:00am
9:00 pm
DOOR BUSTER
First 25
Customers Get A
Free Rice Cooker
If Purchase Is Over
$300
(Clothing Items)
Fancy Items From 50¢
Tel: 416-298-1598
Cell: 647-239-SAMY (7269)
1884 Kennedy Road (at Ellesmere)
Scarborough, Ontario M1P 2L8
www.samyandsons.com
Email: samyandsons@gmail.com
DOOR BUSTER
First 25
Customers Get
Free HOT BOX
If Purchase Is
Over $150
(Clothing Items)
SALE! SALE!!! SALE!! SALE! SALE!!! SALE!! SALE! SALE!!! SALE!! SALE!
அன்றும், இன்றும், என்றும் ஒரே குடையின் கீழ் சாமி அன்ட் சன்ஸ்

# சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ள விடத்தல் தீவு கண்டல் தாவர காணிகள் விடுவிப்பு – வலுக்கும் எதிர்ப்பு

இலங்கை செய்திகள் Sri Lanka News

மன்னார் நிருபர்



(20-06-2024)

வனஜீவராசிகள் மற்றும் வன வளங்கள் அமைச்சர் பவித்ரா தேவி வன்னியாராச்சிக்கு வழங்கப்பட்ட அதிகாரத்துக்கு அமைய மன்னார் மாவட்டம் விடத்தல் தீவு இயற்கை சரணாலயம் என குறிப்பிடப்பட்ட பகுதி நிறைவுக்கு வருவதாக கடந்த மாதம் 6 ஆம் திகதி விசேட வர்த்தமானி அறிவித்தல் ஒன்று வெளியிடப்பட்டிருந்தது.

இவ்வாறு விடத்தல் தீவு பகுதியில் வனவள திணைக்களத்திற்கு சொந்தமான காணிகள் கடல்சார் பூங்கா/ கடல் வேளண்மைக்கு விடுவிக்கப்படுவதாக வர்த்தமானி அறிவிப்பின் ஊடாக அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் குறித்த காணி விடுவிப்பு தொடர்பில் பல்வேறு சர்ச்சைகள் எழுந்துள்ளது.

குறிப்பாக கடந்த வாரம் இடம் பெற்ற மன்னார் மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டத்தின் போது குறித்த காணி விடுவிக்கப்பட்டமை தொடர்பில் பல்வேறு வாத பிரதிவாதங்கள் இடம் பெற்றது.





பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் இது தொடர்பில் கருத்து வெளியிடுகையில், அபிவிருத்தி என்ற பெயரில் இயற்கையான கண்டல் காடுகளை அழித்து மீன்பிடி நடவடிக்கைகளை தடுத்து அமைக்கப்படும் கடல்சார் பூங்காவிற்கு அனுமதி வழங்க முடியாது என தெரிவித்திருந்தார்.

அதே நேரம் மீனவர்கள் சார்பில் கருத்து தெரிவிக்கப்பட்ட போது இந்த 400 ஏக்கர் நிலமும் ஒரு தனியார் நிறுவனம் ஒன்றுக்கு பண்ணை அமைப்பதற்கு வழங்குவதற்காகவே விடுவிக்கப்பட்டதாக சந்தேகம் மீனவர்கள் மத்தியில் காணப்படுவதாக தெரிவித்தனர்.

வெறுமனே அதை 400 ஏக்கர் பிரச்சினையாக கருத கூடாது எனவும் அதை தொடர்ந்து விடத்தல் தீவு பகுதியோடு சேர்ந்த 1400 ஏக்கர் காணிகள் ஆபத்தில் இருப்பதாக வடமாகாண கடற்றொழில் இணையத்தின் ஊடக பேச்சாளர் ஆலம் குறிப்பிட்டிருந்தார்.

அதே நேரம் குறித்த காணி விடுவிக்கப்பட்டமை தொடர்பாக தங்களுக்கு எந்த ஒரு அறிவுறுத்தலும் வழங்கப்படவில்லை எனவும் 1000 ஏக்கர் காணிகள் விடுவிப்பு தொடர்பில் அளவீடுகள் இடம் பெற்ற நிலையில் 400 ஏக்கராக குறைக்கப்பட்டு தற்போது இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளதாக மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் தெரிவித்திருந்தார்.

அதே நேரம் மன்னார் மாவட்ட காணிகளுக்கு பொறுப்பான மேலதிக அரசாங்க அதிபர் இது தொடர்பாக தெரிவித்த போது குறித்த வர்த்தமானி அறிவித்தல் வெளியானதை தொடர்ந்து மன்னார் வனவள திணைக்கள அதிகாரிகளிடமும் கொழும்பு மாவட்ட உயர் அதிகாரிகளிடமும் அறிய முற்பட்ட வேளை குறித்த அறிவித்தல் தொடர்பில் அவர்களுக்கே தெரியாத நிலையே காணப்படுவதாக தெரிவித்தார்.

மேலும் குறித்த வர்த்தமானி அறிவித்தல் சிங்கள மொழியிலே காணப்படுவதாகவும் அதில் தெரிவிக்கப்பட்ட இணைப்புகள் எதுவும் வர்த்தமானியில் காணப்படவில்லை எனவும் அதில் ஒழுங்கான விபரங்கள் தெரிவிக்கப்படவில்லை எனவும் அவ் வர்த்தமானி தொடர்பில் யாருக்கும் ஒழுங்கான விளக்கம் இல்லை என தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் குறித்த விடுவிக்கப்பட்ட காணிகள் வேறு எந்த உள்ளூர் நிறுவனங்களுக்கோ அல்லது வெளிநாட்டு நிறுவனங்களுக்கோ வழங்காது அப்பகுதியை சேர்ந்த மக்களுக்கு மட்டுமே வழங்க வேண்டும் என மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது இருந்தது.

இந்த நிலையில் நேற்றைய தினம் யாழ் வடமராட்சி ஊடக இல்லத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பு ஒன்றில் "விடத்தல் தீவு விடுவிக்கப்பட்டு மக்களின் பாவனைக்கு பயன்படுத்துவதாக கடற்றொழில் அமைச்சால் தெரிவிக்கப்படுகின்றது.

எங்களை பொறுத்த வரையில் விடத்தல் தீவு என்பது கடலால் சூழப்பட்ட பிரதேசம். அது பூகோள ரீதியில் பெறுமதியான பிரதேசம். பருவ காலத்தில் மீன் இனங்கள் அந்த பிரதேசத்திலேயே இனப்பெருக்கம் செய்து ஆழ்கடலுக்கு செல்கின்றன. இலங்கையின் மிகப்பெரிய மீன் உற்பத்தி வங்கி அதாவது இந்த திணைக்களங்களினால் அறியப்படாத மீன் உற்பத்தி வங்கியும் இதை எமது மக்களின் வாழ்வாதாரத்துக்கும் அபிவிருத்திக்கும் பயன்படுத்துவதாக கூறி மிக பலம் பொருந்திய பல்தேசிய கம்பெனிகளுக்கு மக்கள் என்ற போர்வையில் மக்களை பினாமியாக வைத்து விற்பனை செய்வதற்கான மறைமுகமான திட்டமாகத்தான் இது இருப்பதாக அகில இலங்கை மீனவ மக்கள் தொழிற்சங்க வடமாகாண இணைப்பாளர் அன்னலிங்கம் அன்னராசா தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் குறித்த காணி விடுவிப்பு தொடர்பில் தெளிவுபடுத்தப்பட வர்த்தமானி அறிவித்தல் சம்பந்தப்பட்ட அமைச்சாலோ அமைச்சராலோ வழங்கப்படாத நிலையில் குறித்த காணிகளை விடுவிக்க வேண்டாம் எனவும் அவை பாதுகாக்கப்பட வேண்டும் எனவும் கோரி விரைவில் விடத்தல் தீவு மக்களால் போராட்டம் ஒன்று இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.


குருவடி சரணம் ஓம் சக்தி திருவடி சரணம்

மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி குருமன்றத்தில் சிறப்பு பூசையுடன், தொடர்ந்து 30 ஆண்டு நிறைவு விழாவும்

மார்க்கம் வீதி ஸ்காபரோவில் அமைந்திருக்கும் மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி குருமன்றத்தில் 23-06-2024 ஞாயிற்றுக்கிழமை காலை 8:30 தொடக்கம் பூசைகள் ஆரம்பமாகி 12:30 மணி வரை சிறப்பு ஆராதனை நடைபெற்று மகேஸ்வரபூசையுடன் முடிவடையும்.



அத்துடன் 23-06-2024 அதே தினத்தில் மாலை 2:00 மணி முதல் 7:00 மணி வரை மேல்மருவத்தூர் சித்தர்பீட கருவறையில் அவதார தெய்வமாக அருள் பாலித்து வரும் பங்காரு பராசக்தியின் அருளைப் பெறும் துணை ஆலயம் கனடாவில் தாய் மன்றமான அதிபராசக்தி குருமன்றம் தனது 30 ஆண்டுகள் பல சக்திகள் கைகோர்த்து பயணித்து, தொண்டுகள் செய்து தொடர்ந்து பணியாற்றி அருளைப்பெற்று வருகின்றார்கள். அதை கொண்டாடும் முகமாக தமிழ் இசைக்கலாமன்றத்தில் சிறப்பாக நடத்த திருவருள் கூடியுள்ளது. சிறப்பு விருந்தினர் உரை, ஆன்மீக சொற்பொழிவு, மற்றும் நடனம், இசை நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளது.

இடம்: ஒன்ராறியோ தமிழ் இசை கலாமன்றம்
1120 Tapscott Road, Scarborough

காலம்: 23-06-2024
பிறபகல் 2:00 மணி தொடக்கம் மாலை 7:00 மணி வரை

அனைத்து சக்திகளையும் அன்புடன் அழைக்கின்றனர்.

80, Nashdene Rd, Unit #99. Scarborough, Ontario -- (416) 436-9647

# SAME BREW A LEGENDARY ROAR

**SINHA beer, your beloved brew, continues to reign supreme, honouring its iconic LION identity, the name by which it is recognised worldwide.**

If you've ever indulged in the inimitable flavour of Sinha Stout, you've likely been captivated by its unique taste. While retaining its unique character, Sinha is now poised to embrace its original identity as Lion, the name that conquered the hearts of beer afficionados around the world. Lion Stout will remain the same signature brew you've come to know and love as Sinha.

Originating from the island of Ceylon, known for its legendary folklore, the legacy of the Lion roared into life in 1881. Unleashing its distinctly bold flavour through time-honoured recipes, the daring taste of Lion made its mark and became a revered name in the island. In 1998, the Lion ventured into uncharted territories, crossing borders to establish its rightful dominion in over 19 countries, triumphing over the palates of beer enthusiasts worldwide.

Today, Lion Brewery stands as a testament to the enduring legacy of time, steeped in tradition, and a relentless commitment to crafting beers that pack a punch. Skillfully fusing age-old recipes with state-of-the-art brewing techniques, Lion will continue its reign of dominance in Canada, bringing you a flavour that transcends generations.

**ONLY** STOUT IN ASIA TO BE LISTED IN 300 BEERS TO TRY BY ROGER PROTZ

**ONLY** BEER IN THE WORLD ENDORSED BY MICHAEL JACKSON THE LEGENDARY BEER WRITER

99/100 ratebeer

AVAILABLE IN 473ML CANS AT

LCBO — LCBO.COM

BEER STORE — THEBEERSTORE.CA

FOR MORE INFORMATION PLEASE CALL:
FINE BEERS AGENCY LIMITED AT 416-443-2020 OR
EMAIL FRED@FINEBEERS.CA










## கொழும்பில் கட்டிடங்கள் இரண்டும் காணியும் விற்பனைக்கு!

**Property with Two Buildings For Sale in Colombo**

For Sale:
Land with 17 Perch Prime Commercial/Residential Property with Two Buildings in the Heart of Colombo

Location:
Colombo-5 facing main Havelock Road.
Boasting a prime location and easy access to key amenities, this property is ideal for residential or commercial purposes.

**This prime investment opportunity includes two buildings bordering Colombo-7, a 3-story building facing the main road and a 4-story building.**

**For more details and to schedule a viewing, please contact:**

Rajeev: **(416) 727-2325**
**+94771683728 (LK)**
or visit: **bit.ly/68col**

இலங்கை செய்திகள் Sri Lanka News

# இலங்கையில் குறிப்பாக வட பிராந்தியத்தில் ஊடகவியலாளர்களுக்கு எதிராக அதிகரித்து வரும் வன்முறைகள் குறித்து கவலையுடன் எழுதுகிறோம்

## ஊடகவியலாளர்களினால் ஐக்கியநாடுகள் சபையின் பொது செயலாளருக்கு மகஜர்!

**விஸ்ணுதாசன் ஜனன் (யாழ் ஊடகவியலாளர்)**

*ஐ.நாவிற்கு வழங்கப்பட்ட கடிதம்*

இலங்கையில் ஊடகவியலாளர்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபைக்கு மனு.

பெறுநர்: பொதுச் செயலாளர்
ஐக்கிய நாடுகள்
405 கிழக்கு 42வது தெரு
நியூயார்க், NY 10017, அமெரிக்கா



பொருள்: இலங்கையில் ஊடகவியலாளர்களுக்கு எதிரான வன்முறைகளைத் தீர்ப்பதற்கு அவசர நடவடிக்கை தேவை

பொதுச் செயலாளர் அவர்களே,

கடந்த முப்பது வருடங்களுக்கு மேலாக, இலங்கையின் வடக்கில் ஊடகவியலாளர்களுக்கு எதிராக எண்ணற்ற தாக்குதல்கள், கொலைகள் மற்றும் அச்சுறுத்தல்கள் இடம்பெற்றுள்ளன.

இந்த சம்பவங்கள் நடந்தாலும், முறையான விசாரணை மற்றும் பொறுப்புக்கூறல் நடைபெறவில்லை. இந்த தொடர்ச்சியான வன்முறை மற்றும் தண்டனையின்மை பல முக்கியமான சிக்கல்களை முன்னிலைப்படுத்தியுள்ளது.

இலங்கையில் குறிப்பாக வட பிராந்தியத்தில் ஊடகவியலாளர்களுக்கு எதிராக அதிகரித்து வரும் வன்முறைகள் குறித்து கீழே கையொப்பமிட்டுள்ள நாங்கள் உங்களுக்கு மிகுந்த கவலையுடன் எழுதுகிறோம்.

பத்திரிகை சுதந்திரம் என்பது ஜனநாயகத்தின் முக்கியமான தூணாக உள்ளது, அது சர்வதேச சட்டத்தின் கீழ் பாதுகாக்கப்படும் அடிப்படை மனித உரிமையாகவும் உள்ளது. துரதிஸ்டவசமாக, இலங்கையில் குறிப்பாக வடக்கில் உள்ள ஊடகவியலாளர்கள் அதிகரித்து வரும் அச்சுறுத்தல்கள், துன்புறுத்தல்கள் மற்றும் வன்முறைகளை எதிர்கொள்கின்றனர்

இது யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சமூகத்தில் பாதிக்கப்பட்ட மக்களிற்காக அவர்கள் ஆற்றவேண்டிய பணியை அச்சுறுத்தலுக்குள்ளாக்குவதோடு சுயதணிக்கைக்கும் வழிவகுக்கின்றது.

இனந்தெரியாத நபர்கள் ஊடகவியலாளர்களைக் குறிவைப்பதால் அவர்கள் ஒருவகையான இனம்புரியாத அச்ச உணர்வில் வாழ்கிறார்கள், அவர்களால் தமது ஜனநாயகக் கடமையை செய்ய முடியவில்லை. இதனை தங்கள் மேலான கவத்துக்கும் நடவடிக்கைக்காகவும் கொண்டுவருகின்றோம்.

பின்னணி

கடந்த மூன்று தசாப்தங்களாக, இலங்கையில் ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்கள் கவலையளிக்கும் வகையில் அதிகரித்து வருகின்றன.

இந்தத் தாக்குதல்களில் ஊடகநிறுவனங்கள் மீதான தாக்குதல்கள், ஊடகவியலாளர் மீதான உடல்ரீதியான தாக்குதல்கள், கடத்தல்கள், மிரட்டல்கள், உடமைகளை சேதமாக்குதல், உறவினர்களை மிரட்டுதல், உயிர் ஆபத்து அச்சத்தை உருவாக்குதல், கொலைகள் என்பன அடங்கும்.

இந்தக் குற்றங்களைச் செய்பவர்கள் பெரும்பாலும் தண்டனையின்றி தப்பித்து சுதந்திரமாக தொடர்ந்து செயல்படுகிறார்கள், இதனால் பல ஊடகவியலாளர்கள் அச்ச உணர்வில் வாழ்கிறார்கள், சிலர் நாட்டைவிட்டு வெளியேறியிருக்கிறார்கள்.

இதனால் நாட்டின் ஜனநாயகப்பணிக்கு தொடர்ந்து இடையூறு விளைவிக்கப்படுகின்றது.

பாதிக்கப்பட்டவர்களுக்காக குரல் கொடுத்தல், ஊழலை வெளிப்படுத்தல், மனித உரிமை மீறல்களை அறிக்கையிடுதல், பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிகளை மக்கள் சார்பாக வெளிப்படுத்தல் பணிக்காக வட இலங்கையில் ஊடகவியலாளர்கள் குறிவைக்கப்பட்டுள்ளனர்.

இதனால் அவர்கள் உடல்ரீதியான தாக்குதல்கள் மற்றும் அச்சுறுத்தல்களை எதிர்கொண்டுள்ளனர்.

இதற்கு அண்மைய சமபவம் சிறந்த எடுத்துக்காட்டாக உள்ளது.

வட இலங்கையில் உள்ள ஊடகவியலாளர் பிரதீபனின் வீடு, இனந்தெரியாத நபர்களால் யூன் 13,2024 நள்ளிரவுத் தாக்கப்பட்டது.

இந்த சம்பவம் வடக்கில் ஊடகவியலாளர்களுக்கு எதிரான திட்டமிட்டு குறிவைக்கப்படும் இரகசிய மற்றும் தொடர்ச்சியான வன்முறை வடிவத்தின் ஒரு பகுதியாகும், இது மனித உரிமை மீறல்கள் மற்றும் பிற முக்கியமான பிரச்சினைகள் குறித்து வெளியுலகிற்கு தெரியப்படுத்துதல், மற்றும் குரலற்றவர்களின் குரலாக ஒலிப்பவர்களை திட்டமிட்டு அடக்குவதை நோக்கமாகக் கொண்டது.

பொய்யான போலீஸ் வழக்குகள்:

அண்மையகாலங்களில் வட இலங்கையில் ஊடகவியலாளர்கள் மீது மிரட்டும் நோக்கம் கொண்டு அவர்களைக் கட்டுப்படுத்தும் வகையில் பொலிசாரினால் பொய் வழக்குகள் பதிவு செய்தல். நீதிமன்ற தடை உத்தரவுகள் பிறப்பித்தல் என்பன அதிகரித்துள்ளன.

இந்த பொய் வழக்குகளை எதிர்கொள்வதற்கு ஊடகவியலாளர்கள் சிரமப்படுகிறார்கள்.

இதற்காக அடிக்கடி நீண்ட சட்டப் போராட்டங்களை நடத்த வேண்டியுள்ளது, நிதி நெருக்கடி மற்றும் சம்பந்தப்பட்ட பத்திரிகையாளர்களுக்கு மன அழுத்தத்திற்கு உள்ளாகிறார்கள்.

போலீஸ் அச்சுறுத்தல்கள் மற்றும் கட்டுப்பாடுகள்:

ஊடகவியலாளர்கள் போலீஸ் அதிகாரிகளின் அச்சுறுத்தல்களையும் விசாரணை என்ற போர்வையில் துன்புறுத்தல்களையும் நேரடியாகவும் மறைமுகமாகவும் எதிர்கொண்டுள்ளனர்,

இதில் அரசாங்க செயல்பாடுகள் குறித்து அறிக்கையிடுவதைத் தடை செய்வது உட்பட. இந்த வேண்டுமென்றே ஊடக வெளிப்பாட்டு நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவிப்பதால், ஊடகவியலாளர்கள் தங்கள் கடமைகளைச் செய்ய முடியாது கடுமையான தடைகள் ஏற்படுத்தப்படுகின்றன.

இனந்தெரியாத ஆயுதக் குழுக்களால் அச்சுறுத்தல்:

ஊடகவியலாளர்கள் அடையாளம் தெரியாத நபர்களிடமிருந்து அடிக்கடி அச்சுறுத்தல்களைப் பெறுகிறார்கள், இது ஒரு பரவலான பயம் மற்றும் ஜனநாயக நிச்சயமற்ற சூழலை உருவாக்குகிறது.

இந்த அச்சுறுத்தல்களில் பெரும்பாலும் உயிருக்கு அச்சுறுத்தல்கள் மற்றும் அவர்கள் தொடர்ந்து பொலிசில் புகாரளித்தும் நடவடிக்கை எடுக்கப்படாமை, ஊடகவியலாளர்கள் மோசமான விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என்ற எச்சரிக்கையையே சுட்டிக்காட்டுகிறது.

சமூக ஊடகங்கள் மூலம் அவதூறு:

இனந்தெரியாத நபர்கள் மூலம் சமூக ஊடக தளங்களில் ஒருங்கிணைந்த தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுவதோடு அதனை நேரடித் தாக்குதலுக்கான விடயப்பொருளாக காண்பிக்க விளைவித்தல் போன்ற இரகசிய வேலைத்திட்டங்களையும் வடஇலங்கையில் இனங்காண முடியும்.

இது ஊடகவியலாளர்ளை அவதூறு மற்றும் மதிப்பிழக்கச் செய்யப்படுவதனூடாக அவர்களின் ஜனநாகப்பணியை செய்யவிடாது தடுத்தலாகும்.

இந்த பிரச்சாரங்கள் அவர்களின் நற்பெயருக்கு களங்கம் மற்றும் அவர்களின் நம்பகத்தன்மையை குறைமதிப்பிற்கு உட்படுத்துவதனூடாக அவர்கள் பணிசெய்யவிடாது தடுத்தலாகும்.

இராணுவப் புலனாய்வுப் பிரிவினரால் கண்காணிப்பு மற்றும் அச்சுறுத்தல்:

வடக்கு பிராந்தியத்தில் இராணுவ வீரர்களின் இருப்பு மற்றும் செல்வாக்கு அச்சுறுத்தல் மற்றும் அச்சத்தின் சூழலுக்கு பங்களித்துள்ளது.

ஊடகவியலாளர்கள் இராணுவ உளவுத்துறையால் பின்தொடர்ந்து கண்காணிக்கப்படுவது அண்மைக்காலங்களில் வடக்கில் அதிகரித்திருப்பதை அவதானிக்க முடிகிறது.

இது அவர்களின் பாதுகாப்பின்மை உணர்வை அதிகரிக்கிறது மற்றும் சுதந்திரமாக அறிக்கை செய்யும் திறனைத் தடுக்கிறது.

சட்டம் மற்றும் ஒழுங்கின் தோல்வி:

முழுமையான விசாரணைகள் இல்லாதது மற்றும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்காதது சட்டம் மற்றும் ஒழுங்கில் பலவீனத்தையும் தோல்வியையுமே காட்டுகிறது.

ஊடகவியலாளர்களைப் பாதுகாப்பதற்கும், குற்றவாளிகளுக்கு தண்டயையளித்தல், பொறுப்புக் கூறுவதற்கும் அதிகாரிகளின் இயலாமை அல்லது விருப்பமின்மை, குற்றம் செய்தவர்களை ஊக்குவிப்பதாகவுமே அமையும். தோடர் அவதானிப்பில் வடஇலங்கையில் ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதலாளிகள் தண்டனையிலிருந்து தப்பிப்பதற்கான வழிகளை ஏற்படுத்துவதை அவதனிக்கலாம்.

இது வடஇலங்கையில் தொடர்ந்து வன்முறைக் கலாச்சாரத்தை வளரப்பதாகவே பார்க்கப்படக்கூடியது.

முடிவாக, ஊடகவியலாளர்கள் மீதான திட்டமிட்ட தாக்குதல்கள், ஊடக சுதந்திரத்தைப் பாதுகாப்பதில் ஜனநாயக அமைப்புகள் தோல்வியடைந்ததையும் இலங்கையில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்திருப்பதையுமே காட்டுகின்றன.

இந்த சூழ்நிலையானது ஆரோக்கியமான மக்கள் ஜனநாயகத்திற்கும், அரசின் ஜனநாயகக் கோட்பாடுகளையும் சட்டத்தின் ஆட்சியையும் குறைமதிப்பிற்கு உட்படுத்துகிறது.

மேல்முறையீடு

மேற்கூறிய தகவல் பின்னணியில், பின்வரும் நடவடிக்கைகளை எடுக்குமாறு ஐக்கிய நாடுகள் சபையை நாங்கள் மரியாதையுடன் கேட்டுக்கொள்கிறோம்:

கண்டனம்:

இலங்கையில் ஊடகவியலாளர்களுக்கு எதிரான வன்முறைகளை பகிரங்கமாக கண்டித்து, அவர்களின் பாதுகாப்பை பாதுகாக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

விசாரணை:

ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்கள் தொடர்பான சுயாதீன விசாரணைகளை ஆதரித்தல் மற்றும் எளிதாக்குதல், பொறுப்பானவர்கள் பொறுப்புக்கூறப்படுவதை உறுதி செய்தல்.

கண்காணிப்பு மற்றும் அறிக்கையிடல்:

இலங்கையில் ஊடகவியலாளர்களுக்கு எதிரான வன்முறைச் சம்பவங்களைக் கண்காணிப்பதற்கான கண்காணிப்புப் பொறிமுறையை நிறுவுதல் மற்றும் சர்வதேச சமூகத்திற்கு தொடர்ந்து அறிக்கையிடுதல்.

ஊடகவியலாளர்களுக்கான ஆதரவு:

சட்ட உதவி, பாதுகாப்பான வீடுகள் மற்றும் அவசரகால பாதுகாப்பு வசதிகள், ஜீ.பி.எஸ் வசதிகள் உள்ளிட்ட ஊடகவியலாளர்களைப் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்ட முயற்சிகளுக்கு வளங்களையும் ஆதரவையும் வழங்குதல் வேண்டும் எனவும் அந்த அறிக்கையில் சுட்டி காட்டப்பட்டுள்ளது.

# தொலைநோக்குப் பார்வையுள்ள ஈரோடு மக்கள் சிந்தனைப் பேரவையின் வெள்ளி விழா ஆண்டிலிருந்து அதன் தொடர் பயணத்தில் அயலகத் தமிழர்களும் இணைந்திட வேண்டும்...

- ஆர். என். லோகேந்திரலிங்கம் (கனடா)



மகாகவி பாரதியார் தனது "உறுதி வேண்டும்" என்ற கவிதையில் உற்சாகமாகப் பாடுகின்றார்,

**மனதி லுறுதி வேண்டும்,**
**வாக்கினி லேயினிமை வேண்டும்;**
**நினைவு நல்லது வேண்டும்,**
**நெருங்கின பொருள் கைப்பட வேண்டும்;**
**கனவு மெய்ப்பட வேண்டும்,**
**கைவசமாவது விரைவில் வேண்டும்;** என்று

இந்த கவிதை வரிகளை நாம் உச்சரிக்கின்ற போது. எம் மனக்கண்ணில் முன்பாக பல முகங்கள் தோன்றுவதற்கு சந்தர்ப்பங்கள் உண்டு. ஆனால் என் மனதில் உடன் உதிப்பவர்கள். ஈரோடு மக்கள் சிந்தனைப் பேரவையும் அதன் நிறுவனரும் தலைவருமான மரியாதைக்குரிய ஸ்டாலின் குணசேகரன் அவர்களுமே ஆகும்.

ஈரோடு மக்கள் சிந்தனைப் பேரவை நிறுவப்பெற்று 25 ஆண்டுகள் கடந்துள்ளன. அதன் குடையின் கீழ் ஆரம்பிக்கப்பெற்ற "ஈரோடு புத்தகத் திருவிழா" இந்த 2024ல் தனது 20ஆம் ஆண்டைப் பூர்த்தி செய்கின்ற அதே வேளை. உலகெங்கும் பேசப்பெறும் ஒரு புத்தகக் கண்காட்சியாகவும். அது தற்போது உயர்ச்சியை தாண்டிச் சென்று கொண்டிருக்கின்றது.



ஈரோடு மக்கள் சிந்தனைப் பேரவை வெறுமனே புத்தகத் திருவிழாவை மாத்திரமே நடத்தி வருகின்றதா? என்ற கேள்வியை யாராவது எழுப்பினால். அதற்கு எவருமே "ஆம்" என்று பதில் சொல்ல மாட்டார்கள். ஆம்! ஈரோடு மக்கள் சிந்தனைப் பேரவையினர் வருடந்தோறும் தொடர்ச்சியாக பல விழாக்களை வெற்றிகரமாக நடத்தி வருகின்றார்கள். மகாகவி பாரதிக்கு விழா எடுக்கின்றார்கள். பாரத தேசத்தின் விடுதலைக்காய் போராடி உயிர்துறந்த வீரர்களின் நினைவெழுச்சி நிகழ்வுகளை தவறாமல் ஏற்பாடு செய்து மக்களின் மனங்களில் சுதந்திரத் தீ அணையாமலிருக்க வழி சமைக்கின்றார்கள். இலக்கிய விழாக்களை ஏற்பாடுசெய்கின்றார்கள். ஒவ்வொரு ஆண்டும் நடைபெறுகின்ற "ஈரோடு புத்தகத் திருவிழாவில்" தமிழ் நாட்டிலிருந்து மாத்திரமல்ல. தமிழ் பேசப்பெறுகின்ற நாடுகளாம் இலங்கை. மலேசியா மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளிலிருந்தும் எழுத்தாளர்களையும் பேச்சாளர்களையும் அழைத்து மரியாதை செய்து அவர்களின் உரைகளை தமிழ்நாட்டு மக்கள் கேட்டுச் சுவைக்கவும் வாய்ப்பளிக்கின்றார்கள். அதற்கு மேலாக, அண்மைக்காலமாக தமிழ் மொழியின் ஆதிக்கம் அதிகரித்துக் காணப்படும் மேற்குலக நாடுகளில் வாழும் புலம் பெயர் தமிழர்களின் மத்தியிலிருந்தும் அறிஞர்களையும் தமிழ் ஆர்வலர்களையும் அழைத்து அவர்களையும் ஈரோடு பெருநகரில் மேடையேற்றி மாண்பு செய்கின்றனர்.

இந்தத் தகவல்கள் எல்லாம் கனடாவில் கடந்த முப்பத்து நான்கு ஆண்டுகளாக வாழ்ந்து வரும் எனக்கு எவ்வாறு தெரிந்திருக்கின்றன என்ற கேள்விகள் பலருக்கு எழலாம். கடந்த இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக தமிழ் நாட்டோடும் அங்கு வாழும் தமிழறிஞர்களோடும் திரைத்துறை பிரபலங்களோம் தொடர்புகளைக் கொண்டுள்ள அடியேனுக்கு. பத்து ஆண்டுகளுக்கு முன்பு சமூக அக்கறை மிகுந்த பாடல்களால் மக்கள் மனதில் நீங்கா இடம் பெற்ற பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்களை இந்த மண்ணுக்கு ஈன்றளித்த பட்டுக்கோட்டை என்னும் இலக்கியச் செழுமை மிக்க இடத்தைச் சேர்ந்த அன்பர் சுந்தரப்பெருமாள், மரியாதைக்குரிய ஸ்டாலின் குணசேகரன் அவர்கள் பற்றியும் அன்னாரது தலைமையில் நீண்ட காலமாக நடத்தப்பெற்றுவரும் "ஈரோடு புத்தகத் திருவிழா" பற்றியும் அறியத்தந்ததுடன் மாத்திரமின்றி ஸ்டாலின் குணசேகரன் அவர்களோடு தொடர்பையும் ஏற்படுத்தித் தந்தார்.

பொதுவாக எவரோடும் வெளிப்படையாகவும் அறிவுத் தேடலோடும் நட்புடனும் தொடர்பைப் பேணுவதில் மிகுந்த பக்குவம் கொண்ட ஸ்டாலின் குணசேகரன் அவர்களை சந்திக்கும் வாய்ப்பு நான் முன்னர் குறிப்பிட்டது போன்று பத்து ஆண்டுகளுக்கு முன்னர் கிட்டியது. முதற்தடவையாக 2014ம் ஆண்டில் ஈரோட்டில் நடைபெற்ற பாரதிவிழா சிறப்பு விருந்தினராக என்னை அழைத்திருந்தார், மரியாதைக்குரிய ஸ்டாலின் குணசேகரன் அவர்கள். வருடத்திற்கு குறைந்தது மூன்று தடவையாவது தமிழகத்திற்கு சென்று அங்கு கலை இலக்கியத்துறை சார்ந்த பெருமக்களைச் சந்திப்பதை வழக்கமாகக் கொண்டிருந்த நான். அந்தப் பயணத்தையும் சாதாரணமானதொன்றாகவே கருதி தமிழகம் நோக்கி புறப்படுகின்றேன்.

சென்னை விமான நிலையத்தில் என்னை அழைத்துச் செல்வதற்காக வந்திருந்த எமது சென்னைப் பிரதிநிதி நண்பர் பிரகாஸ் அங்கிருந்தே ஈரோடு நோக்கிப் பயணக்கும் வகையில் ஏற்பாடு செய்திருந்தார். 24 மணி நேர விமானப் பயணத்தைத் தொடர்ந்து சென்னையிலிருந்து பாரதி விழா நடைபெறும் ஈரோடு நகரம் நோக்கிய தரை வழிப் பயணம் தொடர்ந்தது. உதயத்திற்கு சில மணிநேரம் கழிந்த ஒரு பொழுதில் நாம் ஈரோடு என்னும் கொங்குத் தலைநகரை அடைந்து அங்குள்ள ஒரு ஹோட்டல் ஒன்றில் தங்க வைக்கப்படுகின்றோம். நாம் சற்று ஓய்வெடுத்துக் கொள்ளலாம் என்று எண்ணிக்கொண்டிருந்தபோது. சற்றும் எதிர்பாராத வகையில் எம்மைச் சந்திப்பதற்காக அங்கு வருகின்றார் மரியாதைக்குரிய ஸ்டாலின் குணசேகரன் அவர்கள். ஒரு பொலிஸ் அதிகாரி போன்ற தோற்றம். பேச்சிலும் அதே கம்பீரம், உச்சரிக்கும் சொற்களில் உள்ள தெளிவு. மனதில் தோன்றும் உற்சாகத்தைக் முகத்தில் காட்டும் புன்சிரிப்பு என அவரிடத்தில் நாம் அவதானித்த சில அம்சங்களை ஒரு சில நிமிடங்களில் எம்மால் உணர முடிந்தது.

"பயணம் எப்படி இருந்தது?" என்ற அன்பான விசாரிப்புடன் ஸ்டாலின் குணசேகரன் அவர்கள் எம்மோடு உரையாடத் தொடங்குகின்றார்.

தான் அழைத்த ஒவ்வொரு விருந்தினர்களையும் எவ்வளவு வேலைச்சுமைகள் இருந்தாலும் அவர்கள் தங்கியிருக்கும் விடுதிகளுக்குச் சென்று வரவேற்கும் பக்குவமும் பண்மும் கொண்டவர் தான் அவர் என்பதை அங்கு நின்ற அவரது உதவியாளர் ஒருவர் சிரித்த முகத்துடன் எம்மோடு பகிர்ந்து கொண்டார்.

2021ம் ஆண்டு டிசம்பர் 11ம் திகதி மதியத்திற்கு சற்றுப் பின்னர் "பாரதி ஜோதி" என்ற தீபத்தை ஏற்றி வைத்து பின்னர் அந்த தீபத்தை கைகளில் ஏந்திய வண்ணம் பாரதி விழா நடைபெறும் மண்டபம் வரை ஊர்வலமாக நடந்து சென்று அங்கு விழாவில் கலந்து கொள்வது என்று எமக்கு தனது திட்டத்தை விளக்குகின்றார் மரியாதைக்குரிய ஸ்டாலின் குணசேகரன் அவர்கள்.

ஊர்வலம் ஆரம்பமாகும் இடத்திற்கு அழைத்துச் செல்லப்படுகின்றோம்.. அங்கு வாகனத்தில் பயணித்துக் கொண்டிருந்த போது, என் மனதில் ஒரு உற்சாகம் எழுகின்றது. பாரதியின் கவிதைகளை வாசித்தும் அதன் கருத்துச் செறிவுகளை மாத்திரமன்றி கவிதைச் சுவையையும் அனுபவித்து வந்த எமக்கு பாரதி பிறந்த தேசத்தில் அவருக்காக எடுக்கப்படும் விழாவில் சிறப்பு விருந்தினராக அழைக்கப்பெறும் ஒரு ஈழத் தமிழனாக கலந்து கொள்ளக் கிடைத்த பாக்கியம் பற்றி எண்ணி பரவசத்தோடு ஊர்வலம் ஆரம்பமாகும் இடத்தை அடைகின்றோம்.



எனது முன்னைய ஒரு தமிழகப் பயணத்தின் போது நாம் நண்பர்கள் சகிதம் வாகனத்தில் சென்று கொண்டிருந்தபோது சுப்பிரமணிய பாரதியார் வாழ்ந்த எட்டயபுரத்தை கடந்து சென்ற பொது "மஹாகவி பாரதியார் வாழ்ந்த இல்லம்" என்ற அடையாளம் இடப்பட்ட ஒரு வீட்டைக் எனக்கு நண்பர்கள் காட்டிய போது வாகனத்தின் ஆசனத்திலிருந்து சற்று எழுந்து நின்று அந்த புனிதரின் அடையாளச் சின்னமாக விளங்கும் அந்த இடத்திற்கு நான் மரியாதை செலுத்திய அந்த நாள் எனக்கு அப்போது ஞாபகத்திற்கு வந்தது.

பாரதி ஜோதி ஏற்றப்பட்டு ஊர்வலம் ஆரம்பமாகும் இடத்தில் ஆர்வத்துடன் பலர் கூடியிருந்தனர். பெரியோர்கள் அன்னையர்கள். சிறுவர்கள் மற்றும் மாணவ மாணவிகள் என கண்கொள்ளாக் காட்சியைக் கண்டு மகிழ்ந்தேன். சிறிது நேரத்தில் சீருடை தரித்த இளைஞர்கள் யுவதிகள் ஐம்பதுக்கும் அதிகமானவர்கள் அங்கு கைகளில் பாரத தேசத்தின் கொடியுடன் அணிவகுத்து வந்தார்கள். சற்று நேரத்தில் "பாரதி தீபத்தை" ஏற்றும் நிகழ்வு நடைபெறவுள்ளதாகத் தெரிவித்தார் ஸ்டாலின் குணசேகரன் அவர்கள்.



எனக்குள் ஒரு வேட்கை பிறக்கின்றது. அந்த இடத்தில் எழுச்சிக் கவிஞன் பாரதியை நாம் கொண்டாடுவதற்காக நாம் கூடியிருந்தாலும் இந்திய விடுதலைப் போராட்ட வீரர்களின் தலைவராக விளங்கிய சுபாஸ் சந்திரபோஸ் அவர்களும் எமது ஈழ விடுதலைப் போராட்டத்தில் பங்கு கொண்டு தங்கள் உயிர்களை மண்ணுக்காகவும் மக்களுக்காகவும் அர்ப்பணித்த விடுதலைப் போராட்ட வீரர்களும் ஞாபகத்திற்கு வந்தார்கள். அந்தளவிற்கு நாம் நின்று கொண்டிருந்த இடம் விடுதலைப் போராட்டங்களை நினைவுகூரும் தலமாகத் தோன்றியது. சுதந்திர உணர்வு அங்கிருந்தவர்களை சுற்றிச் சுற்றி சூழ்ந்திருப்பது போன்ற ஒரு உத்வேகம் எழுந்தது.

ஈரோடு மக்கள் சிந்தனைப் பேரவை இந்திய சுதந்திரப் போராட்டத்தின் மேன்மையை மக்களுக்கு இன்றும் உணர்த்தும் ஒரு கருவியாகச் செயற்படுகின்றது என்பதையும் நான் அந்த இடத்தில் நின்று கொண்டிருப்பதை ஒரு கடமையாகவும் எண்ணிக்கொண்டேன்.

சீருடை தரித்த இளையவர்கள் இரண்டு பக்கமும் அணிவகுத்து நிற்க. பாரதியாரின் சிறியதோர் உருவச் சிலைக்கு முன்பாக நின்று வீர முழக்கத்தின் ஒலி நாற்திசையும் கேட்க விழாவிற்கு யுஆர்சி. தேவராஜன் அவர்கள் தலைமை வகிக்க. மரியாதைக்குரிய ஸ்டாலின் குணசேகரன் அவர்கள் அறிமுக உரையாற்ற தொடர்ந்து நான் "பாரதி தீபத்தை" ஏற்றி வைக்கின்றேன்.

தொடர்ந்து என்னை உரையாற்ற அழைக்கின்றார்கள். "ஒரு சுதந்திர வேட்கை கொண்ட போராட்ட வீரர்கள் சீருடைகளுடன் அணிவகுத்து நிற்கும் ஒரு போராட்டக்களத்தில் நிற்பது போன்ற உணர்வோடு நான் எனது உரையை ஆரம்பிக்கின்றேன்" என்ற முதல் வரியோடு எனது உரை தொடர்கின்றது. இந்திய சுதந்திரப் பொராட்டத்தின் வலிகள் இழப்புக்கள் அனைத்தையும் உணர்ந்து கொள்ளும் வகையில் அந்த இடத்திற்கு ஏற்ற ஒரு உரையை வழங்கிய நான் அதில் எமது மண்ணின் விடுதலைப் போராட்டத்திற்காக தங்களை அர்ப்பணித்த விடுதலைப் போராளிகளையும் எனக்கு ஞாபகப்படுத்தும் அளவிற்கு நான் நெகிழ்ந்து போனேன் என்று உரையை நிறைவு செய்தேன்.

தொடர்ந்து ஊர்வலம் ஆரம்பமாகின்றது. வீதியின் இருமருங்கிலும் மக்கள் கூடி நின்று பாரதிக்கு மரியாதை செய்கின்றார்கள். தொடர்ந்து பாரதி விழா நடைபெறும் மண்டபத்திற்கு நாம் சென்று அங்கு எழுச்சி மிகு வரவேற்பு பாரதிக்கும் என் போன்ற அழைக்கப்பெற்ற விருந்தினர்களுக்கும்.

பாரதி விழாவில் நானும் ஒரு உரையாளன். ஆனால் நான் அன்று ஒரு பார்வையாளனாகவும் ஏனைய உரையாளர்களிடமிருந்து பல விடங்களைக் கற்றுக் கொண்ட ஒரு பயனாளியாகவும் இருந்து, முழுமையான திருப்தியுடன் அன்றைய நாளைக் கழிக்கின்றேன்.

(தொடர்ச்சி 17 பக்கம்)



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com

# ஈழத்துத் திருக்கோயில்கள்

வரலாறும் மரபும் 1100



## பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயம் கொழும்பு

**நண்பர்களே!**

**எனது பெயர் கொண்ட முகநூலில் (Facebook) ஒவ்வொரு வாரமும் இந்துமதம் கூறுவதென்ன? மற்றும் தேடல் என்ற தலைப்பில் பல்வேறு விடயங்கள் பற்றி எழுதி வருகின்றேன். வாசித்தறிந்து உங்கள் கருத்துக்களை வெளியிடுங்கள்.**
**நன்றி.**

" வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனை
சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே
வீழ்த்த வாவினையேன் நெடுங்காலமே. "

கொழும்பு மாநகரிலே உள்ள அனேகமான கோயில்களை இந்தியாவிலிருந்து இலங்கைக்குக் குடியேறிய செட்டிமார்களே கட்டியுள்ளார்கள். அவர்களது சந்ததியினரே தொடர்ந்து இக்கோயில்களைப் பராமரித்தும் வருகின்றனர். இந்நிலையில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திரு.அருணாசலம் பொன்னம்பலம் அவர்கள், அடியிட்டு வளர்த்துச் சென்ற இக்கோயில், இன்றும் தன்னிலை மாறாமல் எச்சமயத்தவர்களையும் வரவேற்று வாழ்வழிக்கின்றது.

கொச்சிக்கடை பொன்னம்பலவாணேஸ்வரர் கோயிலின் உட்பிரகார அமைப்புக்களை நோக்கும்பொது, தென்னிந்திய கோயிலான மதுரைமீனாட்சி அம்மன் கோயிலிலே நிற்பது போன்ற உணர்வு ஏற்படுகின்றது. அமைப்பிலும் அவ்வாறான ஒரு ஒருமைப்பாட்டைக் காண முடிகின்றது. ஆலயத்தைச் சுற்றிலும் உள்ளும்புறமும் காணப்படும் வீதிகள் பரந்தவையாக அமைக்கப்பட்டுள்ளன.

கொச்சிக்கடையில் அமைந்துள்ள பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயத்தின் பொதுஅமைப்பு, தென்னிந்திய கருங்கற் கோயில்களின் அமைப்போடு ஒத்துள்ளது. இவ்வாலயத்தின் மூலமூர்த்தியாக, கற்பக்கிரகத்தில் சிவலிங்கப்பெருமானும் போகசக்தியும் எழுந்தருளியுள்ளனர். தென்முகமாக அழகிய சிவகாமி அம்பாள் எழுந்தருளியுள்ளார். மகாமண்டபத்திலே ஆடல்வல்லானாகிய நடராசப் பெருமான் கலையுணர்வை ஏற்படுத்தியவாறு காணப்படுகின்றார். இவ்வழகிய திருவுருவம், முப்பது அங்குல உயரமுடையதாகக விளங்குகின்றது. மகாமண்டபத்தில் நடராசப் பெருமானோடு இருபத்தியெட்டு அங்குல உயரங்கொண்ட சிவகாமி அம்பாள் எழுந்தருளியுள்ளார்.

இவ்வாலயத்தின் நித்திய, நைமித்திய பூசைகளும், ஆறுகாலப் பூசைகளும், விரதங்களும், அபிஷேகங்களும், விழாக்களும், மிகச் சிறப்பாக சிவாகம முறைப்படி நடைபெறுகின்றது. இவற்றோடு சிவனுக்குரிய திருநாட்களான சிவராத்திரியும், சக்திக்குரிய திருநாட்களான நவராத்திரி போன்றவையும், விரதங்களாகவும், விழாக்களாகவும் இக்கோயிலில் இடம்பெறும். பொன்னம்பலவாணேஸ்வரர் கோயிலின் வருடாந்த மகோற்சவம் பத்து நாட்கள் நடைபெறும். கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் மகோற்சவம், பத்தாம்நாள் பங்குனி உத்தரத் திருநாளன்று தீர்த்தோற்சவத்துடன் நிறைவுபெறும்.

இங்கு நடைபெறும் தேர்த்திருவிழாவைக் காண பெருந்திரளான மக்கள் சாதி, மத, பேதமின்றிக் கூடுவர். தேர்த்திருவிழாவன்று சோமாஸ்கந்தர், அம்பாள், சண்டேஸ்வரர், ஆகியோர் அவரவர்க்கென அமைக்கப்பட்ட அழகிய சிற்பத் தேரிலேறி உலாவருவர். விநாயகர், முருகன் ஆகியோர் தமக்குரிய வாகனங்களில் உலாவருவர். ஆலய வழிபாட்டிலே பல்வேறு நிகழ்வுகளில் பெண்கள் அனுமதிக்கப்படாத காலம் ஒன்றிருந்தது. தேரை பெண்கள் வடம்பிடித்து இழுப்பது தவறென்ற கொண்கை நீண்டகாலமாக நிலவியது. இவ்வாலயத்தின் அம்பாள் தேரை, பெண்களே வடம்பிடித்து இழுக்கும் சிறப்பை இங்கு காணலாம். சுவாமி உள்வீதி உலாவந்து வெளிவீதி உலா வரும்பொழுது, நவசந்தித் திருமுறைகள் ஓதுவார்களால் ஓதப்படுகின்றது.

பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயத்தில் அதிகாலையில், பள்ளியெழுச்சிப் பாராயணத்தோடு பூசைகள் ஆரம்பமாகும். தினமும் சுவாமி பள்ளியறையிலிருந்து பல்லக்கிலே புறப்பட்டு திரும்புவது வழக்கமான நடைமுறையாகக் காணப்படுகின்றது. காலையிலே கோமாதாவிற்குப் பூசை நடைபெறும். காலை ஏழு மணிக்கும், மாலை ஏழு மணிக்கும் நடைபெறும் பூசைகளில் நித்தியாக்கினி வளர்க்கப்படுவது இக்கோயிலின் சிறப்பம்சமாகும். இங்குள்ள கோசாலையில் வளர்க்கப்படும் பசுக்களிலிருந்து கிடைக்கப்பெறும் பாலும், பாலிலிருந்து பெறப்பட்ட தயிர், நெய் இவற்றோடு கோமாதாவின் கோசலம், கோமயம் போன்றவையே ஆலயத்தில் நடைபெறும் அபிஷேகங்களுக்குப் பயன்படுத்தப்படுகின்றன.

இவ்வாலயத்தின் முதற் பிரகாரத்திலே கோஷ்டதெய்வங்களாக நர்த்தனவிநாயகர், சனீஸ்வரன், சந்தானகோபாலர், தட்சிணாமூர்த்தி, நாகதம்பிரான், இலிங்கோற்பவர், பிரமதேவர் இவர்களுடன் துர்க்கை அம்பாளும் எழுந்தருளியுள்ளனர். இரண்டாம் பிரகாரத்திலே, பரிவாரமூர்த்திகள் எழுந்தருளியுள்ளனர். விநாயகர், சோமாஸ்கந்தர், பஞ்சலிங்கங்கள், மகாவிஷ்ணு, வள்ளி தேவசேனா சுப்ரமணியர், வள்ளி தேவசேனா ஆறுமுகர், இராஜராஜேஸ்வரி அம்பாள், அஸ்திரதேவர், சந்திரசேகரர், காத்தவராயர், மகாவிஷ்ணு, இராமர் சீதை இலக்குமணர் ஆஞ்சநேயர், அப்பர், சுந்தரர், சம்பந்தர், மணிவாசகர் ஆகிய நால்வர், ஞானபைரவர், சுவர்ணபைரவர், நவக்கிரக நாயகர்கள், சந்திரர், சூரியர், ஆகியோர் அவரவர் சந்நிதியில் எழுந்தருளியுள்ளனர். இங்குள்ள இலிங்கோற்பவமூர்த்தி கலைநயத்துடன் காணப்படும் திருவுருவமாகப் போற்றப்படுகின்றது.

வெளிவீதியாகிய மூன்றாம் வீதியில் ஆலயத்தின் காரியாலயம் அமைந்துள்ளது. இவ்வாலயத்திலே சிவதொண்டுசெய்யும் சிவாச்சாரியார்கள், வெளிவீதியில் அமைந்துள்ள விடுதிகளில் தங்கியுள்ளனர். இவற்றோடு அழகிய பூமண்டபம், ஆஞ்சநேயர், முனியாண்டிசுவாமி, மாரியம்பாள், கோசாலை தேர்முட்டி, சொர்ணபுஷ்கரணி தீர்த்தத் தடாகம், அரசடிப்பிள்ளையார் போன்ற திருவுருவங்களும், வெளிவீதியில் எழுந்தருளி அருள்பாலிக்கின்றனர். ***வளரும்...***

*(16 பக்கத் தொடர்ச்சி)*

## *தொலைநோக்குப் பார்வையுள்ள ஈரோடு மக்கள் சிந்தனைப் பேரவையின் வெள்ளி விழா ஆண்டிலிருந்து அதன் தொடர் பயணத்தில் அயலகத் தமிழர்களும் இணைந்திட வேண்டும்...*

ஒரு பூரண திருப்தி என்னிடத்தில். தொடர்ந்து சென்னையை நோக்கி பயணிக்கின்றோம். திரும்பிச் செல்கின்றபோது. எனக்கருகில் அமர்ந்திருந்த நண்பர் பிரகாஸிடம் நாம் வெளிப்படையாகச் சொல்ல நினைத்தேன்.. இத்தனை ஆண்டுகள் பல அறிஞர்களையும் பெரியோர்களையும் எழுத்தாளர்களையும் கனடாவிற்கு அழைத்த நாம் "இவரை" அழைக்கத் தவறிவிட்டோமே! என்ற ஆதங்கத்தோடு எனது மனது நினைத்துக் கொள்ள எனது நா அதை வெளிப்படுத்தியது.

கனடாவிற்கு திரும்பி வந்து 2015ம் ஆண்டு நடைபெறவுள்ள எமது கனடா உதயன் பத்திரிகையின் 1000வது இதழ் வெளியீட்டு விழாவிற்கு எமது மரியாதைக்குரிய ஸ்டாலின் குணசேகரன் அவர்களை அழைக்க வேண்டும் என்று முடிவு செய்து அதற்கான ஏற்பாடுகளைச் செய்யத் தொடங்கினோம். ஒரு பக்கம் 1000வது இதழுக்குரிய வேலைகள், மறுக்கம் கனடாவின் ரொறன்ரொ நகரத்தில் 2015 யூன் மாதம் 6ம் திகதியும். மொன்றியால் நகரத்தில் 6ம் திகதியும். தொடர்ந்து சென்னையி 27ம் திகதியும். என திட்டமிடப்பெற்று. பணிகள் குவிந்து கிடக்க, ஸ்டாலின் குணசேரன் அவர்களை விழாக்களின் சிறப்பு விருந்தினராக அழைப்பதற்கான வேலைகளை செய்யத் தொடங்கினோம்.

அந்த நாளும் வந்தது. சென்னையிலிருந்து 4ம் திகதி புறப்பட்டு 5ம் திகதி வெள்ளிக்கிழமையன்று கனடாவின் ரொறன்ரோ விமான நிலையத்தில் வந்திறங்கினார்கள் மரியாதைக்குரிய ஸடாலின் குணசேகரன் அவர்களும் அவரது பாரியார் அவர்களும். அவரது வருகை பற்றி அவ்வாரத்தின் உதயன் பத்திரிகையில் தலைப்பு செய்தி பிரசுரமாகியது. சென்னை விமான நிலையத்திலிருந்து அவருக்கு பொன்னாடை அணிவித்து ஸ்டாலின் தம்பதியை கனடாவிற்கு அனுப்பிவைக்கும் புகைப்படம் பிரசுரமாகின்றது. பல வாசகர்கள் எமது "உதயன்" அலுவலகத்திற்கு அழைத்து விழாவிற்கு வாழ்த்துக்களைத் தெரிவித்த பின்னர் "இந்த விழாவிற்கு பொருத்தமான ஒருவரை அழைத்திருக்கின்றீர்கள். நல்ல தொரு இடதுசாரிச் சிந்தனை கொண்ட ஒரு அன்பர்" என்று மரியாதைக்குரிய ஸ்டாலின் குணசேகரன் அவர்கள் பற்றி புகழந்துரைக்கும் பலர் தொடர்ந்து அழைத்தக் கொண்டே இருந்தார்கள்.

எமது உதயன் நண்பர்களின் மனமுவந்த வரவேற்பில் மனமகிழ்ந்து நின்ற ஸடாலின் குணசேகரன் தம்பதியைப் பார்த்து நாமும் மகிழந்தோம். தொடந்து இரண்டு நாள் விழாக்கள், தனிப்பட்ட பயணங்கள். கனடிய அரசியல்வாதிகளோடு சந்திப்பு என ஸ்டாலின் குணசேகரன் அவர்களின் கனடிய விஜயத்தால் எமது கனடா உதயன் குழுவின் நண்பர்கள் அனைவரும் திளைத்துப் போயிருந்தார்கள். அமெரிக்கா தமிழகம் என பல இடங்களிலிருந்து வந்த வாழ்த்துத் தெரிவிக்கும் அழைப்புக்களையும் ஸ்டாலின் துணைசேகரன் அவர்களும் அவரது துணைவியாரும் மகிழ்ச்சியோடு ஏற்று புன்னகையுடன் காணப்பெற்றார்கள்.

ரொறன்ரோவிலும் மொன்றியால் நகரத்திலும் எமது சிறப்பு விருந்தினர் ஸ்டாலின் குணசேகரன் அவர்கள் ஆற்றிய உரைகளை செவிமடுத்த பலரும் பாராட்டுக்களைத் தெரிவித்த வண்ணம் இருந்தார்கள். குறிப்பாக, இடதுசாரிக் கருத்துக்களை கொண்ட பலர் அவரது உரைகளால் கவரப்படடார்கள். "தான் குறிப்பிட எண்ணும் ஒவ்வொரு விடயத்தையும் தகுந்த ஆதாரத்துடன் திகதிவாரியாக குறிப்பிட்டு உரையாற்றும் ஆற்றலை இவரிடத்தில் மாத்திரமே நாம் அவதானித்தோம் என்றார்கள்.

இவ்வாறாக தமிழகத்திலிருந்து வருடா வருடம் அழைக்கப்பெறும் பேச்சாளர்கள் மற்றும் சிறப்பு விருந்தினர் வரிசையில் 2015ம் ஆண்டின் உதயன் பத்திரிகையின் 1000வது இதழ் வெளியீட்டு விழாக்களில் கலந்து கொண்டும் கனடா என்னும் ஒரு அற்புதமான தேசத்தின் மண்ணை மிதித்தும் மாண்புமிகு பெருமக்கள் பலரைச் சந்தித்தும். சிறியதும் பெரியதுமான விழாக்களில் பங்கெடுத்தும் உரையாற்றியும் கனடாவில் வாழும் இலங்கைத் தமிழர்களில் எழுத்தாளர்களையும் கல்வியாளர்களையும் வாசகர்களையும் சந்தித்து உரையாடிய திருப்தியோடும் ஸ்டாலின் குணசேரன் தம்பதி கனடாவின் அயல்நாடாம் அமெரிக்கா நோக்கிய பயணத்தை தொடரும் நாளும் வந்தது. நண்பர்கள் சூழ்ந்திருந்து எமது அவ்வருடத்தின் சிறப்பு விருந்தினர் தம்பதியை பிரிய மனமின்றி விமான நிலையம் வரை சென்று கைகளை இறுகப் பற்றி அணைத்தும். அவர்களுக்கு பிரியாவிடை கொடுத்து வழி அனுப்பி வைத்து விட்டு திரும்பி வந்தோம்.

அடுத்து நாம் ஏற்கெனவே திட்டமிட்ட வகையில், சில நாட்களில் (யூன் 27. 2015) சென்னையில் நடைபெறவுள்ள உதயன் பத்திரிகையின் 1000வது இதழ் வெளியீட்டு விழா தொடர்பான பணிகளைக் கவனிக்கத் தொடங்கினோம் இவ்வாறாக ஒரு முழுமையான மனிதராகவும் மக்கள் தொண்டனாகவும் எழுச்சி மிக்க பேச்சாளனாகவும் இந்தியாவின் சுதந்திர போராட்டத்தின் போது களத்தில் நின்று போராடிய தியாகிகளை போற்றியும் புகழ்ந்தும் தன் வாழ் நாளில் பெரும் பகுதியைக் கழித்து வரும் ஒரு தமிழ் நாட்டுத் தமிழ்த தேசிய உணர்வுமிக்க ஒருவரின் நட்பு கிட்டிய நிறைவான மகிழ்ச்சியில் நான் மூழ்கியவனாகவே என்னை எனக்குத் தெரிகின்றது. தொடர்ச்சியாக மரியாதைக்குரிய ஸ்டாலின் குணசேகரன் அவர்களின் அர்ப்பணிப்பு மிக்க செயற்பாடுகளை நேரடியாகவும் செய்திகள் மூலமாகவும் பார்த்தும் படித்தும் ஆச்சரியப்படுகின்றவர்களில் நானும் எனது குடும்பத்தினரும் அடங்கியுள்ளோம்.

இவ்வாறு தொடர்ந்து வரும் கலை இலக்கிய மற்றும் அரசியல் தொடர்புகளின் காரணமாக 2023ம் ஆண்டின் ஈரோடு புத்தகத்திருவிழாவிற்கும் என்னை ஒரு பேச்சாளராக அழைத்து மதிப்பளித்தார் ஸ்டாலின் குணசேகரன் அவர்கள். அந்த விழாவின் போதும் புத்தகக் கண்காட்சியின் போதும் நான் பார்த்தும் உணர்ந்தும் வியந்த விடயங்களோ எழுத்தில் வடிக்க முடியாதைவை.

ஸ்டாலின் குணசேகரன் அவர்களின் தொடர்பும் நட்பும் கிடைத்ததால் அவர் வழி நடத்திச் செல்லும் ஈரோடு மக்கள் சிந்தனைப் பேரவை என்னும் மக்கள் பணி சார்ந்த அமைப்பின் கட்டமைப்பையும் அதன்தொடர்ச்சியான செயற்பாடுகளையும் வருடா வருடம் மானுடர்களை செழுமைப்படுத்தும் வகையில் பல்வேறு தலைப்புக்களில் அந்தந்த துறைகள் சார்ந்தவர்களை அழைத்து மேடையில் மதிப்பளித்து மக்கள் அவர்களின் கருத்துக்களை செவிமடுத்துச் செல்ல சந்தர்ப்பங்கள் வழங்குவதும் உலகத் தமிழர்களை இணைக்கும் முயற்சியில் வெற்றிகளை ஈட்டிவருவதுமாக தமது பணிகளைத் தொடர்ந்து வரும் ஸ்டாலின் குணசேகரன் அவர்கள் பற்றியும் அவருக்கு பக்கத்துணைகளாகவும் தூண்களாகவும் விளங்கும் நண்பர்களையும் தொண்டர்களையும் சந்திக்கும் அரிய வாய்ப்புக்களை பெற்றவனாக மக்கள் சிந்தனைப் பேரவையின் வெள்ளிவிழாவிற்கு எனது வாழ்த்துக்களை இந்த கட்டுரையின் ஊடாக தெரிவிப்பதில் மகிழ்ச்சியும் பெருமையும் அடைகின்றேன்.

இறுதியாக தற்காலத்தில் மாத்திரமல்ல சங்க காலத்திலும் அதற்குப் பின்னரான சுதந்திரப் போராட்டக் களத்திலும் முக்கிய நகரமாகத் திகழந்த ஈரோட்டின் பெருமைகளை என்றும் மரியாதையோடு உணர்ந்து கொண்டவன் என்றவகையிலும் என்னிடத்தில் ஒரு இரட்டிப்பு மகிழ்ச்சி தவழ்வதையும் காணமுடிகின்றது.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# "சமஸ்டி அரசியல் யாப்பை கொண்டுவர முடியுமா?" ரணிலிடம் செல்வராசா கஜேந்திரன் கேள்வி

**- நடராசா லோகதயாளன்**




ஒற்றையாட்சியை ஒழித்து சமஸ்டி அரசியல் யாப்பை கொண்டு வர முடியுமா என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்காவிடம் நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் கேள்வி எழுப்பினார்.

நாடாளுமன்றில் 18-06-2024 தினம் உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் இங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில், ஜனாதிபதி நாடாளுமன்றம் வருகை தந்து பொருளாதாரத்தை மீட்டெடுக்க பல முயற்சிகளை மேற்கொள்வதாக அவர் கூறி வருகின்ற நிலையிலே இந்த நாட்டினை பொருளாதார அழிவில் இருந்து மீட்டெடுப்பதற்கு செய்யப்பட வேண்டிய மிகப் பிரதானமான ஒரு கடமை இருக்கின்றது என்பதனை நான் ஜனாதிபதியின் மேலான கவனத்திற்கு கொண்டு வர விரும்புகின்றேன்.

75 வருடங்களாக இனங்களிற்கு இடையிலே இருந்த உறவை சீர் குலைத்து துருவமயப்படுத்தப்பட்டுள்ள ஒற்றையாட்சி முறைமையான அரசியலமைப்பு, இந்த நாட்டினுடைய பொருளாதாரத்தை வங்குறோத்து நிலைக்கு கொண்டு வந்துள்ள ஒற்றையாட்சி முறைமையான அரசியலமைப்பு, இந்த நாட்டினுடைய உச்ச நீதிமன்றம் உட்பட சகல நீதிமன்றங்களையும் முடமாக்கியிருக்கின்ற ஒற்றையாட்சி முறைமையான அரசியலமைப்பு ஒழிக்கப்பட்டு சகல இனங்களும் தமிழ்த் தேசமும், சிங்கள தேசமும் இந்த நாட்டின் முன்னேற்றத்தில் பங்கேற்கக்கூடிய ஒரு சமஸ்டி அரசியலமைப்பு கொண்டு வரப்படுவதன் மூலம் மட்டும்தான் அந்த முன்னேற்றத்தை நிரந்தரமாக ஏற்படுத்த முடியும். அவ்வாறான முயற்சியை செய்வதற்கு ஜனாதிபதி தன்னுடைய காலத்தில் இந்த ஒற்றையாட்சி முறையின் தோல்வியை ஒப்புக்கொண்டு ததிழ்த் தேசமும், சிங்கள தேசமும் அங்கீகரிக்கப்பட்ட அடப்படையிலான சமஸ்டி அடிப்படையிலான தீர்வை கொண்டு வரவதற்கும் அதன் மூலம் தமிழ் மக்கள் இந்த நாட்டினுடைய அபவிருத்தியிலும், நான்டின் முன்னேற்றத்திலும் வல்லரசுத் தரத்திற்கு இந்த தேசத்தை கொண்டு வருவதற்கான பங்களிப்பை செய்ய சமஸடி அரசியலமைப்பைக் கொண்டு வருவதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதனை செய்ய ஜனாதிபதி தயாரா இருக்கின்றாரா என நான் அவரிடம் கேட்க விரும்புகின்றேன் என்றார்.







CANADA KANTHASWAMY TEMPLE
Presents
TSN EXPRESS & TTR TRANSPORT
இன்
KAARTHIKEYAN FEST
கார்த்திகேயன்
விழா
2024
FREE ENTRANCE AND PARKING
கனடா கந்தசுவாமி கோவில்
வாகனத்தரிப்பிட திறந்தவெளித்திடலில்
JUNE 22 - 23
Exclusive Television Partners
Exclusive Radio Partners
CO-Presented By
Powered By
A1 MASTER COUNTERTOPS INC.
UTHAYAN
SEVENOTES
LOCATION :
733 BIRCHMOUNT RD,
SCARBOROUGH
M1K 1R5.
Production by
SV MEDIA
Playback Singer
Rohith Jayaraman
Vijay TV Super Singer
Chinmayi
ZEE Tamil
Maathulani
Swiss Singer
Amirtha
Playback Singer
Vidhyashankar
Eelam singer
kandappu jeyanthan
விளம்பரம்
மற்றும்
வர்த்தகச்சாவடி
MUTHU
+14162000792
GOWRY
+16472336129
THANA
+16478892710


CANADA KANTHASWAMY TEMPLE
Presents
விளம்பரம்
மற்றும்
வர்த்தகச்சாவடி
தொடர்புகளுக்கு
MUTHU
+14162000792
THANA
+16478892710
GOWRY
+16472336129
KAARTHIKEYAN FEST
கார்த்திகேயன்
விழா
JUNE
22 - 23
2024
கனடா கந்தசுவாமி கோவில்
வாகனத்தரிப்பிட திறந்தவெளித்திடலில்
FREE ENTRANCE AND PARKING
Location : Canada Kanthaswamy Temple Society, 733 Birchmount Rd, scar, M1K1R5.

# இவ்வார ராசிபலன்

**21-06-2024 வெள்ளி தொடக்கம் 27-06-2024 வியாழன் வரையும்**




**மேஷம்:** மற்றவர் உதவி கிடைக்கும் வாரம். குடும்ப ஒற்றுமை பலப்படும். உடல்நலம் திருப்தி தரும். திருமண வாய்ப்புக் கூடி வரும். மாணவர்கள் திறமை பளிச்சிடும். பொறியியல் துறை லாபம் தரும். ஏற்றுமதி தொழிலில் கவனம் தேவை. பேச்சுத்திறமை அதிகரிக்கும். சகோதர உதவிக் கிடைக்கும். ஆடை, அணிகலன் சேரும். உத்தியோக வாய்ப்புக் கிட்டும். செயல் திறமை அதிகரிக்கும். பணத்தட்டுப்பாடு ஏற்படும். தோற்றப் பொலிவு கூடும். நல்லவர் நட்பு கிட்டும். எதிரிகள் பலம் குறையும். கலைத்துறையில் முன்னேற்றம் கொடுக்கும். பயணம் அனுகூலம் தரும். பிரச்சனைகள் அகலும். பிணிகள் அகலும். பிள்ளைகளால் மதிப்பு உயரும். பொருளாதாரம் சிறப்பு தரும். பொறுப்புக்கள் கூடும். புதிய நட்பு உருவாகும். இடமாற்றம் நன்மைத் தரும். புதிய எண்ணங்கள் உருவாகும். புதிய சொத்து சேரும். மருத்துவர்களுக்கு நற்பெயர் கிட்டும். வழக்கு முடிவுக்கு வரும். மனதில் உற்சாகம் கூடும். நிதி நிலைமை திருப்தி தரும். அந்தஸ்து உயரும். விளையாட்டுத் துறையில் வெகுமதி உண்டு. சான்றோர்களின் சந்திப்புக் கிட்டும். பேச்சில் இனிமை கூடும். திறமையால் பெருமை சேரும். வெளிநாட்டுத் தொடர்பு ஏற்படும். மனிதநேயம் மிகுதியாகும். மெத்தனப்போக்கு விலகும். ஞாபக மறதி ஏற்படும். திடீர் லாபம் உண்டு. வெற்றிகள் குவியும். பாராட்டுக்கள் அதிகமாகும். சாதகமான வாய்ப்பு உருவாகும். அடுத்த நபரால் ஆதாயம் உண்டு. தாயின் பிரார்த்தனையால் தகுதிகள் உயரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ படைவீட்டம்மன், அதிர்ஷ்ட எண்: 3,9,5,1
அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: M,P




**ரிஷபம்:** வருமானமும், வெகுமானமும் அதிகரிக்கும் வாரம். நன்மைகள் நாடி வரும். வராத கடன் வந்து சேரும். பணவரவு உண்டு. ஆடம்பரத்தை விரும்புவீர்கள். ஆண்களின் அதிகாரம் உயரும். நட்பு வட்டம் விரிவடையும். பெரியோர்களின் ஆலோசனை பலன் தரும். பேச்சில் நிதானம் தேவை. பயணத்தால் பலன் உண்டு. கமிஷன் தொழில் லாபம் தரும். குடும்ப கௌரவம் உயரும். மனைவியின் பிரார்த்தனை மாற்றத்தை ஏற்படுத்தும். கலகலப்பான செய்திகள் வந்து சேரும். மகான்களின் சந்திப்பு கிட்டும். முத்தான வாய்ப்புக்கள் பெருகும். முன்னேற்றம் அதிகரிக்கும். பெண்வழி பிரச்சனை முடிவுக்கு வரும். பகையாளிகளின் நிலை மாறும். கடன் தொல்லை தீரும். கற்பனை வளம் அதிகரிக்கும். புதிய முதலீடு உருவாகும். கட்டிடத் தொழிலில் கவனம் தேவை. ஷேர் மார்க்கெட் லாபம் தரும். திட்டம் வெற்றி பெறும். பட்டம் பதவி வந்து சேரும். நட்டம் இல்லாத நன்மை அதிகரிக்கும். சட்டம் சாதகமாகும். சகோதர வகையில் சச்சரவு ஏற்படும். பழைய நண்பரால் பணவரவு உண்டு. புண்ணிய ஸ்தலம் செல்ல வேண்டி வரும். பிள்ளைகளின் தொல்லைகள் அதிகரிக்கும். பெற்றவர்கள் பாராட்டு கிட்டும். வினோதமான எண்ணங்கள் விலகும். கவனமுடன் செயல்பட வேண்டும். எதிர்கால எண்ணம் நிறைவேறும். சாதனையான எண்ணங்கள் உதயமாகும். பொருளாதாரம் உயரும். பழையக்கடன் பஞ்சாயத்து மூலம் தீர்வுக்கு வரும். பகையாளியிடம் எச்சரிக்கை தேவை. மனச்சஞ்சலம் ஏற்படும். ஆடை, அணிகலன் சேரும். ஸ்டேஷ்னரி தொழில் லாபம் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ சுயம்புலிங்கம், அதிர்ஷ்ட எண்: 6,9,3,1
அதிர்ஷ்ட நிறம்: ஆரஞ்சு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: N,U




**மிதுனம்:** நண்பர்களின் உதவி கிடைக்கும் வாரம். நீண்ட நாளைய பிரச்சனை முடிவிற்கு வரும். ஏற்றமும், மாற்றமும் அதிகரிக்கும். பக்குவமான பேச்சு பயன் தரும். பாதகமான சூழ்நிலை அகலும். மனை வாங்கும் சிந்தனை மேலோங்கும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். கலைத்தொழிலில் கவனம் தேவை. கூட்டுப் பிரார்த்தனையால் குடும்ப மேன்மையடையும். பெண்களுக்கு யோகம் கூடும். கலகலப்பான செய்தி வந்து சேரும். எதார்த்தமாக செயல்படவும். உறவினர்கள் உதவி செய்ய முன் வருவர். குடும்ப அன்யோன்யம் அதிகரிக்கும். வீண் வம்பு விலகும். விளையாட்டுத் துறையில் லாபம் அதிகரிக்கும். தாய் வழி உறவில் கவனம் தேவை. நினைத்த காரியம் நிறைவேறும். தொல்லைகள் ஒழியும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். பிள்ளைகளின் கல்விச்செலவு அதிகரிக்கும். எதிர்பார்த்த விஷயம் தாமதமாகும். பூமி வாங்கும் யோகம் உண்டு. பழைய நண்பரை சந்திக்க நேரிடும். பணியில் கண்டிப்பு அவசியம். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். பிரியமானவர்களின் சந்திப்பு ஏற்படும். பெற்றோர்களின் ஆதரவு அதிகரிக்கும். ஆக்கப்பூர்வமான எண்ணம் உதயமாகும். தொழில் போட்டி அதிகமாகும். புதுமைகள் நிறைந்த காலம். பணியாட்கள் ஆதரவு அதிகமாகும். விரக்திகள் விலகும். வியாபாரம் திருப்தி தரும். வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும். டிரான்ஸ்போர்டு தொழில் லாபம் தரும். சாமார்த்தியமாக செயல்படுவீர்கள். கால்நடைகளால் லாபம் உண்டு. பெண்களிடத்தில் கவனம் தேவை. அடுத்த வீட்டாரின் ஆதரவு பெருகும். பிரபல்ய ஆசை ஏற்படும்.

வழிபட வேண்டிய தெய்வம்: நவசித்தி விநாயகர், அதிர்ஷ்ட எண்: 3,5,7,1
அதிர்ஷ்ட நிறம்: காவி நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,K




**கடகம்:** பிள்ளைகளால் பெருமை சேரும் வாரம். திருப்பங்கள் நிறைந்த காலம். விருப்பங்கள் நிறைவேறும். பொறுப்புக்கள் கூடும். வெறுப்புக்கள் அகலும். வேற்றுமைகள் விலகும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். உறவுகளால் மதிப்பு கூடும். உத்தியோக உயர்வு கிட்டும். பாக்கிகள் வசூலாகும். வியாபார விருத்தி ஏற்படும். வீண் விரயம் தவிர்க்கவும். வெளிநாட்டுப் பயணம் உருவாகும். பெண்களால் பெருமை சேரும். பிராணிகளால் தொல்லை ஏற்படும். பல்வலி வந்து போகும். பணவரவு திருப்தி தரும். பிள்ளைகளால் வெகுமானம் கூடும். வணிகத்தொழில் விரிவடையும். மின்சாரத்தில் கவனம் தேவை. வாகன மாற்றம் உண்டு. வயிறு உபாதைகள் தோன்றி மறையும். வழக்குகள் சாதகமாகும். குதூகலமான எண்ணம் உருவாகும். வெற்றி வீடு தேடி வரும். செல்வ செழிப்பு உயரும். திரு'டிகள் விலகும். ஆடம்பரப் பொருள் சேரும். பறவைகளுக்கு உணவு அளித்து பயன் பெறலாம். பணத்தட்டுப்பாடு நீங்கும். மனக்கட்டுப்பாடு அவசியம். மாற்றத்தை விரும்புவீர்கள். தோற்ற பொலிவு கூடும். மனம் மகிழும். சீரான வாழ்வமையும். சேமிப்பு அதிகரிக்கும். முற்போக்கு சிந்தனை வரும். பங்குத்தொழில் பணம் தரும். உணவுத்தொழில் உயர்வு தரும். செயல் விவேகம் கூடும். தொலைபேசித் தகவல் தொல்லைத் தரும். குளிர்பானத் தொழில் கவனம் தேவை. புதிய நட்பு உருவாகும். உதவும் குணம் அதிகரிக்கும். சாதகமான சூழ்நிலைகள் உருவாகும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். ஆடம்பர எண்ணம் அதிகரிக்கும். திட்டங்கள் எளிதாகும். ஆடை, அணிகலன்கள் சேரும். சுபவிரயம் உண்டு. பேச்சில் கம்பீரம் இருக்கும். பெற்றோரின் ஆசி கிடைக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ அங்காள பரமேஸ்வரி, அதிர்ஷ்ட எண்: 8,5,4,3
அதிர்ஷ்ட நிறம்: இளஞ்சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: T,L


ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது!
என்ற உறுதியோடு உங்கள் 'ராஜயோகம்'
"ஜோதிட மகரிஷி"
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068
9940431377




**சிம்மம்:** மனமகிழ்ச்சி கிட்டும் வாரம். குடும்ப உறவு பலப்படும். குதூகல எண்ணம் அதிகரிக்கும். செயலில் துணிவு கூடும். எதிர்ப்புக்கள் ஓடி ஒழியும். வாகனச்செலவு ஏற்படும். ஏற்றுமதி தொழிலில் லாபம் அதிகரிக்கும். பெரிய வாய்ப்புக்கள் தேடி வரும். பூர்வீகச் சொத்துக் கிடைக்கும். கல்வியில் கவனம் தேவை. உறவினர் வருகை உற்சாகம் தரும். விருப்பமான தொழில் அமையும். விபரீத போக்கு மறையும். குடும்ப பாசம் அதிகரிக்கும். பழையக்கடன் வசூலாகும். பணியில் ஆர்வம் அதிகரிக்கும். சுயத்தொழிலில் கவனம் தேவை. நண்பர்களால் நன்மை உண்டு. சிக்கனத்தை கையாள வேண்டும். சிரித்த முகத்தோடு காணப்படுவீர்கள். காரியத்தடை ஏற்படும். பேச்சில் பணிவு தேவை. பெற்றோர் ஆலோசனை பயன் தரும். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். தனவரவு தடைப்படும். எண்ணங்கள் மாறுப்படும். செலவுகள் அதிகமாகும். நட்பில் பிரிவு ஏற்படும். உடல்நிலையில் கவனம் தேவை. தன்னம்பிக்கை துளிர்விடும். முடிவுகளில் தெளிவு இருக்கும். சுபச்செய்தி வரும். சுயத்தொழில் வாய்ப்பு அமையும். மெத்தனப் போக்கு மாறும். மேன்மைகள் தொடரும். ஆடம்பர சுகங்கள் கூடும். பக்கத்து வீட்டு பகை மாறும். வஸ்திர தானம் செய்வதால் வளம் பெருகும். சொத்துப் பிரச்சனை தீர்வுக்கு வரும். திட்டமிட்ட செயல் வெற்றி பெறும். நட்டமில்லாத நன்மை அதிகரிக்கும். அடுத்தவர் தலையீடு அதிகமாகும். மறைமுக எதிர்ப்பு உருவாகி மறையும். ஆபரணப் பொருள் களவுப்போகும். தனவரவு அதிகரிக்கும். ஆன்மீக சிந்தனை அதிகமாகும். அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் கூடும். கஷ்ட காலங்கள் மறையும். பணிவும், துணிவும் கூடும். மருத்துவ நிவர்த்தி உண்டு. ஆறுதலான சூழ்நிலை அமையும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஆறுமுகப் பெருமான், அதிர்ஷ்ட எண்: 9,5,4,3
அதிர்ஷ்ட நிறம்: ஆரஞ்சு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,I




**கன்னி:** நல்லவங்களோட வாழ்த்துக் கிடைக்கும் வாரம். முற்போக்கு சிந்தனைகள் உருவாகும். புதிய முயற்சிகளை தள்ளி வைக்கவும். தன வரவுகள் தடைப்படும். குடும்பத்தில் கருத்து வேறுபாடு தோன்றும். சகோதர வகையில் சகாயம் கிட்டும். மனைவியால் மதிப்பு உயரும். பிள்ளைகளால் பெருமை கூடும். பழைய பகை மாறும். அரசு வகையில் அனுகூலம் கிட்டும். மங்கலச் செய்தியால் மனம் மகிழும். திடீர் செலவுகள் ஏற்படும். எதிர்பார்த்த தொகை தாமதமாகும். வார்த்தைகளில் நிதானம் நல்லது. பொருளாதாரத்தில் மேன்மையுண்டு. தொழிலில் அபிவிருத்தி உண்டு. புதிய வாய்ப்புக்களை எதிர்பார்க்கலாம். நவகிரஹம், அனுகிரஹம் கூடும். தேக ஆரோக்கியம் மிளிரும். உடன்பிறப்புக்களால் நன்மை உண்டு. அச்சுத்தொழில் ஆதாயம் தரும். பொதுப்பிரச்சனைகள் விலகும். உத்தியோகத்தில் ஒற்றுமை நிலவும். வழக்குகள் சாதகமாகும். நிர்வாகச் செலவுகள் கூடும். பொறுமையைக் கையாள வேண்டும். எதிரிகளால் பலன் கிடைக்கும். பாராட்டுக்கள் வந்து சேரும். மனதில் உற்சாகம் மேலோங்கும். நற்காரியங்களால் கீர்த்தி பெருகும். விவாக முயற்சி வெற்றி தரும். காதல் கைகூடும். ஸ்திர சொத்துக்கள் சேரும். உங்களின் தனித்தன்மைகள் வெளிப்படும். பங்குச்சந்தை லாபம் தரும். கனவுகள் நிறைவேறும். தொழிலில் வேண்டாத நபர்கள் விலகுவர். வேலை வாய்ப்புக்கள் கூடும். எதிர்பார்ப்புக்கள் விலகும். மாணவர்கள் மதிப்பு உயரும். வாகன யோகம் உண்டு. இனிய செய்தி வரும். விவசாய நிலம் சேரும். வெற்றிக்கான வழி பிறக்கும். அலட்சியப் போக்கு மாறும்.

வழிபட வேண்டிய தெய்வம்: சங்கிலி கருப்பு சுவாமி, அதிர்ஷ்ட எண்: 6,9,5,3
அதிர்ஷ்ட நிறம்: ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: B,Z




**துலாம்:** பணவரவுகளால் திருப்தி தரும் வாரம். ஆரோக்யம் சீராகும். படிப்பில் ஆர்வம் கூடும். விரோதம் விலகும். வருமான வரி தொல்லை ஏற்படும். சங்கடம் அதிகமாகும். பணியில் சற்று கவனம் தேவை. அரசியலில் ஆதாயம் உண்டு. வேலைபளு கூடும். அலட்சியப்போக்கு தவிர்க்கவும். தொழில் திறமை பளிச்சிடும். வெளியூர் பயணம் வெற்றி தரும். தொழிலில் போட்டி, பொறாமைகள் விலகும். விவசாய விளைச்சல் அதிகரிக்கும். இரும்புத்தொழில் லாபம் உண்டு. இல்லத்தில் இரட்டிப்பு மகிழ்ச்சி உண்டு. புத்திரரால் பூரிப்பு உண்டு. நல்லவர் நட்பு கூடி வரும். நல்ல வாய்ப்புக்கள் நாடி வரும். பொருள் சேர்க்கையுண்டு. பிரார்த்தனையால் பலன் உண்டு. ஏற்றுமதி தொழில் லாபம் தரும். புதிய சிந்தனை உருவாகும். கலையில் ஆர்வம் கூடும். கணவன், மனைவி அன்யோன்யம் கூடும். காரியத் தடை விலகும். பயணத்தில் எச்சரிக்கை தேவை. அரசாங்க அனுகூலம் உண்டு. வாழ்க்கை வசதி பெருகும். காரிய வெற்றி கிட்டும். வீண் வம்பு ஓடி மறையும். மறைமுக தொல்லைகள் நீங்கும். வழக்கு வெற்றி தரும். புதிய பொருள் சேர்க்கையுண்டு. வியாபார வாய்ப்பு உண்டு. மேலதிகாரியின் ஆதரவு பெருகும். தொட்டது துலங்கும். காதல் எண்ணம் உருவாகும். மற்றவர் ஆலோசனைத் தவிர்க்கவும். மன அமைதி கூடும். ஏற்றமான தருணம் அமையும். இனிப்பான செய்திகள் வரும். தீய எண்ணங்கள் விலகும். பூர்வீகச் சொத்துக்கள் சேரும். பிள்ளைகளின் கல்வி மேம்படும். பெண்களின் தேவைகள் பூர்த்தியாகும். நிதி நிலைமை சீராகும். உறவினரால் நன்மை உண்டு. பேச்சில் துணிவு தேவை. விசேஷ பலன்கள் உண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: அம்பிகை, அதிர்ஷ்ட எண்: 2,9,6,4
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,F




**விருச்சிகம்:** கவலைகள் அடியோடு விலகும் வாரம். விவசாயம் கை கொடுக்கும். பெற்றோர் நலனில் அக்கறை தேவை. குடும்ப அமைதி கூடும். சொந்த தொழிலமையும். கடன் உதவி கிடைக்கும். வியாபார மந்த நிலை அகலும். பணிச்சுமைகள் குறையும். தொலைத்தூர பயணம் லாபம் தரும். அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் கூடி வரும். மனைவியால் ஆறுதல் உண்டு. நிர்வாகப் பொறுப்புக்கள் கூடும். வருமானம் சேரும். உடல் உபாதை நீங்கும். கொள்கையில் பிடிப்பு ஏற்படும். கொடுக்கல், வாங்கலில் நன்மை உண்டாகும். வியாபார வளர்ச்சி உண்டு. சான்றோர்கள் வாழ்த்து கிட்டும். அடிப்படை தேவைகள் பூர்த்தியாகும். அதிகாரியின் ஆதரவு பெருகும். ஆரோக்கியம் அபிவிருத்தி அடையும். எதிரிகள் உதிரியாவார்கள். தெய்வப் பணியில் ஈடுபடுவீர்கள். கற்பனை ஆற்றல் பெருகும். பெண்களின் திறமை பெருமை தரும். அடுத்தவர் நட்பு ஆக்கம் தரும். வெளிநாட்டு வாய்ப்புத் தேடி வரும். கடன் உபத்திரவம் குறையும். அளவான பேச்சு நன்மை தரும். பிரார்த்தனைகள் நிறைவேறும். ஆபரணப் பொருள் சேரும். மாணவர்களுக்கு கல்வியில் அக்கறை தேவை. எண்ணிய காரியம் கைகூடும். வியாபாரத்தில் எதிர்பாரா லாபம் கிட்டும். நடவடிக்கையில் மாற்றம் ஏற்படும். நண்பரால் சங்கடம் நேரும். பதவியில் உயர்வு வரும். வெற்றி நிலை தொடரும்.

(தொடர்ச்சி 22 பக்கம்)

## கடந்தவையும் கடப்பவையும் – (101)

ஆமி அன்றி ஆருமில்லா அந்த இடம் - நெருப்பு
பூமி என்றே சொல்லவேண்டும் அன்றதனை

குன்றும் குழியும் உள்ள தரை - அங்கு
அங்கொன்றும் இங்கொன்றுமாய் பதுங்கு குழிகள்

சரிந்து தொங்கும் மண்மூட்டைகளும்தான் - அதற்கிடையில்
ஒழிந்திருந்து பார்ப்பவர்கள் பார்க்கவே - மந்தைகளாய்

முன்னுக்குப் போவோரைப் பின்தொடர்ந்து போகையிலே - போரினால்
என்றைக்கோ உடைந்துபோன பாலமொன்றில்

பேருந்தின் படிகளுக்காய் போடப்படும் அலுமினிய
பெருந்தகரம் பாலத்துப் பாதையாய் - அதில்

வந்தவர் அனைவருமே நடந்து போகக் கேட்கிறது
நெஞ்சதிரும் பெரும் சத்தம் அவ்விடத்தில்

அதைத்தாண்டிச் சென்று நிற்க தொடங்கியது சோதனை
எதைத் தேடினாரோ தெரியவில்லை

சல்லடைச் சோதனை முடிய வந்தன வண்டிகள் - உடைந்த
கல்லிடை இருந்த புழுதியைக் கிளறியடித்தே,

புழுதிப் புகாரில் மறைந்துபின் தெளியத் தெரிந்தது - பெயர்
எழுதாப் பேருந்து எங்களை ஏற்ற வந்ததென்று

காக்கிச் சீருடை அணிந்த அக்காமார் உள்ளிருந்து
நோக்குகிறார் ஒருகை பார்க்கப்போறோம் என்பதுபோல்

ஆண்களுக்கும் பெண்களுக்கும் வெவ்வேறு வண்டிகள்
பெண்கள் எங்களுக்கு பெண்களே பாதுகாப்பு

வளைந்து நெளிந்து நிமிர்ந்த வண்டி
நுளைந்தது மக்கள் குடிமனைகளுள் - அப்பாடா!

அப்படியொரு பூரிப்பு எல்லோர் முகங்களிலும்
எப்படியோ போர்ச்சூழல் அற்றவெரு இடம்

வெய்யிலானாலும் அமைதியான சூழலின் காற்று
மெய்சிலிர்க்க வைத்தது தென்றலாய் தவழ்ந்துவந்து

மாமரங்கள் இரண்டு அதனருகில் வகுப்பறைகள் இரண்டு
வேகமாக இறக்கி வகுப்பறைக்குள் அனுப்புகிறார்

ஐம்பதிற்கும் அதிகமான பெண்கள் ஒரு அறையில் - அங்கு
வந்தவர் அனைவருக்கும் காணாது பலர் வெளியில்

அடுத்ததில் ஆண்கள் அரைவாசிப்பேருக்கே போதாது என்பதாலோ
எடுத்த முடிவதனை மாற்றினார் போலும்

தாண்டிக்குளம் அங்கிருந்து மாற்றுதற்காய்
மீண்டும் ஏற்றுகிறார் வண்டிகளில் வேறெங்கோ

போகுமிடம் தெரியாது ஆதலினால் ஒருவித
சோகமுடன் பயணமது தொடருகையில்

பக்கத்தில் நிற்பவர்கள் பலவாறு கதைக்கும்போது
பக்குப்பக்கென்று மனமடித்துக் கொண்டதும்தான்

வெய்யில் கொஞ்சம் குறைந்தபோதும் குறையவில்லை
பொல்லாத பசியும் தாகமும் கூட

அடர்ந்த சோலையுள்ள ஓரிடத்தில்
உயர்ந்திருந்த தனித்தனிக் கட்டிடங்கள் இரண்டு

ஆண்கள் வேறு பெண்கள் வேறு என்றவாறு விட்டாச்சு
வேண்டும் ஓய்வெடுக்க ஆனாலும் முடியாது

முகம் கழுவ முயற்சித்தால் உடனடியாய் முடியாதாம் - மணிக்கணக்காய்
காத்திருக்க வேண்டும் என்றார்

காத்திருந்து முகம் கழுவி பாத்திருக்க வந்ததுதான் - வீட்டில்
பாத்துப் பாத்துச் சமைத்தாலும் சுவைதராத பருப்புக்கறி

அமுதம் என்று ஒன்று உண்டாயா? என்றுகேட்டால்
இதுவரையில் அதைத்தான் அமுதென்று சொல்லத்தோன்றும்

பாரபட்சம் இல்லாத வரிசையொன்றில் - புதிய
வருணத்து நெகிழிகளில் உணவும் நீரும்

பெற்றுக்கொண்ட அனுபவம்தான் பின்னாளில் - இங்கு
பட்டுப்பட்டென்று வரிசைகளில் நிற்பதற்கு உதவியது.......

(தொடரும்)

-- உமா மோகன் -- மொன்றியால் - கனடா --

## இராமநாதபுரம் மாவட்ட அரசுப்பள்ளியில் வகுப்பறைக் கட்டடம் கட்ட நிதியுதவி மலேசிய தொழிலதிபருக்கு கிராம மக்கள் பிரமாண்ட வரவேற்பு




இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் தாலுகா, மீசல் கிராமத்தில் சுமார் 400க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசிக்கின்றனர். இங்கு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி உள்ளது. இப் பள்ளியில் 8 ஆம் வகுப்பு வரை சுமார் 85 மாணவர்கள் படிக்கின்றனர். ஆனால் இப்பள்ளியில் போதிய வகுப்பறை வசதியின்றி மாணவர்கள் மரத்தடி நிழலில் அமர்ந்து கல்வி பயின்று வந்தனர். அரசுப்பள்ளியின் இந்நிலை குறித்து மீசல் கிராமத்தை சார்ந்தவரும், இப்பள்ளியில் படித்து மலேசியாவில் தொழிலதிபராக உள்ள டத்தோ முஹம்மது ரபிக்கு, கிராம மக்கள் தகவல் கொடுத்தனர். இதையடுத்து தமிழக அரசின் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் 19.20 இலட்சம் மதிப்பீட்டில் கட்டடம் கட்ட முடிவு செய்யப்பட்டது. இதில் தொழிலதிபர் டத்தோ முஹமம்து ரபி தனது பங்களிப்பாக 10 லட்சம் வழங்கியுள்ளார்.



இந்த நிலையில் கட்டுமான பணிகள் நிறைவு பெற்று, திறப்பு விழா நிகழ்ச்சி 19 ஜூன் 2024 புதன்கிழமை அன்று நடைபெற்றது. இந்த விழாவில் கலந்து கொள்ள மீசல் கிராமத்துக்கு வருகை தந்த, தொழிலதிபர் டத்தோ முஹம்மது ரபிக்கு கிராம மக்கள் சார்பில் ஆரத்தி எடுத்து, கும்ப மரியாதையுடன் பிரமாண்ட வரவேற்பு அளித்தனர். இதனை தொடர்ந்து புதிய வகுப்பறைக்கட்டங்களை அவர் திறந்து வைத்து ஏற்புரை நிகழ்த்தினார்.

நிகழ்ச்சிக்கு ஊராட்சி மன்ற தலைவர் தீபா நீதிராஜன் தலைமை தாங்கினார். வட்டார கல்வி வளர்ச்சி துறை அதிகாரிகள் முருகேஸ்வரி, இந்திரா காந்தி, ஊராட்சி மன்ற துணைத் தலைவர் கிளைமன், மீசல் கிராம வளர்ச்சி குழு தலைவர் செந்தூரான், ஆடிட்டர் அப்துல் ரகுமான், ஏர்வாடி மதரசத்துல் மக்தூமியா பெண்கள் அரபி கல்லூரி நிறுவனர் வருசைக் கனி ஆகியோர் முன்னிலை வைத்தனர். தலைமை ஆசிரியை அன்பரசி அனைவரையும் வரவேற்றார். அனைத்து சமுதாய தலைவர்களும் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார். மாணவ மாணவிகள் சார்பில் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது. இறுதியாக ஆசிரியர் ஜெயமுருகன் நன்றி கூறினார்.



இந்நிகழ்ச்சியில் பள்ளி மேலாண்மை குழு தலைவர் குணரேகா, இன்ஜினியர் சுதாகர், முதுகுளத்தூர் கிழக்கு ஒன்றிய திமுக செயலாளர் பூபதி மணி, ஹேப்பி குழுமம் செய்யது இப்ராகிம் கனி, வர்த்தக காங்கிரஸ் மாவட்ட பொதுச் செயலாளர் சேக் அப்துல்லா கிராம வளர்ச்சி குழு உறுப்பினர்கள், ஜமாத்தார்கள், கிராம பொதுமக்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். அதனை தொடர்ந்து கிராமத்தில் உள்ள அனைவருக்கும் மதிய உணவு, தொழிலதிபர் டத்தோ முகமம்து ரஃபி அவர்களால் வீடு வீடாக சென்று வழங்கப்பட்டது.



# பிஞ்சு உள்ளங்களில் நஞ்சு கலக்கும் சாதிய உணர்வுகளை அகற்றுவதற்கு நீதிபதி சந்துரு பரிந்துரைகளை செயல்படுத்துக!

## முதலமைச்சருக்கு உலகத் தமிழர் பேரமைப்பின் தலைவர் பழ. நெடுமாறன் வேண்டுகோள்

மாணவர்களிடம் பரவி வரும் சாதிய வன்முறைகளைத் தவிர்ப்பதற்கான அறிவுரை வழங்க அமைக்கப்பட்ட ஓய்வுபெற்ற நீதிபதி கே. சந்துரு குழு மிகச்சிறந்த பரிந்துரைகளை அளித்திருப்பதை வரவேற்றுப் பாராட்டுகிறேன். அப்பரிந்துரைகள் அனைத்தையும் செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை அளிக்கும்படி முதலமைச்சர் ஸ்டாலின் அவர்களை வேண்டிக்கொள்கிறேன்.

நீதிபதி கே. சந்துரு குழு அளித்துள்ள பரிந்துரைகளில் முதன்மையானவை வருமாறு:

1. அரசு மற்றும் தனியார் பள்ளிகளுக்குச் சூட்டப்பட்டுள்ள பெயர்களில் சாதி அடையாளத்தை நீக்குதல்.

2. பெயர் அகரவரிசைப்படி மாணவர்களை வகுப்பறைகளில் உட்கார வைத்தல். மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கும் மட்டும் விதிவிலக்கு அளித்தல்.

3. பெயர்ப் பதிவேடுகளில் மாணவர்களின் சாதி குறித்த எத்தகைய குறிப்பும் இருக்கக் கூடாது.

4. பள்ளி மற்றும் கல்லூரி ஆசிரியர்கள், நிர்வாகத்தில் பணியாற்றுபவர்கள் ஆகியோருக்கான ஒழுக்க விதிமுறைகளை வகுத்துச் செயற்படுத்த வேண்டும்.

5. ஒவ்வொரு பள்ளியிலும் அல்லது கல்லூரியிலும் சமூக நீதி மற்றும் மாணவர் படை உருவாக்கவேண்டும். தமிழக அரசின் கட்டுப்பாட்டின் கீழேயே இது இயங்கவேண்டும். அனைத்துச் சாதிகளைச் சேர்ந்த மாணவர்களும் இதில் சேர்க்கப்பட்டு சாதி, சமூகத் தீமைகளை அறவே அகற்றுவதற்கான பயிற்சி அளிக்கப்படவேண்டும்.

6. கல்வித்துறை அதிகாரிகள் மற்றும் தலைமை ஆசிரியர்கள் அவர்கள் சார்ந்துள்ள சாதியினர் பெரும்பான்மையினராக வாழும் இடங்களில் பணிகளுக்கு நியமிக்கப்படக் கூடாது.

7. கல்வி நிலையத்தின் எல்லைக்குள் அலைப்பேசிகளை மாணவர்கள் பயன்படுத்துவதற்கு முற்றிலுமாகத் தடை விதிக்கவேண்டும்.

8. 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை அனைத்துப் பள்ளிகளிலும் நல்லொழுக்க வகுப்புகள் வாரத்திற்கு ஒருமுறை நடத்தப்படவேண்டும்.

9. 500க்கும் மேற்பட்ட மாணவர்களைக் கொண்ட பள்ளிகளில் பள்ளி நல அதிகாரி ஒருவர் நியமிக்கப்படவேண்டும்.

10. சாதித் தீமைகள் அதிகமாக இருக்கும் பகுதிகள் எவை என்பதை ஆராய்ந்து முடிவு செய்வதோடு, அங்கு சாதி மோதல்கள் ஏற்படுவதை முன்னதாகவே கண்டறிய சிறப்புப் புலனாய்வுக் குழு ஒன்று அமைக்கப்படவேண்டும்.

11. தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள், மேல்நிலைப்பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சிக் கல்லூரிகளின் பாடத்திட்டத்தில் சாதித் தீமைப் பற்றிய பாடம் கட்டாயமாகச் சேர்க்கப்பட வேண்டும்.

12. சாதிய உணர்வுடன் இயங்கும் ஆசிரியர்களுக்குக் கடுமையான தண்டனை விதிக்கும் வகையில் விதிமுறைகள் மாற்றப்படவேண்டும்.

13. சாதி அடையாளத்தைக் குறிக்கும் வகையில் மாணவர்களின் கரங்களில் வண்ணக் கயறு கட்டுதல், மோதிரங்கள் அணிதல், நெற்றியில் குறியீடுகளை இடுவது, சாதிக் குறிக்கும் வகையில் வண்ணம் பூசப்பட்ட சைக்கிள்களில் வருதல் போன்ற பிஞ்சு உள்ளங்களில் நஞ்சு கலக்கும் சாதி உணர்வுகளை வெளிப்படுத்துதல் அறவே தடை செய்யவேண்டும்.

மேலும் பல சிறப்பான பரிந்துரைகளை நீதிபதி சந்துரு வழங்கியதன் மூலம் ஆயிரமாயிரம் ஆண்டு காலமாகத் தமிழ்ச் சமுதாயத்தைச் சீரழித்துவரும் சாதிப் பாகுபாடுகளை அறவே அகற்றுவதற்கும், சாதியற்றச் சமுதாயம் உருவாவதற்கும் அவர் வழிகாட்டியிருப்பது பாராட்டுக்குரியது.

ஆண்டாண்டு காலமாக சாதியின் பெயரால் மக்களைப் பிளவுபடுத்தியும், அவர்கள் மீது ஆதிக்கம் செலுத்தியும் வருபவர்களைத் தவிர, மற்ற அனைவரும் நீதிபதி சந்துரு அவர்களின் பரிந்துரைகளை ஏற்று மனமாறப் பாராட்டுவார்கள் என்பதில் ஐயமில்லை. தாமதமின்றி இப்பரிந்துரைகளை உடனடியாகச் செயல்படுத்தத் தமிழக அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுகிறேன்.



அன்புள்ள,

பழ. நெடுமாறன்
தலைவர்.

## இவ்வார ராசிபலன்

(20 பக்கம் தொடர்ச்சி)

**விருச்சிகம்:** குடும்ப கௌரவம் ஓங்கும். மற்றவர்கள் தொல்லை நீங்கும். பணவரவு அதிகரிக்கும். பரபரப்பான சூழ்நிலை மாறும். புதிய தொழில் முயற்சி வெற்றியைத் தரும். சகோதரியால் நன்மை உண்டாகும். போட்டிகள் வெற்றி தரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: கணபதி, அதிர்ஷ்ட எண்: 2,9,6,3
அதிர்ஷ்ட நிறம்: செம்மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: W,K





**தனுசு:** மனநிறைவு ஏற்படும் வாரம். இரும்புத்தொழில் ஏற்றம் தரும். கூட்டுத்தொழில் கவனம் தேவை. உறவினரால் செலவு அதிகரிக்கும். குடும்ப வளம் பெருகும். வாகன அபிவிருத்தி உண்டு. நிலம் வாங்கும் யோகம் உண்டு. கல்வியால் செலவு உண்டு. கடன் பிரச்சனை அகலும். வியாபாரத்தில் நிதானத்தோடு செயல்பட வேண்டும். புதிய வாய்ப்புக்கள் தேடி வரும். பாதகமான சூழ்நிலைகள் விலகும். சகோதர உறவு பலப்படும். சாதனைகள் ஓங்கும். பாராட்டுக்கள் தேடி வரும். பயணம் அனுகூலம் தரும். புதிய வாகனம் வாங்குவீர்கள். கடமையில் தடங்கல் ஏற்படும். காதலில் பிரிவு ஏற்படும். குடும்ப மனநிறைவு உண்டு. புதிய முதலீடுகளை தவிர்க்கவும். நிர்வாகத் திறன் அதிகரிக்கும். உத்தியோகத்தில் சலுகைகள் கிடைக்கும். சொத்துக்கள் சேரும். நல்லோர்கள் நட்பு கிட்டும். திறமைகள் வெளிப்படும். பருப்பு தானம் பாவம் போக்கும். கர்ம வினைகள் அகலும். பழைய கடன் தீரும். எதிர்ப்புக்கள் விலகும். மன வேதனை குறையும். பொருளாதாரம் உயரும். முயற்சி பலன் தரும். சுதந்திரமாக செயல்படுவீர்கள். வரவுகள் பெருகும். அலைச்சலால் அசதி ஏற்படும். தொழிலில் மாற்றம் ஏற்படும். தாய் நலனில் அக்கறை தேவை. உடன் பிறந்தோரால் உதவி உண்டு. பொருளாதர வளர்ச்சியுண்டு. முக்கிய எண்ணம் நிறைவேறும். மனைவியால் அமைதி கூடும். நட்பு வட்டம் விரிவடையும். மங்களச் செய்தி வரும். நிதிப் பற்றாக்குறை நீங்கும். முன் கோபத்தை குறைக்க வேண்டும். பழிச்சொல் தேடி வரும். மன வேதனை குறையும். உத்தியோக சோதனை ஏற்படும். இழுபறி நிலை மாறும். உறவினர்களால் பாதகம் உண்டு.
வழிபட வேண்டிய தெய்வம்: கருப்புசாமி, அதிர்ஷ்ட எண்: 2,4,9,1
அதிர்ஷ்ட நிறம்: அரக்கு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,B




**மகரம்:** இல்லம் தேடி வாய்ப்பு வரும். கூட்டுத்தொழில் லாபம் தரும். பணிமாற்றம் ஏற்படும். குடும்ப வாழ்வில் வளம் பெருகும். சோதனைகள் குறையும். தொழில் போட்டி மறையும். எதிர்பாராத நன்மை கிட்டும். தொழில் வளர்ச்சி உண்டு. கல்விச் சலுகைகள் கிட்டும். மருத்துவச் செலவுகள் கூடும். சங்கடங்கள் நிவர்த்தியாகும். காதலில் கண்ணியம் கூடும். பெரியோர்கள் விரோதம் ஏற்படும். நெருக்கடிகள் நீங்கும். அரசியலில் புகழ் கூடும். அடிப்படை தேவைகள் பூர்த்தியாகும். ஆரோக்கியம் கூடும். ஆபரணம் வாங்குவீர்கள். ஆடம்பர எண்ணம் அதிகரிக்கும். பேச்சில் இனிமை கூடும். விளையாட்டுத்துறையில் வெற்றி கிட்டும். பறவைகளுக்கு உணவளித்து பலன் பெறலாம். கலைந்த குடும்பம் ஒன்று சேரும். உடன் பிறப்புக்கள் தொல்லை தருவர். வெறுப்புக்கள் ஒழியும். பொறுப்புக்கள் கூடும். விரக்திகள் விலகும். வியாபார வளர்ச்சி உண்டு. வீண் செலவுகள் கூடும். விருந்தினர் வருகை உண்டு. மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். கால்நடைகளால் லாபம் உண்டு. அனுகூலமற்ற சூழ்நிலைகள் உருவாகும். தீய எண்ணம் விலகும். புத்திரர் வழியில் சந்தோஷம் கூடும். கமிஷன் தொழில் திருப்தி தரும். வம்பு தும்புகள் ஒழியும். கலைஞர்களுக்கு வாய்ப்பு பெருகும். விவசாய விளைச்சல் அதிகமாகும். அடுத்த நபரால் தொல்லை உண்டு. எடுத்தக் காரியம் தடைப்படும். எதிலும் நிதானம் தேவை. கலை ஈடுபாடு அதிகரிக்கும். தொழிலில் போட்டி மறையும். காதலால் மகிழ்ச்சியுண்டு. மனோபயம் நீங்கும். குதூகலம் அதிகமாகும். குளிர்பான தொழிலில் கவனம் தேவை. மதிநுட்பத்தோடு செயல்பட வேண்டும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீராமர், அதிர்ஷ்ட எண்: 9,5,4,3
அதிர்ஷ்ட நிறம்: வைலட், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,A




**கும்பம்:** தொழில் வளர்ச்சி பெருகும் வாரம். பூர்வீகச் சொத்துக்கள் கிட்டும். சகோதரியால் லாபம் உண்டு. உறவினரால் உற்சாகம் கூடும். கைப்பொருள் களவுப்போகும். சுபச்செய்தி கூடி வரும். விவசாயம் லாபம் தரும். வீடு, மனை யோகம் உண்டு. நண்பர்களால் நன்மை உண்டு. வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும். எதிர்மறை எண்ணம் உருவாகும். ஏற்றுமதி தொழிலில் லாபம் தரும். திடீர் பயணம் ஏற்படும். பிணிகள் நீங்கும். குடும்பத்தில் குதூகலம் உண்டு. காதல் எண்ணம் ஈடேறும். வாழ்வில் வசந்தம் உண்டு. ஆடம்பரச் செலவு அதிகரிக்கும். உடல் உஷ்ணம் அதிகரிக்கும். மாமூலான வளர்ச்சி பாதிக்கும். விரக்திகள் மறையும். பெண்களின் கௌரவம் உயரும். பல்வலி வந்து போகும். பிரபலங்களை சந்திக்கும் வாய்ப்பு ஏற்படும். ஆதாயம் பெருகும். எண்ணெய் நிறுவனம் ஏற்றம் தரும். தாய்வழி உறவு லாபம் தரும். எதிலும் எச்சரிக்கை தேவை. அரசாங்க அனுகூலம் உண்டு. பொன், பொருள் சேர்க்கை உண்டு. பொறாமைகள் விலகும். பொறுப்புக்கள் கூடும். வியாபார அபிவிருத்தி ஏற்படும். வெளிநாட்டுப் பயணம் உருவாகும். செல்வாக்கு உயரும். உறவினர் பகை மாறும். அந்நியர் ஆதரவு கிட்டும். கன்னிப் பெண்களின் விருப்பம் ஈடேறும். ஆன்மீக எண்ணம் அதிகரிக்கும். இயந்திர பணியில் நிதானம் தேவை. சந்தோஷமான காலம். பணிவு அவசியம். அலைபேசித் தகவல் ஆனந்தம் தரும். கலைத்தொழிலில் நிலை உயரும். பெற்றோர் ஆதரவு அதிகரிக்கும். மற்றவரால் ஏமாற்றப்படுவீர்கள். தந்தை நலன் கூடும். டிரான்ஸ்போர்ட் தொழில் லாபம் தரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: சூரிய பகவான், அதிர்ஷ்ட எண்: 3,9,6,2
அதிர்ஷ்ட நிறம்: பொன்நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,E




**மீனம்:** பொறுப்புக்களும், சிறப்புக்களும் சேரும் வாரம். பழைய நட்பு பலன் தரும். உத்தியோக அலைச்சல் உண்டு. காரிய தாமதம் ஏற்படும். திடீர் கடன் உருவாகும். உறவினரால் பாதகம் உண்டு. மனைவி உடல்நலம் பாதிக்கும். பூமியால் லாபம் உண்டு. உணவு விடுதி லாபம் தரும். புதிய வாய்ப்பு தேடி வரும். அரசு வழி ஆதாயம் உண்டு. சுபிட்ஷங்கள் பெருகும். உடல்சோர்வு ஏற்படும். பணவரவு தாமதமாகும். உணவு பிரியம் அதிகரிக்கும். ஆதலால் கவனம் தேவை. காதலில் மோதல் உண்டு. கால்நடைகளால் பலன் உண்டு. குடும்பப் பாசம் அதிகரிக்கும். உத்தியோக இடமாற்றம் ஏற்படும். உலோகத் தொழில் உயர்வு பெறும். காரியம் இழுபறியாகும். உடல் உஷ்ணம் ஏற்பட்டு மறையும். நெருக்கடிகள் குறையும். கண்ணாடிப் பொருள் சேதம் ஏற்படும். பதற்றம் குறையும். மாணவர் திறமை பளிச்சிடும். ஆண்களுக்கு ஆதாயம் உண்டு. தன்னம்பிக்கை துளிர்விடும். நிர்வாகத் திறன் கூடும். நினைத்தது நிறைவேறும். அந்தஸ்து அதிகமாகும். வாழ்க்கை வசதி பெருகும். இனிய எண்ணம் உதயமாகும். புதிய முயற்சி பலன் தரும். இயந்திர தொழிலால் லாபம் உண்டு. வழக்குகளால் தொல்லை உண்டு. வியாபார விரயம் கூடும். சுபச்செய்தி வரும். பணிச்சுமை குறையும். பூர்வீகச் சொத்து வந்து சேரும். ரியல் எஸ்டேட் தொழில் லாபம் தரும். கணவன், மனைவி கருத்து வேறுபாடுகள் அகலும். நிதி நிலைமை திருப்தி தரும். நினைவாற்றல் பெருகும். கலையார்வம் கூடும். சகோதரியால் சஞ்சலம் உண்டு. அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் உருவாகும். ஆரோக்கியம் சீராகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: காமாட்சி அம்மன், அதிர்ஷ்ட எண்: 4,6,2,1
அதிர்ஷ்ட நிறம்: கருப்பு (கருமை), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,J

# MORTGAGE FINANCIAL SOLUTIONS

- RESIDENTIAL
- CONSTRUCTION
- COMMERCIAL
- VACANT LAND
- INDUSTRIAL




## RESIDENTIAL- COMMERCIAL

- **Purchase**
  - Builder Purchase
  - MLS Purchase
  - Private Purchase
- **Refinance**
- **Renewal**
- **Equity line of Credit**

Contact Us Today

**NESAN**
*Subramaniam*
**416-908-5656**

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

1585 Markham Rd, Unit #406,
Toronto, ON. M1B 2W1
Canada

www.nesan.ca

**WE DEAL WITH ALL BANKS**

**Powered By**

MORTGAGE ALLIANCE
RIGHTBROKER=RIGHTMORTGAGE
Mortgage Agent level 1 Licence # M15001465
Mortgage Alliance, Brokerage #10330

Scotiabank · TD Canada Trust · National Bank · RFA · First National Financial LP · Manulife · Desjardins · MCAP · Home Trust · Equitable Bank · radius financial · RMG mortgages






26ம் ஆண்டில்... 26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN உதயன்

இவ்விடத்தில் விளம்பரம்

செய்ய எங்களுடன்

தொடர்பு கொள்ளவும்.

உதயம் 1472 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday June 21, 2024

# கனடா தமிழ் சமூக மையத்தின் கட்டுமானப் பணிகளை ஆரம்பிக்க, குடும்பங்களிடமிருந்து நன்கொடைகளை பெற்றுக்கொள்ளும் திட்டம்

கனடாவில் வாழும் தமிழ் மக்களின் நீண்ட நாள் கனவுகளில் ஒன்றாக தமிழ் சமூக மையத்தின் கட்டுமானப் பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன. கனடாவின் மூன்று நிலை அரசுகளின் ஒத்துழைப்புடன் முன்னெடுக்கப்பட்டு வரும் தமிழ் சமூக மைய கட்டுமானத்தில் தமிழ் சமூகமாக நாம் எமது பங்களிப்பினை வழங்குவதற்கான காலம் உருவாகியுள்ளது.

விழுதுகளாக அடையாளப்படுத்தப்படும் நிறுவுனர் குடும்பங்களிடம் இருந்து முதல் கட்ட நன்கொடைகளை பெற்றுக்கொள்ள தமிழ் சமூக மையம் திட்டமிட்டுள்ளது. இதில் இணையும் குடும்பங்கள் ஒவ்வொன்றும் தமிழ் சமூக மையத்தை உருவாக்குவதற்கு அடுத்த இரண்டு ஆண்டுகளில் 10,000 டொலரை வழங்க முடியும்.

(தொடர்ச்சி 7ம் பக்கம்)

# இராமேஸ்வரத்தில் இந்திய மத்திய அமைச்சர் ஒருவர் வந்துள்ள சமயம் புத்தளத்தைச் சேர்ந்த இருவர் படகில் சென்றமையினால் அங்கு பதற்றம்

இராமேஸ்வரத்திற்கு இந்திய மத்திய அமைச்சர் ஒருவர் வருகை தந்துள்ள சமயம் புத்தளத்தைச் சேர்ந்த இருவர் படகில் சென்று அங்கு இறங்கியமையினால் பதற்றம் ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது

புத்தளத்தில் இருந்து மீன்பிடிக்க புறப்பட்டு திசை மாறிப் பயணித்துவிட்டதாக கூறிய புத்தளத்தைச் சேர்ந்த இருவர் இராமேஸ்வரம் கடற்கரையில் நின்ற சமயம் தமிழக பொலிஸார் கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்ட இருவரும் திசைமாறிப் பயணித்ததாக தெரிவித்தபோதும் இந்தியப் பொலிஸார் இவர்கள் மீது சந்தேகம் கொண்டுள்ளனர்.

புத்தளத்தைச் சேர்ந்த இருவரும் பயணித்த படகில் எந்தவொரு மீனோ அல்லது மீன்பிடி உபகரணங்களோ காணப்படாததோடு இரு கொள்கலன்களில் எரிபொருள் காணப்படுவதனால் அவை இந்தியாவிற்கு பயணித்து புத்தளம் திரும்புவதற்கு போதுமானது என்ற அடிப்படையில் தமிழக பொலஸார் அதிக சந்தேகம் கொண்டுள்ளனர். இதன் காரணமாக கைது செய்யப்பட்ட இரு புத்தளம் மீனவர்களும் நீண்ட விசாரணையின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர்



# MRI மற்றும் CT ஸ்கேன்களுக்கான காத்திருப்பு நேரத்தை ஒன்ராறியோ அரசாங்கம் குறைக்க நடவடிக்கை என்கிறார் அமைச்சர் விஜய் தணிகாசலம்



ஒன்றாரியோ மாநிலமெங்கும் **MRI** மற்றும் **CT** ஸ்கேன் மருத்துவ சேவைகளுக்கு மக்கள் நீண்டகாலம் காத்திருக்க வேண்டிய சூழ்நிலையை தவிர்த்து அதனை 28 நாட்களாக குறைக்க ஒன்றாறியோ அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. அதற்கென ஆண்டுதோறும் 100,000 **MRI** மற்றும் **CT** ஸ்கேன்களை ஒன்ராறியோ அரசு சமூக நிலையங்களில் நிறுவவுள்ளது. என ஒன்றாரியோ மாநில அமைச்சர் விஜய் தணிகாசலம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் , "ஸ்கேன் வசதிகள் குறுகிய காலத்துக்குள் கிடைக்கச் செய்வதன் மூலம் அதிகரிப்ப ஒன்ராறியோ சுகாதாரத்தினை மேம்படுத்துகிறோம்" எனக் குறிப்பிட்டுள்ளதுடன், சரியான நேரத்தில் மதுத்துவ சேவைகள் கிடைக்க வேண்டிய முக்கியத்துவத்தையும் வலியுறுத்தியுள்ளார். இம்முன்முயற்சியானது அனைத்து மக்களுக்கும் சரியான நேரத்தில் உயர்தர மருத்துவ பராமரிப்பு கிடைக்கப் பெறுவதற்கான ஒன்றாறியோ அரசின் உறுதிப்பாட்டைக் காண்பிக்கிறது" என்றார்.



# உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் தற்காலிக அகிலத் தலைவராக நடா ராஜ்குமார் நியமனம்

உலகெங்கும் பல நாடுகளில் கிளைகளைக் கொண்டு இயங்கும் உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் தற்காலிக அகிலத் தலைவராக கனடா வாழ் நடா ராஜ்குமார் அவர்கள் நியமிக்கப்பெற்றுள்ளார். இயக்கத்தின் நீண்ட கால உறுப்பினர்களில் ஒருவரான நடா ராஜ்குமார் கனடாவின் ரொறன்ரோ மாநகரில் ஈஸட் எப்எம் 102.7 என்னும் பண்பலை வானொலியின் அதிபராக விளங்குகின்றார். அத்துடன் தமிழ் மொழி மற்றும் தமிழிலக்கியம் ஆகியவற்றிலும் ஆர்வம் கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

"தற்போது ஒரு குழப்ப நிலைக்குள்ளாகியிருக்கும் உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தை நெறிப்படுத்தி சீராக இயங்கும் வகையில் எனது பணிக்காலத்தைப் பயன்படுத்துவேன்" என்று கனடா உதயன் ஆசிரிய பீடத்திற்கு வழங்கிய செய்திக் குறிப்பில் நடா ராஜ்குமார் தெரிவித்துள்ளார்.

# ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் மன்னார் விஜயத்தால் மக்களுக்கு எவ்வித பயனும் இல்லை

## தமிழ் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரன்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் மன்னார் விஜயத்தால் மக்களுக்கு எவ்வித பயனும் இல்லை.காற்றாலை மின் உற்பத்தி மற்றும் கனிய மண் அகழ்வு குறித்து எவ்வித உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை.அரசியல் நலன் சார்ந்தே குறித்த விஜயம் அமைந்துள்ளது என தமிழ் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரன் தெரிவித்தார்.

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் 20-06-2024 அன்று வியாழன் மதியம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,,,

இந்திய பிரதமரின் இலங்கை வருகையை ஒட்டி தனது அரசியல் இருப்பை நிலை நிறுத்திக் கொள்ளும் விவகாரத்திற்காக மன்னாரிற்கான விஜயத்தை மேற்கொண்டுள்ளார்.

(தொடர்ச்சி 4ம் பக்கம்)

